27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
Jey Ahamparam
416 301 1733
(for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27 | பாலம் 18 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 15, 2017

# கனேடிய அரசின் புதிய வருமானவரிச் சட்டத்திருத்தம்

கனேடிய அரசின் இலை உதிர்கால நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 2017 செப்ரெம்பர் 18இல் ஆரம்பமாக உள்ளது. கனேடிய மத்திய அரசின் நிதி மந்திரி Bill Morneau கடந்த யூலையில் அதிக வருமானம் உள்ளவர்கள் கனேடிய அரசின் வருமானவரிச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் (loopholes) பாவித்து குறைந்த வருமானவரி கட்டுவதைத் தடுக்கும்முகமாக இந்த அரசு இவ் ஓட்டைகளை அடைக்கும் வருமானவரிச் சட்டங்களைக் கொண்டுவரும் என்று தெரிவித்திருந்தார்.



இச்சட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுடன் கலந்து ஆலோசிக்க 75 நாட்களை அரசாங்கம் ஒதுக்கியிருந்தது. அந்தக்கால எல்லை 2017 ஒக்ரோபர் 02 உடன் முடிவடைகிறது. இது தொடர்பாக மத்திய அரசு பழமைவாதக் கட்சியினரிடம் இருந்தும், பணக்கார வர்த்தகர்கள், அதிக சம்பளம் எடுக்கும் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் இருந்தும் போதியளவு முறைப்பாடுகளை இதுவரை கேட்டுள்ளது. அது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பித்ததும் தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இது தொடர்பாகக் கருத்துத்தெரிவித்த கனேடியப் பிரதம மந்திரி ஜஸ்டின் ரூடோ தமது அரசின் புதிய வரி சட்டத்திருத்தங்களுக்காக எந்தவிதமான மன்னிப்பையும் தாம் கேட்கத்தயாரில்லை என்றும் அது நிச்சயமாக நியாயமற்ற முறையில் வரி கட்டுவதில் நலனைப் பெறும் அதிகவருமானம் உள்ளவர்களை மட்டுமே பாதிக்கும் எனவும் கூறியுள்ளார்.

இந்தப்புதிய வருமானவரிச்சட்டம் தற்போதுள்ள வருமான வரிச் சட்டத்தில் இருக்கும் மூன்று முக்கியமான ஓட்டைகளை அடைக்க முயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவதாக 'வருமானத்தைத்தெளித்தல்' எனப்படும் Income Sprinkling முறையைத் தவிர்த்தல். தற்போதைய வருமானவரிச் சட்டம் அதிகவருமானம் உள்ள நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்களது வரி வீதத்தைக் குறைக்கக் குறைந்த வருமானவரி கட்டும் குடும்ப அங்கத்தினர்களுடன் தங்கள் வருமானத்தைப் பிரிக்க அனுமதிக் கிறது. இதன்மூலம் $220,000 வருட வருமானம் உள்ள நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் வருமானத்தைக் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்வதன் மூலம் $35,000 வருமானவரி கட்டுவதைத் தவிர்க்க முடியும். அரசு முதலில் இவ்வாறான வருமானத்தை வயது வராத இளம் பிள்ளைகளுடன் பகிர்ந்து 'Kiddie tax' என அழைக்கப்படும் குறைந்த வருமானம் கட்ட முயல்வதைத் தடுக்கும்.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying - Leasing - Renting - Selling
A name you can trust
RUTH VIJENDRAN
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
1% LISTING COMMISSION
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage

DENTAL OFFICE
Dr.Iru Vijayanathan,
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

JENA GULASINGHAM
416.702.2030
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc.


$544,900
Whitby- Detached Link
Cochrane & Roseland, BR:3, WR:2, Premium 154' lot. Inground pool
$699,000
Detached 1 1/2 Storey- Warden & Lawrence, BR:3+1, WR:2, 43 x 125' lot. Finished Basement
$598,000
Detached Backsplit 3
Sheppard & Neilson
RENOVATED BR: 3+1,WR: 3
Fin. Bsmt, Sep. Ent.
$615,000
Detached Bungalow
Scarb. Golf Club Rd & Ellesmere. BR: 3+2 WR:2
Fin.bsmt, Sep. Ent
$452,900
Detached Backsplit 3
Ajax- Westney & Finley
BR:3, WR:2, Fin.Bsmt Sep. Ent.
Priced to Sell
$924,900
Oshawa-Detached, 1 Year New
2,966 Sq. Ravine lot BR:4 WR: 5, W/O Bsmt
Builder Price Over $1,050K (same Model)
FINANCING AVAILABLE
$659,900
RENOVATED - Scarborough
Bellamy & Eglinton. Semi-Detached
Fin. Bsmt, Sep. Ent. BR: 3+2, WR: 3
FINANCING AVAILABLE
$739,000
FINANCING AVAILABLE
Brampton-Detached
Fin. Basement BR: 3+1, WR: 3
PRICE REDUCED BY 65K
RENTAL, COMMERCIAL, RETAILS & INVESTMENT PROPERTIES ARE ALSO AVAILABLE
15 YEARS OF BUSINESS EXPERIENCE
NOT ENOUGH DOWN PAYMENTS?
CALL ME FIRST.
NO MORTGAGE BROKER FEE
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-In-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
FREE HOME STAGING
Up to $3000 Value, Including Furniture Rental
PROVIDED BY:
EMOH HOME & DESIGN
Sangeetha Kanesathas USC™
Certified UltimateStager™
Certified UltimateStager & ReDesigner
USC
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intented to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.


Unique HVAC Inc.
Heating & Cooling
Residential & Commericial HVAC Services
உங்களது உபகரணங்களின் தரத்தை உறுதிப்படுத்த இதோ ஒரு அரிய சந்தர்ப்பம் 50% கழிவு விலை $39.99
உங்களது உபகரணங்களின் தரத்தை சரிபார்த்தால் ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதோடு பாதுகாப்பாக வேலை செய்கிறது என்பதையும் உறுதிப்படுத்தலாம்
WHAT WE DO:
• BBQ Gas Line • Fire Place
• Humidifiers • Air Cleaners
• Air Conditioners • Furnaces
• Water Heater - Tank / Tankless
• Natural Gas Dryer • Electrical Services
Let Us Keep You're Family Safe From The Dangers Of Carbon Monoxide And High Bills!
WATER TANK RENTAL STARTING FROM $17.49
SIX MONTHS FREE RENTAL!
Purchase an Air Conditioner and Furnace Together and Save Big!
COMBO SPECIAL $3100
FURNACE BY ITSELF $2199
உங்கள் மின்சார, GAS கட்டணங்கள் உயர்ந்து விட்டதா?
குளிர் காலம் தொடங்கும் முன்பும்.
வெயில் காலம் தொடங்கும் முன்பும்.
எம்மை அழைத்து உங்கள்
உபகரணங்களின் தரத்தை
உறுதி படுத்திக்கொள்ளுங்கள்.
உங்களது உபகரணங்கள் தகுதிவாய்ந்த தொழில் நுட்ப வல்லுனரால் சரி பார்க்கப்பட்டதா ?
Vino (647) 989-4217
Kapilan (647) 981-5224
Thano (416) 543-5125
www.uniquehvacinc.com
uniquehvac.inc@gmail.com
www.facebook.com/uniquehvacinc

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மத்திய அரசு கொண்டு வரவுள்ள புதிய வருமானவரிச் சட்டத்தின் மூலம் இவ்வாறு வருமானத்தை அவர்களது வயது வராத இளம் பிள்ளைகளுடன் பகிர்ந்தாலும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் 'Dividend Income' இற்கு உரிய அதிகூடிய வருமானவரி (தற்போது 35%) கட்ட வேண்டும்.

இது அதிக வருமானம் உள்ள ஒரு நிறுவன உரிமையாளர் தமது நிறுவனக் கட்டமைப்பைப் பயன்படுத்தி (Corporate Structure) வரி ஆதாயத்தைப் பெறுவதைத் தவிர்க்கும் என நிதி மந்திரி ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் அதிக வருமானம் உள்ளவர்கள் தற்போதைய ஆடம்பரமான கணக்குத் திட்டங்களைப் (Fancy Accounting Schemes) பாவித்துத் தகுந்த வருமானவரி கட்டுவதை தவிர்ப்பதை நீக்குவதன் மூலம் கனேடியர்கள் தமது வரிச்சுமை குறையும் என எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு நியாயமான வரி அமைப்பு வேண்டும் என்று கூறுகிறார்கள் என்றார்.

இரண்டாவதாக இந்தப் புதிய வருமானவரிச் சட்டம் ஒருவர் தமது நிறுவனத்தின் உண்மையான வருமானத்தை மூலதன ஆதாயம் (Capital Gains) எனக்காட்டி குறைந்த வருமானவரி கட்டுவதைத் தடுக்கும். தற்போது 50% ஆன மூலதன ஆதாயம் மட்டுமே தனியார் வருமானவரியாக குறைந்த வீதத்தில் அறவிடப்படுகிறது. இவை உண்மையில் Dividens ஆக அதிக வருமான வரிவீதத்தில் வரிகட்டப்பட வேண்டிய வருமானம் ஆகும். வருமான வரிச் சட்டத்தில் உள்ள இந்த ஓட்டையை தற்போது பெரும்பான்மையான நிறுவன உரிமையாளர்கள் பாவித்து வருகின்றனர்.



இத்திட்டத்திற்கு புதிய ஜனநாயகக்கட்சி தனது ஆதரவை முற்றுமுழுதாக வழங்குகிறது. புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் Erin Weir கருத்துத் தெரிவிக்கையில் பல பணக்கார நிறுவனங்களின் உரிமையாளர்கள் பல காலமாக இந்த வருமானவரிச்சட்டத்தில் உள்ள ஓட்டையைத் தமக்குச் சாதகமாகப் பாவித்து வருகிறார்கள். தற்போதைய அரசின் நிதி மந்திரியின் இந்த முயற்சியைத் தாம் பாராட்டுவதாகவும் அவர் இன்றும் ஒருபடி மேல் சென்று மூலதன ஆதாயவரியை 50% மூலதன ஆதாயத்திற்கு மட்டும் என்று இல்லாமல் 75% மூலதன ஆதாயத்திற்கு வரி கட்ட வேண்டும் என மாற்ற வேண்டும் என்றார்.

மூன்றாவதாக இந்தப் புதிய வருமானவரிச் சட்டம் ஒருவர் தமது நிறுவனத்தின் உண்மையான வருமானத்தை மீண்டும் அந்நிறுவனத்தில் முதலிடாமல் வேறு பங்குகளில் (Stocks) முதலிட்டு செயலற்ற வருமானம் எனப்படும் 'Passive Income' பெறும் முறைக்கும் தகுந்த வருமானவரி அறவிடும். இவ்வாறு Passive Income பெறுவதற்காக முதலிடுவதன் மூலம் தனது நிறுவனத்தின் வரியைக் குறைவாகக் கட்டலாம். இதன் மூலம் அவர்களது பங்குகளில் முதலிடப்பட்ட பணத்திற்கு வரி அறவிடப்படுவது பல வருடங்களுக்குப் பிரிக்கப்படவும் பின் போடப்படவும் உதவுகிறது.

தமது நிறுவனத்தின் வருமானத்தை அந்நிறுவனத்தில் மீண்டும் முதலிடுவதன் மூலம் அந்நிறுவனத்தை விருத்தி செய்யவும் மேலதிக ஆட்களை வேலைக்கு அமர்த்தவுமே இந்த முதலிடும் பணத்திற்கான வரிவிலக்கு, நிறுவனத்தின் வரிக்கு வழங்கப் படுகிறது. ஆனால் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் அந்த வருமானத்தைத் தமது நிறுவனத்தில் மீளவும் முதலிடாமல் அதிக அளவு வருமானம் ஓய்வுக் காலத்தில் பெறுவதற்காக இவ்வாறு பங்குகளில் முதலிட்டுக் கொண்டு தமது நிறுவனத்தின் வரிவிலக்கையும் பெறுகிறார்.

பழமைவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் Gerald Deltell தமது கட்சியினர் இந்தப் புதிய வருமானவரிச் சட்டத்தினை ஆய்வு செய்வதாகவும் இது தொடர்பாக மேலதிக கலந்துரையாடல்களில் ஈடுபடப் போவதாகவும் கூறியுள்ளார். தாங்கள் சிறிய வணிக நிறுவனங்களின் உரிமையாளர்களை பொய் கூறுபவர்கள் போல் அரசு நடத்துவதை விரும்பவில்லை என்றார். பழமை வாதக் கட்சி சிறிய வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள் அதிக அளவில் தண்டிக்கப்படுவதையும் விரும்பவில்லை என்றார்.

கனேடிய மத்திய அரசின் நிதி அமைச்சர் Bill Morneau ஊடகவியலாளர்களுக்குத் தமது நிறுவனத்தின் வருமானத்தை 'Passive Income' எனப்படும் வேறு பங்குகளில் முதலிடுவதற்குத் தமது நிறுவனத்தில் மீண்டும் முதலிட அரசு வழங்கும் வரிவிலக்கை உபயோகிப்பவர்களைப் பற்றித் தெரிவிக்கையில், புதிய வருமான வரிச்சட்டம் $144,000 இற்கு உட்பட்ட வருமானம் உள்ளவர்களைப் பாதிக்காது என்றார். ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் தமது முதலீடுகளை RRSP மற்றும் TFSA இல்தான் சேமிக்கிறார்கள் என்றார்.

தற்போதைய நிதிமந்திரி Bill Morneau சொந்தமாகப் பல தொழில் நிறுவனங்களை நடத்திக் கோடீஸ்வரர் ஆனவர். அவர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில் தான் தொழிலில் மிகவும் வெற்றியாளராக வருவதற்கு தற்போதைய நிறுவனங்களுக்கான வரிச்சலுகை முறைகள் பலவற்றைப் பயன்படுத்தியிருக்கிறேன். தான் கொண்டுவரும் புதிய வருமானவரிச்சட்ட மூலம் தனது நிறுவனங்களும் இச்சலுகையை இனி உபயோகிக்க முடியாது. அந்நிறுவனங்களும் மேலதிக நிறுவன வரியை இனிமேல் கட்ட வேண்டும் என்றார். ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தான்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)




# நாமும் நமது இல்லமும் - 495

## வட்டி வீதம் மீண்டும் அதிகரிப்பு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969

நீண்ட காலமாக எதிர்பார்த்த வட்டி வீத அதிகரிப்பு இந்த வருட 2017 யூலையில் ஏற்பட்டிருந்தது. கால் வீதம் (1/4%) அதிகரிப்பு யூலையில் ஏற்பட்டது. ஏற்கனவே அடமானக்கடன் பெறுவதில் இறுக்கநிலை காணப்பட்டது. இத்துடன் முதலாவது வட்டி வீத அதிகரிப்பு நிலைமையை மேலும் கடினமாக்கியது. எதிர்பாராததாக இவ்வருடத்தின் இரண்டாவது வட்டி வீதம் அதிகரிப்பு செப்ரெம்பர் 06, 2017 இல் மேலும் ஒரு கால் வீதம் (1/4%) அதிகரிப்பை கனடிய மத்திய வங்கி ஏற்படுத்தியது. இதனால் மத்திய வங்கியின் வட்டிவீதம் 1% ஆகக் காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து நிதி நிறுவனங்களும் தமது முதன்மை வீதத்தை 2.75% இலிருந்து 3.20% ஆக அதிகரித்துள்ளன. இவ்வித மாற்றங்களால் line of credit variable mortgage போன்றவற்றின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்கனவே இருந்த மாதாந்தக் கொடுப்பனவும் அதிகரித்துள்ளது. ஏற்கனவே அளவாக மாதாந்தக் கொடுப்பனவு செய்தவர்களின் நிலைமை சிக்கலாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதிதாக அடமானக்கடன் பெறுபவர்களின் நிலைமையும், ஏற்கனவே இருந்தது போலல்லாமல் இறுக்கப்பட்டுள்ளது. ஆதனம் வாங்குபவர்களின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படலாம். ஏற்கனவே ஏப்ரல் 2017 இல் உச்சத்தில் இருந்த வியாபாரமும், ஆதன நிலையும் இறக்கத்தை காணத்தொடங்கியதனை விளம்பர தொடர் வாசகர்கள் அறிவீர்கள். ஏப்ரல் தொடக்கம் இதுவரை வியாபாரம் மந்தமாகவே காணப்படுகின்றது. செப்ரெம்பர், ஒக்ரோபர், நொவம்பரில் ஆதன வியாபாரம் சமநிலையை பேணலாம் சில ஆய்வாளர்களால் எதிர்பார்க்கப்பட்டது. கடந்த இரு வட்டி வீத அதிகரிப்பும் இம் மனநிலையை மாற்றி இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் வியாபாரம் சமநிலையை அடையாமலிருப்பின் இதனை அடுத்த வருட இளவேனிற்காலத்தில் தான் எதிர்பார்க்கலாம். %? இடைக்காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளே இந்நிலைமையின் முடிவைத் தீர்மானிக்கும்.

ஏப்ரல் 2017 இலிருந்து அதிகூடி விலையிலிருந்து இதுவரை சராசரியாக 20% இறக்கம் ஏற்பட்டதாகக் கொள்ளலாம். (குறிப்பிட்ட பகுதிகளில், சில மாற்றங்களும் உண்டு) ஒருசில பொருளாதார ஆய்வாளர்களும் இவ்வருடம் மேலும் வட்டி வீத அதிகரிப்பு ஏற்படலாம் என்ற எண்ணக்கருவையும்



வெளிப்படுத்தியுள்ளனர். இது நடக்குமாயின் அடமானக்கடன் பெறுவதில் மேலும் நெருக்கடி ஏற்படலாம். ஆனால் பெரியளவிலான விலை இறக்கம் (CRASH / BURST) ஏற்படாது என்பதில் ஆய்வாளர்கள் ஒரே கருத்தைக் கொண்டுள்ளார்கள்.


ஆதன வியாபாரத்தில், வேறு ஒருவிதமான மாற்றத்தை அண்மைக்காலங்களில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனை விளம்பர வாசகர்கள் அறிவது நல்லது. ஏப்பிரலில் இருந்து இதுவரை செப்ரெம்பர் 15, 2017 வீட்டு விலை வியாபாரம் இறங்கிய போதிலும் அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் அதிகரித்திருப்பதனைக் காணக் கூடியாதாக உள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை நடைபெற்ற புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதன வியாபாரத்தில் 75% ஆனவை அடுக்குமாடி மனைகள். Stacked town House போன்றவையே. அத்துடன் ஒரு சதுர அடி (Square feet) அடுக்குமாடி மனையின் விலையும் அதிகதரித்துள்ளது. ஒரு வருடத்தில் சராசரியாக 30% இற்கு மேலாக அதிகரித்துள்ளது. வாடகையின் பெறுமதி அதிகரிப்பு, முதல் தடவை வாங்குபவர்களுக்கு அடுக்குமாடி மனை வாங்குவதே இக்கால கட்டத்தில் வசதியாக இருக்கின்றது அத்துடன் இன்றைய கால கட்டத்தில் அடுக்குமாடி மனை வாங்குபவர்களில் பலர் தாம் அங்கேயே குடியேற இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

---

# முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் நினைவாக மரக்கன்று நடப்பட்டது

மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் பிறந்த நாள் 04-09-2017 திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது.




தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் சமூகசேவையாளருமான திரு.பொ. கனகசபாபதி அவர்களின் பிறந்ததினம் ரொறன்ரோவில் உள்ள மல்வேன் பூங்காவில் (செப்ரெம்பர் 4 ஆம் திகதி 2017) கொண்டாடப்பட்டது. அவரை கௌரவிக்கும் முகமாகவும் அவரின் நினைவாகவும் மல்வேன் நூல் நிலையத்திற்கு அருகே உள்ள மல்வேன் பூங்காவில் கென்ரகி கொபி மரக்கன்று (Kentucky Coffee tree) நடப்பட்டிருக்கின்றது.

இங்கு அவரின் நண்பர்களினாலும், அவரிடம் கல்வி கற்ற மாணவர்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட தேனீர் உபசாரத்தில் பலரும் பங்கேற்று உரையாற்றினர்.

இயற்கை தந்த மரம் செடி கொடிகளையும் நேசித்த அவரின் நினைவாக இருக்கை ஒன்றும் இந்த மர நிழலில் அமைய இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் இதே நாளில் அவரைக் கௌரவிக்கும் வகையில் இந்த இடத்தில் ஒன்று கூட விரும்புவதாகப் பங்கு பற்றியவர்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.



கல்விக்கு முதலிடம் தந்த அதிபர் கனகசபாபதி அவர்களின் நினைவாக ஏற்கனவே தமிழ் கூட்டுறவு இல்லத்தில் நூலகம் ஒன்றும் இடம் பெற்றிருக்கின்றது.

தமிழர்கள் அதிகமாகப் புலம் பெயர்ந்த கனேடிய மண்ணில் அடுத்த தலைமுறையினரிடம் தமிழ் மொழியைக் கொண்டு சேர்ப்பதற்கு அவர் ஆற்றிய தொண்டு என்றும் மறக்க முடியாது என்று கவிஞர் கந்தவனம் அவர்கள் தனது சிற்றுரையில் குறிப்பிட்டார்.



தொடர்ந்து திரு. குமார் புனிதவேல், எழுத்தாளர் குரு அரவிந்தன், மற்றும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் சிற்றுரையும் அங்கு இடம் பெற்றது.

FREE REAL ESTATE CLASSES START EVERY WEEK
• Office open 7 days • 9:00 am - 9:00 pm
• Over 5,000 Sqft. office • Conveniently Located in GTA Square Mall
An experienced Manager to provide classes with the most advanced and up-to-date education and training.
To Join Free Real Estate Classes Please Call : 416.321.6969
HomeLife/GTA Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



மற்றும் உங்கள் அனைத்து விதமான

மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO

$100,000*

Everyone Who Funds A Mortgage With US

Ask How !

*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



வோக் இன்

சனி 9.00 - 5.00 மணிவரை

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP

Team Leader / Mortgage Agent / Real Estate Broker

FSCO Lic # M 09001428

Cell : 416-624-4843

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# ஜெகத் ஜெயசூரிய மீதான குற்றச்சாட்டுக்களும், சரத் பொன்சேகாவின் கருத்துக்களும்!

-விகிர்தன்

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது போர்க்குற்றம் புரிந்ததாகக் குற்றம் சுமத்தப் பட்டு, முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய மீது பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும், ஜெகத் ஜெயசூரிய தொடர்பில், முன்னாள் இராணு வத் தளபதியும் தற்போதைய அமைச்சரு மான சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்துக்களும் அரசியலில் தற்போது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளன.

பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவர் ஜென ரல் ஜெகத் ஜெயசூரியாவிற்கு எதிராக பிரேசிலில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் போது வன்னிப் பகுதியில் இராணுவத்திற்கு தலைமை வகித்தவர் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய. அவர் பிரேசில் நாட்டிற்கான தூதுவராக பணியாற்றினார். கொலம்பியா, பெரு, ஆர்ஜென்டீனா, சிலி உட்பட ஐந்து நாடுகளில் அவருக்கு இராஜதந்திர பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

அவர் இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் சித்திரவதைக்கு உள்ளான 14 பேர் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில், சர்வதேச உண்மை மற்றும் சமாதானத்திற்கான திட்ட அமைப்பு தென் அமெரிக்காவில் உள்ள மனித உரிமை அமைப்பு ஒன்றின் ஊடாக, பிரேசிலில் அவருக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளது. இதனை தொடர்ந்து, உடன-டியாக பிரேசில் தூதுவரான ஜெகத் ஜெய சூரிய தலைமறைவானார். இந்த வழக்கு ஒரு ஆரம்பம் மட்டுமே என இந்த வழக் கில் ஆஜரான, சட்டத்தரணி கார்லஸ் கஸ் ரெஸ்னா பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சியில் பெரும் பங்கு வகித்த, ஐ.நாவிற்கான முன்னாள் நிபுணர் ஜஸ்மின் சுக்கா மற்றும் ஊடகவியலாளரான பிரான் சிஸ் ஹரிசன் ஆகியோர், இதுபோன்ற வழக்குகள் சிலி, பெரு மற்றும் ஆர்ஜென் டீனா ஆகிய நாடுகளிலும் தொடரும் என தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இறுதிக் கட்டப் போரின் போதும் அதற்கு பின்னரும் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறிய சம்பவங் களுடன் தொடர்புடைய படைத்தளபதிகள் மற்றும் அரசியல் தலைமைத்துவங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என்று சர்வதேச நீதிக்கும் நியாயத்திற்குமான தலைவரான ஜஸ்மின் சூக்கா சூளுரைத்துள்ளார்.

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக தெரிவி த்துள்ள ஜெகத் ஜெயசூரிய, இறுதிக்கட்ட மனிதாபிமான நடவடிக்கையின் போதுதான் போர்க் குற்றங்களுக்கு அனுமதி வழங்கிய-தாகக் கூறப்படுவது உண்மையில்லை என்று கூறுகின்றார். போர்க் குற்றச்சாட்டு களுக்கு சிறிலங்காவின் முன்னாள் இராணு வத் தளபதி சரத் பொன்சேகாவே பொறுப் புக் கூற வேண்டும் என்றும் ஜெகத் ஜய சூரிய தெரிவித்துள்ளார்.



பிரேசிலில் போர்க்குற்ற வழக்கை எதிர் கொண்டுள்ள அவர், கொழும்பு திரும்பிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளி யிட்டபோதே இதனைத் தெரிவித்துள்ளார். தனக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை நிராகரித்த ஜெனரல் ஜெயசூரிய, இந்தக் குற்றங்களுக்கு தான் உதவியதாக கூறப் பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் என்றும் கூறியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு யாராவது பொறுப்பேற்க வேண்டும் என் றால், அந்தப் பொறுப்பு சரத் பொன் சேகாவிற்கே உள்ளது. ஏனென்றால் அவர் தான் அப்போது இராணுவத் தளபதியாக இருந்தார் என்றும் ஜெனரல் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜெகத் ஜெயசூரிய தன் மீதான குற்றச் சாட்டை மறுத்துவிட்டு பேசாமலிருந்திருந் தால் பிரச்சினை வந்திருக்காது. போர்க் குற்றச்சாட்டுகளுக்கு போரை வழிநடத்திய சரத் பொன்சேகாவே பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிட்டதுதான் சிக் கலை ஏற்படுத்தியது. சரத் பொன்சேகா விற்கு இது பெரும் கோபத்தை ஏற்படுத்தி யது. தனது பிரதான எதிரிகளான மஹிந்த ராஜபக்ஸ மற்றும், கோட்டாபய ராஜபக்ஸ ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவராக ஜெகத் ஜெயசூரிய இருப்பதும் இந்தக் கோபத்திற்கு மற்றுமொரு காரணமாக இருக்கலாம்.

ஜெகத் ஜெயசூரிய போர்க்குற்றச் செயலில் ஈடுபட்டதற்கான சாட்சிகள் தன்னிடம் உள் ளதாகவும் ஜெயசூரிய வவுனியாவிலுள்ள படைப் பிரிவில் செயற்படும் போதும், இராணுவத் தளபதியாக செயற்படும் போதும் குற்றம் செய்துள்ளார் எனவும், இது தொடர்பில் இடம்பெறும் வழக்கு விசாரணையின் போது தான் சாட்சி வழங்கத் தயாராகவுள்ளதாகவும் சரத் பொன்சேகா கூறினார்.

அது மட்டுமன்றி, வெலிக்கடை சிறைச் சாலை மற்றும் ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களின் போது இரா ணுவ வீரர்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டது முன் னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெய சூரியவே என்றும் சரத் பொன்சேகா தெரி வித்துள்ளார். வடக்கிலும் தெற்கிலும் இடம் பெற்ற பல குற்றச் செயல்களுக்கு ஜெகத் ஜெயசூரியவே காரணம் என்றும், இது தொடர்பாக சாட்சியளிக்க தான் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வெலிக்கடை சிறைச்சாலை அசம்பாவிதத்தில் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. நட்டஈடு வழங்குவதாயின் அங்கு குற்றம் நடந்துள் ளது என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள் ளது. எனவே, அந்தக் குற்றத்தை இழைத் தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் இக்கருத்துக்கள் இன்று பெரும் சர்சைக்குள்ளகியுள்ளதோடு அவருக்கு எதிராக போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மஹிந்த தரப்பினர் இந்த ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்ட படை-டயினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்றும், வெளியார் இதில் தலையிட இடமளிக்கப்போவதில்லை என் றும் அரசாங்கத் தரப்பினரும் தெரிவித்து வரும் நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகி யோருக்கும் சரத் பொன்சேகாவின் கருத் துக்கள் சிக்கலையே ஏற்படுத்தியுள்ளன.

இது சரத் பொன்சேகாவின் தனிப்பட்ட கருத்து எனவும் அவர்களிடையே காணப் படும் முரண்பாடுகள் காரணமாகவே இவ் வாறான கருத்தை பொன்சேகா வெளியிட்டு ள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித் துள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் இது குறித்து சரத் பொன்சேகாவுடன் உரையா டுவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், சரத் பொன்சேகா கூறும் கருத்து க்களின் அடிப்படையில் முன்னாள் இராணு வத்தளபதி போர்க்குற்றம் செய்திருப்பது உண்மையாக இருந்தால் அது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்ற குரல்களும் இலங்கைக்குள் ஒலிக்கின்றன.

சர்வதேச நீதிமன்றத்தில் சாட்சி வழங்கு வதற்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்வந்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பு அவருடன் இணைந்து செயற்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு பொன்சேகா முன்னால் வந்து உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார். போர்க் குற்றச்சாட்டு குறித்து கலப்பு நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் தேவை என்பதையும் அவர்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 9



குரு அரவிந்தன்

**கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.**

கனடாவில் முதற்குடி மக்கள் வாழ்கின்ற பிரிட்டிஸ் கொலம்பியா பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ இன்னமும் பரவிக் கொண்டு தான் இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் கோடை காலத்தில் அதிக வெப்பம் காரண மாக இப்படியான தீ விபத்துக்கள் முதற் குடி மக்கள் வாழும் பகுதியில் ஏற்படுவது சாரதரண நிகழ்வாகவே இருக்கின்றது. இப்பகுதிகளில் வாழும் முதற்குடி மக்களு க்குக் காலாகாலமாய் பழகிப்போன தொன் றாகவும் இந்தக் காட்டுத்தீ இருக்கின்றது. இத் தீ ஏற்படுவதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று இயற் கைக் காரணங்கள் முக்கியமாக மின்னல் தாக்குதலாலோ அல்லது உயரத்தில் இரு ந்து கற்கள் விழும்போது உராய்வதாலோ ஏற்படுவது. கற்கள் மேலிருந்து உருண்டு விழும்போது சில சமயங்களில் காய்ந்த சருகுகள் தீப்பற்றிக் கொள்வதுண்டு.



மற்றையது யாராவது புகைபிடித்து விட்டு அதை அணைக்காமல் அலட்சியமாக எறி வதால் ஏற்படுவதாகும். சென்ற வருடம் நடந்த மொத்த காட்டுத் தீயில் 565 தீவிபத் துக்களுக்கு மனிதரே காரணமாக இருந்த னர். இவ்வருடம் இதற்கான செலவுக்காக நிர்வாகத்தினர் முற்கூட்டியே 63 மில்லியன் டொலர்வரை ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் அது எதிர்பாராமல் மூன்று மடங்காக அதி- கரித்து 309 மில்லியன் டொலர்வரை இது வரை செலவாகியிருக்கின்றது. காரணம் கிட்டத்தட்ட 1026 இடங்களில் இதுவரை காட்டுத்தீ பரவியிருந்தது. பிரிட்டிஷ் கொல ம்பியா பகுதியில் மட்டும் சுமார் 8950 சதுர கிலோ மீட்டர் பரப்பளவான இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கறிபோ (Cariboo) பகுதியில் மட்டும் 6700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பாதிக்கப் பட்டிருக்கின்றது. இந்தக் காட்டுத்தீ காரண மாக இடம் பெயர்ந்தவர்களில் சுமார் 10,000 பேர்வரை இன்னமும் தங்கள் இடத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை. காட்டுத்தீ காரணமாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று இப்பகுதியில் நீண்ட காலமாக வாழும் நாஷ்கோ முதற்குடியினர் (Nazko first Nation) கருதுகின்றனர். கார ணம் மூஸ், மான், சல்மன் மீன் போன்ற உணவுகளையே அவர்கள் காலா காலமாய் நம்பி இருப்பது மட்டுமல்ல, இந்த உணவு கள் மூலமே முக்கியமான ஊட்டச்சத்தை அவர்கள் பெற்றுக் கொள் கின்றார்கள். காட்டுத்தீயால் மிருகங்கள் அழிக்கப்படும் போது, இப்பகுதியில் வாழும் முதற்குடி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களில் இது வும் ஒன்றாக இருக்கின்றது. பல காட்டுக் குதிரைகள்கூட இந்தக் காட்டுத்தீயால் இறந்து போயிருக்கின்றன. கனடாவில் நகரப் பகுதிகள் வெகு வேகமாக முன்னே றிக் கொண்டிருந்தாலும், முதற்குடி மக்கள் வாழும் பகுதிகளில் இதுவரை அதிக முன்னேற்றம் காணப்படவில்லை. இதன் பின்னணியில் பல காரணங்கள் இருக்கின்றன.

வான்கூவரில் ஸ்ரான்லி பார்க் புறோக்ரொன் பொயின்ற் (Brockton Point) என்ற இடத்தி ற்குச் சென்றபோது ரோரெம் போல்ஸ் என்று சொல்லப்படுகின்ற வேலைப்பாடுகள் அமை ந்த தூண்களைக் காண முடிந்தது. அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக வும் இது இருக்கின்றது. இந்தப் பூங்கா முன்பு முதற்குடி மக்களின் வதிவிடமாக இருந்தது. இங்கே உள்ள ஒருவகை செடி யின் இலை (Frog Leaf ) காயங்களுக்கு மருந்தாக முன்னோர்களால் பாவிக்கப்பட் டது. அந்த இலைகளைப் பார்த்தபோது எம்மூரில் இருந்த மூலிகைகளான பன்னை, ஆமணக்கு, கற்றாழை, வெட்டுக்காயப் பூண்டு போன்றவற்றின் ஞாபகம் வந்தது. பலர் இங்கே இருந்த ரோரெம் தூண்களு க்கு முன்னால் நின்று படங்கள், செல்பி



எடுத்துக் கொண்டிருந்தனர்.

ரோரெம் போல்ஸ் பற்றிய சில தகவல்ளை அங்கே அறிந்து கொள்ள முடிந்தது. வீட்டி ற்கு முன்னால் நடப்பட்டிருக்கும் ரோரொம் தூண்கள் அந்த இனத்தையோ அல்லது அவரது தகுதியையோ அடையாளப்படுத்து வதாக இருக்கும். முதற்குடி மக்களில் Kwakwaka'wakw இனத்தவர்களின் ரோரெம் தூண்களில் உள்ள உருவங்களின் கண்கள் ஒடுங்கியனவாகவும், உருவங்கள் தூணில் இருந்து வெளியே நீட்டி நிற்பன வாகவும் இருக்கின்றன. Haida இனத்தவர் களின் ரோரெம் துண்களில் உள்ள உரு வங்கள் பெரிய கண்களைக் கொண்டனவா யும் பகட்டானவாயும் இருப்பதை அவதானிக் கலாம். Tsimshian and Nuxalt இனத்தவர் களின் ரோரெம் துண்கள் மிகவும் வினோத மானவையாகவும் தெய்வீகத் தன்மை கொண்டனவாயும் இருக்கின்றன. அதே சமயம் Coast Salish முதற்குடி மக்கள் தங்கள் வதிவிடங்களுக்கு முன்பாக இருக் கும் மரத்தூண்களில் மனித உருவங்களை யே அனேகமாகப் பதிப்பித்திருப்பார்கள்.

இத்தகைய ரோரெம் மரத் தூண்களைக் கொண்டு எந்த இனத்தவர்கள் அங்கே வாழ்ந்தார்கள் என்பதை ஓரளவு அறிந்து கொள்ள முடியும். வான்கூவரில் உள்ள அருங்காட்சியகத்திலும் இத்தகைய ரோரெம் மரத் தூண்களைக் காணமுடிந்தது. கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக வெய்யில் மழை பனி காற்று எல்லாவற்றையும் தாங் கிக் கொண்டு இந்தத் தூண்கள் இருந்திரு க்கின்றன. இத்தகைய தூண்கள் மேற் கொண்டும் அழிந்து விடாமல் இருப்பதற் காக அவற்றை அகழ்ந்து இங்கே கொண்டு வந்து பாதுகாப்பாக வைத்திருக்கின்றார் கள். அருங்காட்சியகத்தின் பின் பக்கத்தில் கைடா (Haida) முதற்குடி மக்களின் ஒரு சிறிய மாதிரிக் கிராமத்தையே உருவாக்கி இருக்கின்றார்கள். '10,000 வருடங்களுக்கு முன்பிருந்தே எங்கள் முன்னோர் குடியிரு ந்த இந்த இடத்தில் நீங்கள் இப்போது கால் பதித்திருக்கிறீர்கள்' என்று கைடா முதற்குடி மக்களின் மூத்த உறுப்பினரான சூஸன் பொயின்ற் என்ற பெண்மணி குறிப் பிட்டதாக அங்கிருந்த பதாதை ஒன்றில் எழுதப்பட்டிருந்தது.

முதற் குடிமக்களுக்கு இத்தகைய ரோரொம் தூண்கள் அடையாளமாக இருந்தது போல ஈழத்தமிழ் மக்களுக்கு கல்வெட்டுகள் அடையாளமாக இருந்தன. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நில அகழ் வின் போது இத்தகைய கல்வெட்டுக்கள் ஈழத்தமிழ் மக்களை அடையாளப்படுத்தி நின்றன. சமீபத்தில்கூட திருகோணமலைப் பகுதியில் உள்ள கன்னியா என்ற இடத் தில் நிலஅகழ்வின்போது தமிழ் எழுத்துக் கள் பதிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கண் டெடுக்கப்பட்டது. கல்வெட்டு அல்லது நடு கல் என்றால் கல்லிலே ஏதாவது முக்கிய தகவல்களைப் பதிந்து வைப்பதாகும். காலத்தால் அழியாமல் இருக்க இந்தக் கல்வெட்டுக்கள் பெரிதும் உதவியாக இரு க்கின்றன. முற்காலத்தில் கணினி போன்ற தொழில்நுட்பவசதிகள் இல்லாததால் தமி ழர் போல் நாகரிகம் அடைந்த மக்கள் கல்லிலே தான் முக்கிய நிகழ்வு களைப் பதிந்து வைத்தார்கள். பிரிட்டிஷ் கொலம் பியா பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் முதற்குடி மக்களின் கலைகளைப் பாது காக்கும் நோக்கத்தோடு வான்கூவரில் இந்த மாந்தவியல் அருங் ஸ்ரீகாட்சியகம் (Museum of Anthropology) தொடங்கப் பட்டது. இங்கே சுமார் 38,000 இனவரை வியல் சார்ந்த பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இதைவிட சுமார் 535,000 தொல்பொருட்களும் இந்த அருங்காட்சிய கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன.


LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...

MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110
Scarborough ON. M1B 2W1
Tel: 647.350.7050

- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.

SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages






# மகாநாயக்கர்களுடனான கலந்துரையாடல்கள் பலன் தருமா?

- ஆதித்தன் -

தமிழ் தலைவர்கள் அண்மைய நாட்களாக இலங்கையின் பௌத்த உயர் பீடங்களுக்கு பயணம் செய்து வருகின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இவ்வாறான பயணங்களை மேற்கொண்டு மகாநாயக்க தேரர்களை சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

இது குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த அணுகுமுறை தேவையானது தான் என்று ஒரு சாராரும், பிழையானது என்று இன்னொரு சாராரும் கூறுகின்றனர். புதிய அரசியலமைப்பின் மூலமாகவே தமிழர்களுக்கான தீர்வினை அடையும் வாய்ப்பு உள்ளதாக நம்பிக்கை வெளியிட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்த அரசியல் யாப்பு குறித்து மகாநாயக்கர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தைப் போக்கும் வகையில் அவர்களுடனான சந்திப்புக்களை ஏற்படுத்தி விளக்கமளித்து வருகின்றார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனும் பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடி வருகின்றார். அண்மையில் கண்டிக்குப் பயணம் செய்த அவர் மல்வத்த மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள சித்தார்த்தரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்பது நாட்டைப் பிரிப்பதற்கான ஒரு நகர்வு அல்ல என்றும், நாட்டை பிரிப்பதற்கான எந்தவொரு நோக்கமும் தமிழர்களுக்கு இல்லை என்றும் தேரரிடம் விளக்கியுள்ளார்.

அத்துடன், வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது மகாநாயக்கருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. வடக்கில் 89,000 பெண்கள் விதவைகளாகவுள்ளதாகவும், அதேபோன்று அநாதைக் குழந்தைகளும் அதிகமானோர் காணப்படுவதாகவும் தேரரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வடக்கிற்கு பயணம் மேற்கொண்டதைப் போன்று மல்வத்து பீட மகாநாயக்கரும் வடக்கிற்கு வரவேண்டும் என்றும் இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



தொடர்ந்தும் இவ்வாறான சந்திப்புக்களை மேற்கொள்ள வடக்கு முதலமைச்சர் தலைமையிலான வட மாகாணசபை உறுப்பினர்கள் குழு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தரின் அணுமுறை புதிய அரசியல் யாப்பினை பௌத்த பீடங்களை ஏற்றுக்கொள்ள வைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. புதிய அரசியலமைப்பிற்கு எதிராக மகாநாயக்க தேரர்கள் போர்க்கொடி தூக்கியிருக்கும் நிலையில், அவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் சம்பந்தன் தனது நகர்வினை மேற்கொண்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை முன்னெடுக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்த அறிக்கையுடன் மகாநாயக்க தேரர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேரில் சந்திக்கவுள்ளார். புதிதாக ஒரு அரசியலமைப்பு தேவையில்லை என்றும், அரசியலமைப்பின் மறுசீரமைப்பே தேவை எனவும் மகாநாயக்கர்கள் வலியுறுத்துகின்றனர். அதனையடுத்து அவர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் அழைத்துப் பேச்சு நடத்தியிருந்தார். புதிய அரசமைப்பின் அவசியத்தை மகாநாயக்க தேரர்களிடம் ஜனாதிபதி தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்நிலையில், புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முன்னெடுக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த இடைக்கால அறிக்கையுடன், சிங்கள பௌத்த மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழும் மகாநாயக்க தேரர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சந்திக்கின்றார்.

இலங்கையில் நீண்ட காலமாக தீர்வின்றித் தொடரும் இனப்பிரச்சினைக்குப் புதிய அரசியலமைப்பின் மூலமாகவே நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும், போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் புதிய அரசியலமைப்பிற்கு பூரண ஆதரவை வழங்குகின்றார்கள் என்பதையும் மகாநாயக்க தேரர்களிடம் சம்பந்தன் எடுத்துரைக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசமைப்பு நிர்ணய சபையின் வழிநடத்தல் குழு, சுமார் எழுபதிற்கும் அதிகமான தடவைகள் கூடித் தயாரித்த இடைக்கால அறிக்கை, நீண்ட இழுபறிக்குப் பின்னர் முழு அளவில் இறுதி செய்யப்பட்டு, கடந்த சில தினங்களுக்கு முன்னர் குழுவின் கூட்டத்தில அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்த மாதம் 21ஆம் திகதி காலை நாடாளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாகக் கூடும்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பிப்பார். அங்கிருக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இந்த இடைக்கால அறிக்கை மீதான விவாதம் ஒக்டோபர் மாதம் நடைபெறும். இந்த தருணத்தில் இது தொடர்பில் விளக்கங்களை அளித்து இதற்கான ஆரதவை திரட்ட வேண்டியது முக்கியமானதொரு கடமையாகும்.

நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது இந்த அரசியலமைப்பிற்கு முழு ஆதரவையும் தெரிவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களோ இதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் சிங்களத் தரப்புகளிடம் விளக்கங்களை முன்வைத்தாலும், தமிழ் தலைவர்கள் இதனை மேற்கொள்ளும் போது அது மேலும் சாதகத் தன்மையை உருவாக்கலாம்.

இதேவேளை, இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டித் தீர்வு அவசியம் என்றும் மத்தியில் பகிரப்பட்ட அதிகாரத்தை மீளப்பெறாத வகையில் இரண்டாம்தர சபையாக மாகாண பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய செனட் சபை அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி அரசியல் யாப்பு சபையின் வழிநடத்தல் குழுவிற்கு இடைக்கால பின்னிணைப்பு முன்மொழிவினை தமிழ் தேசியக்கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ளது.

இது ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது சந்தேகமே. வடக்கு கிழக்கு இணைப்பு தற்போதைக்கு சாத்தியமில்லை என்றும், சமஷ்டி என்ற பதம் பயன்படுத்தப்படுவதும் சாத்தியமில்லை என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் முன்னர் தெரிவித்திருந்தார். எனினும் கொள்கை ரீதியாக இவ்வாறானதொரு முன்மொழிவு தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றே கொள்ள முடியும்.

வழிநடத்தல் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராகவுள்ள சுமந்திரன் மற்றும் சம்பந்தன் ஆகியோர் கையொப்பமிட்டு இந்தப் பின்னிணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வழிநடத்தல் குழுவானது மீண்டும் எதிர்வரும் 20, 21, 22 ஆகிய நாள்களில் கூடுகின்றது. இதன்போது அரசியல் யாப்பிற்கான பின்னிணைப்புக்கள் தொடர்பில் ஆராயப்பட்டு இறுதி செய்யப்படவுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசியல் யாப்பில் தமிழர்களுக்கான முறையானதொரு தீர்வு உள்ளடக்கப்படாத நிலையில் சம்பந்தனும், சுமந்திரனும் தமிழ் மக்களை ஏற்மாற்ற முனைகின்றார்கள் என்று இவ்விருவருக்கும் எதிரான கருத்துக்களையுடைய தமிழ் அரசியல்வாதிகள் கூறி வருகின்றார்கள். மறுபுறம், சிங்கள கடும்போக்காளர்கள் இது தமிழர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்காக உருவாக்கப்படும் யாப்பு என சிங்கள மக்களிடம் கூறிவருகின்றார்கள்.

சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக பொறுப்பேற்றமைக்காக இதேபோன்று இரு தரப்பினரின் எதிர்ப்பையும் அவர் எதிர்கொள்ள நேர்ந்தது. ஒரு தமிழன் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராவதா? என மஹிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் அப்போது போரக்கொடி உயர்த்தினர். இன்னும் அந்த எதிரப்பு நிலை தொடர்கின்றது. சம்பந்தன் இப்போது தமிழர்களின்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: தாரணி இந்திரராஜ்
பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# Back to school Sept.2017

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

"Teaching Experience in Math for more than 27 years"

# SCORE HIGH IN MATH

90's "Limited Space"

G12
G11

We specialize in the most important grades

- Classes start in advance for high results
- We provide math instruction rather than tutoring
- Giving the best guaranteed result

416 666 5515

**Meeting must be held before the class starts, Call to make an appointment** *61 SNOWY OWL WAY SCARBOROUGH ON Markham/McNicoll*

# நான் அரசியலுக்கு வருவேன்!

## இயக்குநர் கரு. பழனியப்பன் நேர்காணல்

**சந்திப்பு: கண்ணன்**

“கடந்த 40 ஆண்டு காலமாக தமிழக அரசியலை நகர்த்தி வந்தது தனிப்பட்ட விரோதங்கள்தான். கொள்கை சண்டையே கிடையாது. கருணாநிதி வந்தார், அவரை பிடிக்காததால் எம்.ஜி.ஆர். வந்தார். எப்படி யாவது எம்.ஜி.ஆரை வீழ்த்திவிட்டு வந்து விட வேண்டும் என நினைத்துக் கொண்டி ருந்த ஜெயலலிதாவுக்கு காலம் கை கொடு த்தது, எம்.ஜி.ஆர். மறைந்தார், ஜெய லலிதா வந்தார். அவரைப் பிடிக்காததா-லேயே கருணாநிதி மறுபடியும் வந்தார். எவ்வளவு சிறுசிறு காரணங்களால், எவ் வளவு பெரிய பெரிய முடிவுகளை எல்லாம் இவர்கள் நான்கு கோடி தமிழர்கள் சார் பாக கடந்த 40 ஆண்டுகளில் எடுத்திருக் கிறார்கள் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம்தான் ஒரு புதிய அரசியலை உருவாக்க முடியும்.”

நிதானமாகவும் உறுதியாகவும் பேசுகிறார், கரு. பழனியப்பன். ‘சிவப்பதிகாரம்’ பேசி ‘மந்திரப் புன்னகை’ சிந்தும் ‘சதுரங்க’ இயக்குநர். திரையில் மட்டுமல்ல நிஜத்திலும் மக்களின் தோளில் கைபோட்டு போராடும் திரைப் போராளி. ‘விளம்பரம்’ இதழுக்காக சந்தித்தோம்.

சமீப காலமாக துணிச்சலாக அரசியல் கருத்துகளை சொல்கிறீர்கள். நீங்கள் அரசியலுக்கு வருவீர்களா?

கண்டிப்பாக வருவேன். இப்போது தமிழக அரசியலில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருக் கிறது என்று சொல்கிறார்கள். அது ஜெய லலிதாவின் மறைவு, கருணாநிதியின் உடல் நலக் குறைவு காரணமாக ஏற்பட்ட வெற்றி டம் அல்ல. தமிழ்நாட்டு வாக்காளர்கள் மனதில் இருப்பதுதான் அந்த வெற்றிடம். இவரெல்லாம் தவறு என்று எல்லோருக்கும் தெரிகிறது. ஆனால், யார் சரி என்று எவருக்கும் தெரியவில்லை. அதற்கு மக்கள் அரசியலை அறிந்துகொள்ள வேண்டும். அது இனி நடக்கும்.

இவ்வளவு அரசியல் ஆர்வத்துடன் இருக்கிறீர்கள். திரைத்துறையை தேர்வு செய்தது எப்படி?

என் தந்தை பள்ளிக் கூடத்துக்குப் போய் படிக்காதவர். பாடத் திட்டங்கள் எல்லாம் தெரியாதவர். நான் ப்ளஸ் 2 முடித்ததும் என் தந்தை, “கம்யூட்டர்தான் இனி உலக ம்னு சொல்றாங்க் நீ அதை படியேன்” என் றார். நான் வாங்கியிருந்த மதிப்பெண்ணு க்கு அன்றைய தேதியில் 50 ஆயிரம் ரூபாய் பணம் கட்டினால்தான் கம்யூட்டர் சயின்ஸ் சேர முடியும். அவ்வளவு பணம் கட்டி படித்தால், நிச்சயம் படித்து முடித்ததும் வேலைக்குப் போக சொல்வாங்க என்று எனக்கு தோன்றியது. அதைத் தவிர் க்கனும்னா பணம் செலவழிக்காமல் படிக் கனும் என்று நினைத்தேன். அதேநேரம், மதுரையில் அமெரிக்கன் காலேஜ் எனக்கு ரொம்ப பிடிக்கும். அந்த கேம்பஸில் படிக்க னும்னு ஆசைப்பட்டேன். இந்த இரண்டு காரணங்களால் இங்கிலீஷ் லிட்ரேச்சர் தேர்வு செய்தேன்.



அப்போது மதுரையில் சினிமா தவிர வேறு பொழுதுபோக்கே கிடையாது. தினசரி ராத் திரி படத்துக்குப் போய்விடுவேன். ஒரு வரு ஷத்துக்கு 250 படம் எல்லாம் நான் பார்த் திருக்கிறேன். பார்த்த படத்தையே மறுபடி யும் பார்ப்பேன். எம்.ஏ. முடித்ததும் அடுத்து என்ன என்ற கேள்வி வந்தபோது, இப்படி நான் படமாக பார்த்துக் கொண்டிருந்ததை வைத்து, ஒருவேளை இவனுக்கு சினிமா வில் ஆர்வம் இருக்குமோ என்று என் தந்தை, “சினிமாவுக்கு முயற்சி செய்யேன்” என்றார். ‘நல்லாயிருக்கே, அதுவும் தந்தையே சொல்கிறாரே’ என்று சென்னைக்கு வந்தேன்.

“சினிமாவில் 24 துறை இருக்கு. அதில் நீ எந்தத் துறையில் சேரணும்” என்றார்கள். “இருக்கிறதிலேயே பெரிய வேலை எது?” என்று கேட்டேன். “டைரக்டர் வேலைதான்” என்றார்கள். சரி, ‘முயற்சிப்பதே முயற்சிக்கி றோம் இருப்பதிலேயே ஆகப்பெரிய வேலை க்கு போவோம்’ என்று டைரக்டராக முயற்சி த்தேன். இப்படி தற்செயலாக முடிவு செய்து வந்தாலும், சினிமாவுக்கு வந்தபிறகு தீவிர மாக அந்த வேலையைப் பார்த்தேன். பார்த் திபன் சாரிடம் அசிஸ்டெண்டாக சேர்ந்த தால் எல்லா வேலைகளையும் சீக்கிரம் கற்றுக்கொண்டேன். அதனாலேயே சிக்கிரம் இயக்குநராகவும் ஆனேன்.

திரைத்துறை எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

திரைத்துறை எப்படி இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட வேண்டியதில்லை. திரைத்துறை இருக்கிறது. அதில் நான் இருக்கிறேன். நான் அதில் ஒரு பங்கு. அவ்வளவுதான். மற்றபடி அதை சுத்தம் செய்வதற்கோ சரி செய்வதற்கோ என் விருப்பத்துக்கு ஆக்குவதற்கோ நான் இங்கு வரவில்லை.

நீங்களே இயக்கி நடித்த ‘மந்திரப் புன்னகை’ உங்கள் படங்களில் வித்தியா சமான படம். அதன் கதாநா யகனுக்கான இன்ஸ்பிரேசன் யார்?

எழுத்தாளர் அய்ன் ரேண்ட்டின் ‘ஃபவுண் டெய்ன்ஹெட்’ என்னும் நாவல்தான் அந்தப் படத்துக்கான இன்ஸ்பிரேசன். ஒருவன் மனதில் நினைத்ததை எல்லாம் பேசினால் என்ன ஆகும்? நமக்கு நிறைய விஷயங் கள் மனதில் தோன்றுகிறது. எல்லாவற்றை யும் வெளியே சொல்வதில்லை. சொன்னால் வருத்தப்படுவார்கள் என்று நினைக்கிறோம். ஆனால், மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்து நாம் நிறைய கஷ்டப்படுகி றோம். சரி, மற்றவர்கள் சந்தோஷப்படனும் என்பதற்காக நான் ஏன் வருத்தப்படனும் என்று ஒருவன் எல்லாவற்றையும் பேச ஆரம்பித்தால் என்ன ஆகும்? அதுதான் அந்தப் படம்.

தமிழ் திரைப்படங்களுக்கு ஆன்லைனில் வரும் விமர்சனங்கள் சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. நடிகர் விஷால் படம் வெளி யாகி மூன்று நாட்கள் கழித்து விமர்சனம் எழுதுங்கள் என்கிறார். இது கருத்து சுதந்திரத்துக்கு எதிரானது இல்லையா?

அவர் புரியாமல் சொல்கிறார். என்னைக் கேட்டால், படம் வெளியாவதற்கு மூன்று நாட்கள் முன்பே காண்பித்து, விமர்சனம் எழுதிவிடலாம் என்பேன். விமர்சனங்கள் படத்தின் வெற்றியை எப்போதும் கெடுக் காது. தமிழில் மிக அதிக நாட்கள் ஓடிய படங்கள் எல்லாவற்றுக்கும் பத்திரிகைகள் மிக மோசமான விமர்சனங்களைத்தான் எழுதியிருக்கிறது. ‘செந்தூரப்பூவே’ வெளி யானபோது, ‘இந்தப் படத்தை யாரும் பார் க்க வேண்டாம்’ என்று எழுதினார்கள். ஆபாவாணன் காத்திருந்து அதை 175 ஆவது நாள் சுவரொட்டியில் போட்டார். ‘நாயகன்’ விமர்சனத்தில், ‘425ஆவது படம் என்பதாலோ என்னவோ இளையராஜா மிக வும் அடக்கி வாசித்திருக்கிறார்’ என்றும், ‘புழுதிக் காற்றில் சிக்கிய பொம்மரேரியன் நாய்க் குட்டியாய் தடுமாறுகிறார் ஏ.ஆர். ரஹ்மான்’ என்று ‘கருத்தம்மா’ விமர்சனத் திலும் எழுதினார்கள். ‘நாயகன்’, ‘கருத்தம்மா’ பாடல்கள் எவ்வளவு பெரிய வெற்றி. ‘சூரிய வம்சம்’ படத்துக்கு கொடுக் கப்பட்ட மதிப்பெண் 37/100. அது ஒரு வெள்ளிவிழா படம். 175 நாட்கள் ஓடியது. ஓடுகிற படத்தை பத்திரிகை விமர்சனத்தால் நிறுத்தவே முடியாது. பார்க்கிறது என்று முடிவெடுத்தவன் கட்டாயம் பார்த்துவிடு வான். ஆனால், ‘ஒரு கிடாயின் கருணை மனு’, ‘8 தோட்டக்கள்’, ‘துருவங்கள் பதினாறு’ போன்ற அறியப்படாத படங்களுக்கு விமர்சனங்கள் உதவும்.

சினிமாவில் உங்கள் ரோல் மாடல்?

நல்ல சினிமா எடுக்கிற எல்லா இயக்குநர் களையும் எனக்குப் பிடிக்கும். ருத்ரய்யாவை பிடிக்கும். ஆனால், நிரந்தரமாக எனக்குப் பிடித்த இயக்குநர் மணிவண்ணன்தான். இந் திய சினிமாவிலேயே மணிவண்ணன் ஒருவர் மட்டும்தான் எல்லா பிரிவுகளிலும் ஒரு வெள்ளி விழா படம் வைத்திருக்கும் இயக் குநர். பாலசந்தர், பாரதிராஜா, பாக்ய ராஜ், மணிரத்னம் எல்லோரையும் இப்படிப்பட்ட படங்கள் எடுப்பார்கள் ஒரு வகைக்குள் அடக்கிவிடலாம். ஆனால், மணிவண்ணனை எந்த ஜாடிக்குள்ளும் அடைத்துவிட முடி யாது. ‘இளமைக் காலங்கள்’ (காதல்கதை),

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



# புளோரிடா, ரெக்சாஸ் மாகாணங்களை சூறையாடிய ஹார்வி மற்றும் இர்மா சூறாவளி

மறக்க முடியாத பாதிப்பை ஃப்ளோரிடாவில் இர்மா ஏற்படுத்தியுள்ளது. இர்மா சூறாவளி ஓய்ந்தாலும் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு கோரத்தாண்டவம் ஆடிய சூறாவளிக் காற்றால் ஃப்ளோரிடா உருக்குலைந்துள்ளது, கரீபியன் தீவுகளை சூறையாடிய இர்மா சூறாவளி கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைத் தாக்கியது. அப்போது மணிக்கு 210 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது. இடைவிடாது பலத்த மழை பெய்தது.



இதன்காரணமாக மாகாணத்தின் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது. பல ஆண்டு பழமையான மரங்களும் வேரோடு சாய்ந்தன. துறைமுகங்களில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் ஒன்றோடொன்று மோதி உடைந்தன. சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் தலைகீழாகப் புரட்டப்பட்டன. கட்டுமான தளங்களில் பாரிய கிரேன்கள் முறிந்து விழுந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புளோரிடா மாகாணம் முழுவதும் 70 லட்சம் பேர் பாது காப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். மாகாணம் முழுவதும் அமைக்



கப்பட்டிருந்த 500-க்கும் மேற்பட்ட நிவாரண முகாம்களில் லட்சக்கணக்கானோர் தஞ்சம் அடைந்தனர். சூறாவளி தாக்கிய புளோரிடா கீஸ், மியாமி உட்பட புளோரிடா மாகாணம் முழுவதும் கட்டிட இடிப்பாட்டுப் பொருட்களும், வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட பொருட்களும் தேங்கியுள்ளன. வெள்ளநீர்த் தேக்கம், மரங்கள் மின்சார வயர்களில் விழுந்ததால் மின்விநியோம் தடைபட்டுள்ளது. ஃப்ளோரிடாவின் 3ல் இரண்டு பங்கு மக்கள் மின்தடையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஃப்ளோரிடா மாகாணத்தில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை சரி செய்ய ஒரு வார காலமாகும் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இர்மா சூறாவளி தாக்கிய போது 15 அடி உயரத்துக்கு அலைகள் எழுந்தன. தற்போது அது வலுவிழந்தாலும் கடல் இன்னமும் கொந்தளிப்பாகவே காணப்படுகிறது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே மியாமி உள்ளிட்ட கடற்கரை சுற்றுலா தலங்களுக்கு பொதுமக்கள் வர வேண்டாம் என்று புளோரிடா மாகாண அரசு எச்சரித்துள்ளது. ஹார்வி மற்றும் இர்மா சூறாவளி புயல் தாக்கி அமெரிக்காவின் புளோரிடா, டெக்சாஸ் மாகாணத்தை சூறையாடியுள்ளது. இரு மாகாணங்களிலும் பாரிய அளவுக்குப் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

ஓகஸ்ட் இறுதி வாரத்தில் அமெரிக்காவின் ரெக்சாஸ், லூசியானா உள்ளிட்ட மாகாணங்களைத் தாக்கிய ஹார்வி சூறாவளியினால் இதுவரை 70க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். 13 மில்லியன் மக்கள் பல் வேறு வகைகளில் பாதிப்படைந்துள்ளனர். சுமார் 40,000 மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, பாதுகாப்புக் கூடாரங்களில் தங்கியுள்ளனர்.


ஓகஸ்ட் மாத மத்தியில் ஆபிரிக்கக் கரையில் உருவாகிய வெப்ப மண்டலம், சூறாவளிப் புயலாக உருமாறி ஓகஸ்ட் 25 ஆம்



திகதி ரெக்ஸாஸில் உள்ள அரன்சாஸ் துறைமுகத்தைத் தாக்கியபோது, அதன் வேகம் மணிக்கு 130 மைல் ஆக இருந்தது. அடுத்த நாள், அமெரிக்காவின் நான்காவது பெரிய மாநகரமான ஹூஸ்டனுக்கு நகர்ந்து, நான்கு நாட்கள் நீடித்து, மிக மோசமான பாதிப்புக்களை உண்டாக்கியது. தொடர் கன மழையால். மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அணைகள் நிரம்பின. சாலைகள் எங்கும் வெள்ளக்காடு. அதிகபட்சமாக ஐம்பது அங்குலங்களுக்கு மேல் மழை பொழிந்துள்ளது. வீடுகள், வாகனங்கள் என மக்களின் சொத்துகளுக்குப் பெரும் நாசம். பெரும் பாதிப்புகளை உண்டாக்கிய ஹார்வி, அமெரிக்க இயற்கைப் பேரிடர்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்து, மறக்க இயலாத வரலாற்றுப் பட்டியலில் இடம் பிடித்துவிட்டது. இனி எந்தப் புயலுக்கும் இந்தப் பெயர் வைப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டு விட்டது.

NO MEDICAL INSURANCE
No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!
Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.
• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்
KABIS
KABIS & ASSOCIATES INC.
உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com
La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# உடலைத் தங்கமாக்கும் 'அங்கமர்தனா'!

சத்குரு வாசுதேவ்

'ஜிம்முக்குப் போறேன்' என்று பலரும், equipments (உடற்பயிற்சி கருவிகள்) வாங்கி வீட்டிலேயே ப்ராக்டிஸ் பண்றேன்னு சிலரும், மூச்சு இறைக்க, நரம்பு புடைக்க உடற்பயிற்சி செய்வதைப் பார்க்கிறோம். ஆனால், அன்றைய யோகிகள் இது எதுவும் இல்லாமல் எப்படி தங்கள் உடலைக் கட்டுமஸ்தாக வைத்திருந்தார்கள்?! இதோ விடை சொல்ல வருகிறது 'அங்கமர்தனா'. தொடர்ந்து படியுங்கள்!

சத்குரு: 'அங்கமர்தனா' என்பது ஒரு தனித் தன்மை வாய்ந்த யோக வழிமுறை. ஆனால் இப்போது அது முற்றிலுமாக மறைந்துவிட்டது. அந்த அற்புத செயல் முறையை இப்போது ஈஷாவில் மீண்டும் கற்றுக் கொடுத்து புத்துயிரூட்டி வருகிறோம். அங்கமர்தனாவில், உங்கள் உடல் எடையையும் விசையையும் பயன்படுத்தி, சில நாட்களுக்குள் உங்கள் தசைகளின் வளைந்து கொடுக்கும் தன்மையை அதிகப் படுத்துகிறீர்கள். இது வெறும் 25 நிமிட செய்முறைதான். ஒரு உடற்பயிற்சி என்ற நிலையிலிருந்து பார்த்தாலும், அங்கமர்தனா ஒரு வெற்றிகரமான பயிற்சிதான். ஆனால், தசைகளை வலுவூட்டுவதும், உடலின் கொழுப்புச்சத்தை குறைப்பதும் இதன் பக்க பலன்கள் மட்டுமே. "அங்கமர்தனா" என்றால் உங்கள் உடல் அங்கங்களின் யேமல் ஒரு ஆளுமை கொண்டு வருவது என்று பொருள்.

இந்த உலகில் நீங்கள் எந்தவொரு செயலைச் செய்தாலும், அது உங்கள் உடல் அங்கங்களின் மேல் நீங்கள் எப்படி ஆதிக்கம் செலுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் அந்த செயலின் வெற்றி தீர்மானிக்கப்படும். உங்களின் விடுதலைக்கும், உங்களைச் சுற்றியுள்ளவர்களின் விடுதலைக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், உங்களின் அங்கங்களின் மேல் ஒரு ஆளுமை இருந்தால்தான் அதைச் செய்ய முடியும். உங்கள் அங்கங்களின் மேல் ஆளுமை என்றால், நீங்கள் ஏதோ தசை வலிமை உள்ளவராகவோ அல்லது மலை மேல் ஏறுபவராகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதுவும் நடக்கலாம், ஆனால் அடிப்படையில், உங்கள் சக்தியின் கட்டமைப்பை உறுதிப்படுத்துவதுதான்



இதன் நோக்கமே. ஒரு உடற்பயிற்சி என்ற நிலையிலிருந்து பார்த்தாலும், அங்கமர்தனா ஒரு வெற்றிகரமான பயிற்சிதான். ஆனால், தசைகளை வலுவூட்டுவதும், உடலின் கொழுப்புச்சத்தை குறைப்பதும் இதன் பக்க பலன்கள் மட்டுமே.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் எந்த ஒரு சாதனா செய்தாலும், அது அங்கமர்தனாவோ அல்லது வேறு எதோவொரு சாதனாவாக இருந்தாலும் சரி, நாம் நம் சக்தி நிலையில் ஒரு குறிப்பிட்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறோம் என்பதே உண்மை. இதை ஒருவிதமாகக் குறிப்பிட வேண்டுமென்றால், உதாரணமாக ஒரு மனிதர் நடந்து செல்லும்போது, அவரின் உடல் சரியாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டு பிடித்துவிட முடியும். அவரின் முகத்தைப் பார்க்கும்போதே அவர் மனம் சரியாக பண்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் தெரியும். இன்னும் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால், ஒருவரின் சக்திநிலை பண்படுத்தப்பட்டுள்ளதா என்பது கூடத் தெரியும். அவரால் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது என்பதை இதை வைத்தே தீர்மானித்து விடலாம். சக்தியின் மேல் முழுமையான ஆளுமை கொண்டு வந்தால், உங்களின் சக்தியை வெடித்தெழச் செய்ய முடியும். அருள் என்பது உங்களை ஆட்கொள்ள வேண்டுமென்றால், ஒரு தகுதியான உடல் உங்களுக்கு இருக்க வேண்டும். அப்படி தகுதியான உடல் ஒன்று இல்லாமல், அருள் உங்களை ஆட்கொண்டால், நீங்கள் சாம்பல் போல் எரிந்து போய்விடுவீர்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

நிறைய பேருக்கு ஓர் அளப்பரிய அனுபவம் கிட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள், ஆனால் அதற்கு தகுந்தாற்போல தங்கள் உடலை அவர்கள் தயார்படுத்துவதில்லை. யோகாவில், ஓர் அனுபவத்தை நீங்கள் விரட்டிக் கொண்டு தேடத் தேவையில்லை, அது நிகழ்வதற்கு, உங்களை நீங்கள் தயார்படுத்திக்கொள்ள மட்டும்தான் வேண்டும். உங்கள் ஆன்மீகம் வெறும் வாய்ப் பேச்சாக மட்டுமில்லாமல் அதைத்தாண்டிய நிலையில் இருக்குமேயானால், உங்களின் அங்கங்களின் மேல் நீங்கள் ஒரு ஆளுமை கொண்டு வரவேண்டியது மிகவும் முக்கியம்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4




# மதுப்பழக்கம்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## Alcoholism

மனித இனம் காலங்காலமாக மதுபானங்களைப் பாவித்து வந்திருக்கிறது. எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும் மக்கள் மதுவை பாவித்து வந்தமைக்கு வரலாறுகள் பல உண்டு. 'முதலில் மனிதன் மதுவையே அருந்துகிறான், பிறகு மது மனிதனையே அருந்துகிறது' என்பது பழகிப்போன வாக்கியம். 'குடிகெடுக்கும் குடி', மது ஓர் அரக்கன்', 'மதுபழக்கம் உடலுக்குக் கேடு' என்று எத்தனையோ வாக்கியங்கள் சமூகத்தில் கூறப்பட்டாலும், இந்தப் பழக்கத்தை ஒழிக்கமுடியவில்லை என்பது கசப்பான உண்மை. 'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்று குடிகாரர்களுக்கு சில பழமொழிகளும் உண்டு. இன்றுள்ள சூழ்நிலையில் நாம் பார்க்கின்ற சினிமாக்கள், சின்னத்திரைகள் மது அருந்துவோர் காட்சி இல்லாமல் வருவது மிக குறைவு. ஆனால் வலு கெட்டித்தனமாக இக்காட்சிகள் வரும்போது 'குடிப்பதால் உடல்நலம் பாதிக்கப் படுகிறது' என்று மட்டும் போட மறக்க மாட்டார்கள். இதைப்போட்டுவிட்டு தண்ணியடிப்பதும், சண்டைபிடிப்பதும், டான்ஸ் ஆடுவதும் எல்லோருக்கும் பழகிப்போனதொன்று.

தற்போது எந்தஒரு விருந்தும் மது இல்லாமல் நடைபெறாது. இது ஒரு சம்பிரதாயமாகவே உள்ளது. கீழைத்தேச, மேலைத்தேச நாடுகள் என்ற வேறுபாடு இதற்குமட்டும் இல்லை. எல்லா இடமும் மதுப்போத்தில்கள் அழகாக பிரயாணம் செய்கின்றன. அழகாக அடுக்கியும் வைக்கப்படுகின்றன. ஒரு ராஜ மரியாதையுடன் மதுச்சாலைகளில் வலம் வருகின்றன. மதுப்கோப்பைகளுடன் இளையோர்களும், யுவதிகளும் நின்று உரையாடும் காட்சிகளே தனிரகம். பல்வேறு நிறமங்களில் மதுசாரங்களுடன் இவர்கள் மிகவும் மெய்மறந்து பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் இது அவர்களுக்கு செய்யப்போகும் விளைவுகள் மட்டும் தெரியாது. சிலர் விருந்துகளில் மட்டும் குடிப்பதாகக் கூறுவர். சிலர் நித்திரைகொள்ள உதவுவதற்காகக் குடிப்பதாகக் கூறுவார்கள். உடல் வேலை செய்பவர்கள் உடல் அலுப்பு தீர குடிப்பதாக சொல்லுவார்கள். குடும்ப பிரச்சினைகளை மறப்பதற்காக குடிப்பதாக கூறுவார்கள். உடல் வருத்தத்தினை போக்கடிப்பதற்காக குடிப்பதாகக் கூறுவார்கள். பழகிப் போச்சு மறக்க முடியவில்லை என்று வருந்துவார்கள், சிலர் ஒளித்து வீடுகளில் மட்டும் குடித்துவிட்டுப் படுப்பதாகக் கூறுவார்கள். இப்படி ஆளுக்கு ஆள் ஏதோ ஒரு காரணம் சொல்லி குடிப்பார்கள். இதையே தொழிலாகக் கொண்டு இரவுபகலாகல் குடிப்பவரையே நாம் குடிகாரன் (Alcoholist) என்கிறோம். தமிழகத்தின் அரசியலையே இந்தக் குடிப் பிரச்சினை ஆட்டிப்படைக்கிறது. பெண்களே முன்வந்து டாஸ்மார்க் என்னும் மது விற்பனை நிலையங்களை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியலில் பிரமுகர்களே மதுச்சாலைகளை நடத்திக்கொண்டு எப்படி ஒழிக்கமுடியும் என்பது கேள்வி?. ஒருபுறம் நீர்ப் பிரச்சினைக்காக குடங்களுடன் போராடும் காட்சிகளும் மறுபுறத்தில் மதுப் போத்தல்களை உடைத்து மதுஒழிப்புக்காக போராடும் காட்சிகளும் தினசரி வருபவை.



மதுப்பழக்கம் பல்வேறு கோணங்களிலிருந்து அணுகப்படுகிறது. ஒழுக்கம் சார்ந்ததாக, சமுதாயப் பிரச்சினையாக, உடல்நலம் சார்ந்ததாக, அரசியல் சார்ந்ததாக வெவ்வேறு அணுகுமுறைகளுக்கூடாகப் பார்க்கப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் ஒழுக்க நெறியாளர்கள் (Moralists), சமூக உளவியலாளர்கள் (Social Re Psychologist) அனைவரும் ஒன்று சேர்ந்து இப்பழக்கம் உள்ளவர்கள் பற்றி ஆராய்கின்றனர். உலகெங்கும் நடைபெறும் வீதி விபத்துக்கள், விமான-விபத்துக்கள், கொலைகள், பாலியல் வன்முறைகள், சமூக வன்முறைகள், தொழிற்சாலை விபத்துகள், விவாகரத்துகள், குடும்ப சீரழிவுகள், கோபதாபங்கள் எல்லாவற்றிற்கும் இம்மதுப்பழக்கம் காரணம் என்பதனை நிரூபித்துள்ளனர். மதுப்பழக்கம் ஒரு பழக்க வடிமை நோயாகும். இதனை Addiction என்று அழைப்பர். போதை மருந்துகளுக்கு அடிமையாவது போலவே இதனையும் கருத முடியும். முன்பு Dipsomania (மதுப்பித்து) என அழைக்கப்பட்டது. பின்பு குடிப்பழக்கம் எனக் கூறப்பட்டது. 1979 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பு மதுசார்பு நோய்க்குறி என குறிப்பிட்டுள்ளது.

மதுப்பழக்கம் என்பதற்கான உயிரியல் கோட்பாடுகள் உறுதியற்றதாக இருந்தாலும் சமூக சூழல், மனம் அழுத்தம், மனநலம், மரபியல், வயது, இனம், பாலினம் ஆகியவை வாய்ப்பு அளிக்கும் காரணிகளாக அமைந்துள்ளன. நீண்டகால மதுப்பழக்கத்தினால் உடலியக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் மூளையில் ஏற்படும் வேதியியல் மாற்றங்கள் (Chemical Changes) விடாப்பிடியான மதுப்பழக்கத்தை வலுப்படுத்துவதோடு மதுகுடிப்பதை நிறுத்தும்பொழுது மதுநிறுத்த நோய்க்குறி ஏற்படுகிறது. மது மூளை உட்பட நமது உடலில் இருக்கும் அனைத்து உறுப்புக்களையும் சேதமடைய வைக்கிறது. கடுமையான மதுஅருந்தும் பழக்கத்தால் நச்சுத்தன்மை ஏறிக்கொண்டே சென்று பலமனச் சீர்க்குலைவுக்கு ஆளாக்கிவிடுகிறது சமுதாயத்தில் குடிப்போர்களுக்கு சற்று மதிப்புக் குறைவென்றாலும் இப்போது பெரும்பாலோர் குடிப்பதால் இதுகூடப் பிரச்சினையில்லை போலவே தெரிகிறது.

மதுவுக்கும் மதுவை அருந்துபவருக்கும் இருக்கும் தொடர்பை விளக்க பல சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. உபயோகம், தவறான பயன்பாடு, கனத்தபயன்பாடு என பல உள. சிலவேளைகளில் மிதமான பயன்பாடும் உணவுக்கட்டுப்பாட்டில் உள. மது என்பது எல்லா மதுபானங்களில் உள்ள வேதிப்பொருள் (Ethyl alcohol) எனப்படும். எத்தனோல் (Ethanol) ஆகும். பொதுவாக அல்கஹோல் (Alcohol) என்பதே புழக்கத்தில். உள்ளது. இதனை 'மதுசாரம்' எனத் தமிழில் அழைக்கலாம். வெறியம் எனவும் கூறுவர். 'நல்ல வெறியிலை நிற்கிறார்' என்றால் அது மது போதையைத்தான் குறிக்கும்.

மது என்பது அமைதியை வழங்கும் இரசாயன பொருள் என்ற அர்த்தத்திலேயே இருந்து வருகிறது. மகிழ்ச்சியை கூட்டுவதற்கும் இதனை பாவித்து வந்துள்ளனர். முந்தைய காலத்தில் வடித்தெடுக்கப்படும் பின் சாராயமாக வடிக்கப்பட்டது. இன்று நூற்றுக்கணக்கான இரசாயன கலவைகளுடன் கூடிய மது சாரவகைகள் வந்துள்ளமையை சமூகசீரழிவுக்கு வித்திட்டுள்ளது. என்றாலும் மதுவை பாவித்த சில நிமிடங்களில் அது இரத்தத்துடன் கலந்து மூளையை பாதிக்கிறது. முதலில் ஒரு நல்லுணர்ச்சியையும், நட்புணர்வையும் ஏற்படுத்தி மற்றவர்களுடன் பழக தூண்டுகிறது.

அதாவது கொஞ்சநேர மகிழ்ச்சியை இது ஏற்படுத்துகிறது. நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பது தன் இன்பம். வழமைக்கு மாறாக சிரிப்பு, பேச்சு வரும். பல ஆழ்மன உணர்வுகளும் வரும். கோபத்தை மூட்டி சண்டையையும் ஏற்படுத்தும். மதுவை கொடுத்து பலரை ஏமாற்றியும் விடுகிறார்கள்.

மதுவை பாவித்தவுடன் நடைபெறும் செயல்களை பார்த்தால் மிகவும் வியப்பாகவே இருக்கும். மதுவானது முதலில் மூளையை இரத்துத்துடன் கலந்து மூளைக்கு செல்லுகிறது. அத்துடன் இரைப்பையில் எரிச்சலை உண்டாக்குகிறது. எப்படி என்றாலும் மேலும் மேலும் குடிக்கப் பண்ணுவதே மதுவின் ஆற்றலாகும். மூளையை மந்தமாக்கி மனம் போன போக்கில் நடக்க தூண்டும். எல்லா ரகசியங்களையும் உளறிக் கொட்ட வைக்கும். நல்ல மரியாதை பண்புகள் குறையும் தமிழ் பேசுபவர்கள் ஆங்கிலத்தில் பேச தொடங்குவார்கள். மச்சான் போட்டுக் கதைப்பார்கள். கட்டிப்பிடித்து கொஞ்சுவார்கள். சிலர் சிரிப்பார்கள். சிலர் அழுதும் விடுவார்கள். தள்ளாட்டம், தடுமாற்றம் ஏற்படுகிறது. எதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. கூடுதலாக குடித்து வாந்தி எடுத்து சிலர் மயக்கம் போட்டும் விடுவார்கள். மனநல பாதிப்பும் உடல் நல பாதிப்பும் ஒன்று சேர்ந்துவிடுகிறது.

மது அருந்துவதால் ஏற்படும் உடல்நல பாதிப்புக்களே மிக அதிகம். கல்லீரல் இழைநார் வளர்ச்சி, கணைய அழற்சி, காக்காய் வலிப்பு (Epilepsy) பன்மை நரம்புகள், இயக்கத்தடை மறதிநோய், இதயநோய்கள், ஊட்டச்சத்துக்குறைபாடுகள், வயிற்றுப்புண் (Ulcer), பால்வினை செயல் பிறழ்ச்சி போன்ற பல பிரச்சினைகள் எழலாம். சில சமயம் இறப்பும் ஏற்படலாம். முக்கியமாக கல்லீரல் பாதிப்பே முக்கியமானது. கல்லீரல்

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)

ADMISSIONS ARE UNDERWAY
MALVERN MONTESSORI SCHOOL INC.
10 SEWELLS ROAD, SCARBOROUGH (AT NEILSON)
Admissions are in progress at
MALVERN MONTESSORI SCHOOL FOR:
• JK/SK (JUNIOR AND SENIOR KINDERGARTEN)
• PRE-SCHOOL
•GRADE 1-4 (LOWER ELEMENTARY GRADES)
FOR MORE INFORMATION CONTACT
THE SCHOOL ADMINISTRATION AT
( 416) 724-8900
"THE SCHOOL BEST KNOWN FOR ACADEMIC
EXCELLENCE FOR THE PAST 14 YEARS"

# வாகனக் காப்புறுதியில் வினாக்களும் விடைகளும்

**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999



## கனடிய தகவல் தொடர் 274

**வாகன விபத்துகளில் சரி, பிழை எந்தப் பக்கம் என்பது எப்படி தீர்மானிக்கப்படுகின்றது?**

(Accident Fault Determination Rules & Regulation 668 Under the Ontario Insurance Act)
'வாகனங்களுக்கிடையே நடைபெறும் விபத்துக்களில் சரி, பிழை எந்தப்பக்கம்? எவ்வளவு வீதத்தில் தப்பு' என்ற சட்ட ஒழுங்கு விதிகளை கனடாவில் ஒவ்வொரு மாகாண அரசாலும் அமல்படுத்தப்படுகின்றது.

இணையதளத்தில் சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட வீதி விபத்துக்களின் வரை படங்களைக் காணலாம். மாதிரி வரைபடங்களுடன் தெளிவு பண்ணும் ஒவ்வொரு வகையான விபத்திலும் சரி, பிழை என்பது ஒன்ராரியோ மாகாண காப்புறுதி சட்டங்களினால் அங்கு எந்தப் பக்கம் என்பது வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

'www.Insurancehotline.com/@-fault-rules' என்னும் இணையதளத்தினுள் செல்லும்போது ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு இடையே விபத்துகள் என்பது பல்வேறு கோணங்களில் நடைபெறுவதும், ஒவ்வொரு விபத்திலும் சரி, பிழை எந்தப் பக்கம் என்பது புகைப்படகாட்சிகள் மூலம் தெளிவு பண்ணப்படுகின்றது.

'You Tube' என்னும் இணையதள பிரிவினுள் சென்று 'கனடா தகவல்' 'Canada Thagaval' என்ற சொற்தொடரை ஆங்கில எழுத்தில் பதிவு செய்து Episode #05 இனை கிளிக் செய்யும்போது தமிழில் இவை பற்றி கனடிய தொலைக்காட்சியில் ஏற்கனவே பல தடவை காண்பிக்கப்பட்ட விளக்க உரையினை பார்க்கலாம். இந்தச் சட்டஒழுங்கு விதிகளின் அடிப்படையிலேயே வாகன காப்புறுதி கம்பனிகள் தங்களின் நட்டஈடு வழங்கலின் தீர்மானங்களை முடிவு செய்கின்றது.

**வீதி விபத்து ஒன்றில் ஒருவரின் தவறு இல்லாத நிலைமையில் வாகனக் காப்புறுதித் திட்டத்திலிருந்து நட்டஈடு கோரும் பிரிவின் விதி முறைகள் என்ன?**
(DCPD - Direct Compensation Property Damage No Fault Coverage) அடிப்படை வாகன காப்புறுதி பிரிவுகளில் இது முக்கியமான ஒரு திட்டமாகும்.

ஒருவரின் வாகனம் இன்னொரு வாகனத்துடன் மோதிய விபத்துக்களில் மட்டுமே, அவரின் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அவருடைய வாகனக் காப்புறுதி கம்பனியிலிருந்து கால தாமதமின்றி இலகுவாக நேரடியாக நட்டஈடு பெறலாம். ஆனால் ஒருவரது வாகனம் ஏதாவது சுவர் அல்லது மரம் ஒன்றுடன் மோதிய விபத்துக்களில் ஏற்படும் பாதிப்புகளுக்கு இப்பிரிவிலிருந்து நட்டஈடு பெறமுடியாது.

ஆனால் வாகனங்களிடையே விபத்து ஒன்று நடந்தால் சரி, பிழை, எந்தப் பக்கம் எவ்வளவு வீதத்தில் தவறு என்ற சகல விடயங்களும் வரைபடங்களுடன் மாகாண அரசின் சட்டப் பிரிவுகளில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. (Ontario Accident Fault Determination Rules & Regulation)

இந்த சரி, பிழை அடிப்படையில் ஒருவரின் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நட்டஈடு வழங்கப்படுகின்றது. வாகன விபத்தில் எவ்வளவு வீதத்தில் அவரின் பக்கம் தவறு இல்லையோ (Percentage of not at fault) அவ்வளவு வீதத்தில் அவரின் வாகனத்திற்கு ஏற்பட்ட மொத்த பாதிப்புக்கும் நட்டஈடு வழங்கப்படும்.

உதாரணமாக விபத்து ஒன்றில் '50% ஒருவரின் தவறு' என்றால் (50% at fault) '50% ஒருவரின் தவறு இல்லை' என்பதே சட்டத்தின் முடிவாகும். (50% not at fault) வாகனத்திற்குரிய மொத்த திருத்த செலவு $10,000 டொலர் எனக் கருதுவோம். இதில் $5,000 மட்டுமே அவருக்கு நட்டஈடாகக் கிடைக்கும்.

வாகனம் இந்த இடத்தில் விபத்தின் காரணமாக முற்றாக கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், $10,000 டொலர் பெறுமதியான வாகனத்திற்கு $5,000 மட்டுமே கிடைக்கும். இங்கும் ஒருவரின் காப்புறுதி ஒப்பந்தத்தில் 'அவரின் கொடுப்பனவு' (Ded uctible)என ஏதாவது ஒரு தொகை இருந்தால் கிடைக்கும் $5,000 பணத்தில் அதனையும் கழித்துக் கொண்டே வழங்குவார்கள்.

'100% ஒருவரில் தவறு இல்லை' (100% not at fault) என்றால் முழுமையான நட்டங்களுக்கும் இழப்பீடு கிடைக்கும். அங்கும் 'அவரின் கொடுப்பனவு' இருந்தால், அதனை கழித்துக்கொண்டே வழங்குவார்கள்'. ஒருவருக்குக் காப்புறுதி கம்பனியிலிருந்து நட்டஈடு வழங்கிய பின்பு, அந்த தொகையினை தவறுக்குரியவரின் காப்புறுதி கம்பனியிலிருந்து அறவிடுவது பொதுவான வழமையாகும்.

விபத்தில் மோதுண்ட வாகனங்களுக்கிடையே கொடுப்பனவுகளை ஈடு செய்யும் பரிமாற்றங்கள் காப்புறுதி கம்பனிகளிடையே நடப்பதால் இப்பிரிவிலிருந்து நட்டஈடு பெறுவதிலும் சில விசேட நிபந்தனைகள் உண்டு.

- விபத்து என்பது ஒன்ராரியோ மாகாணத்தினுள் நடந்திருக்க வேண்டும்.
- ஒன்ராரியோ மாகாணத்திற்கு அப்பால் ஏனைய மாகாணத்தில் அல்லது அமெரிக்காவில் அங்கு சென்றபோது ஒரு விபத்து நடந்திருந்தால் மறுபக்கத்தில் தவறுக்குரியவரின் அந்த மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட அவரின் வாகன காப்புறுதி கம்பனி ஒன்ராரியோ மாகாண அரசுடன் 'கொடுப்பனவுகளை ஈடு செய்யும் பரிமாற்ற உடன்படிக்கை' (Agreement with Onatio to settle Claims) என ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டும்.

பல காப்புறுதி கம்பனிகள் பரிமாற்ற உடன்படிக்கை செய்துள்ளன. அதேநேரம் செய்யாத கம்பனிகளும் உள்ளன. (கனடாவிலிருந்து அமெரிக்காவிற்கு சென்ற சிலரின் வாகனத்திற்கு பின்பக்கமாக மோதிய விபத்துகளில் இதேபிரிவிலிருந்து நட்டஈடு பெறமுடியாத துர்அதிஷ்ட நிலைமைக்கு தள்ளப்பட்டவர்கள் பலர் உண்டு.)

இப்படியான நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் தவறுக்குரியவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தே நட்டஈடு பெற்றுக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் விபத்தில் தவறுக்குரியவர் தப்பியோடிவிட்டால், அவரின் வாகன தகட்டின் இலக்கத்தினையும் குறித்து காப்புறுதி கம்பனிக்கு வழங்கவில்லையானால், கம்பனி இந்தப் பிரிவிலிருந்து நட்டஈடு பெற அனுமதிக்காது.

'செலவில்லாத நட்டஈடு கோரல்' (No Cost Claim) என இப்பிரிவிலிருந்து நட்டஈடு பெறுவதனை குறிப்பிடப்படுவதுண்டு. ஏனெனில் இது தொடர்ந்து விலை உயர்வுக்கு காரணியாக இருக்கமாட்டாது.

**விபத்தின் முடிவில் திருத்த செலவினை பொறுப்பு எடுப்பதா?** (Claim for Damages) **அல்லது முற்றாக வாகனத்தினை கைவிடும் பொறுப்பினை எடுப்பதா?** (Declare it a total loss) **என்பதனை காப்புறுதிக் கம்பனி எப்படி தீர்மானிக்கும்?**

இதற்கான பதிலை 'ஒன்ராரியோ நிதியியல் சேவைகள் சபை' (Financial Services Commission of Ontario) தமது இணையதள செய்திப் பிரிவில் பின்வருமாறு தெளிவு பண்ணுகின்றது.

பின்வரும் இரு தீர்மானங்களில் ஒன்றினை அடிப்படையாக கொண்டு நட்டஈடு வழங்கும் முடிவுகளை காப்புறுதிகம்பனி எடுக்கின்றது.
1. வாகனத்தின் திருத்தச் செலவு. (The Cost to Repair the Loss or Damage)
2. விபத்தின் போது வாகனத்தின் பெறுமதி. (The actual cash value of your vehicle at the time it was damaged)

இவ்விரு தீர்மானங்களில் எது விலை குறைவாக உள்ளதோ. அதுவே காப்புறுதி கம்பனியின் நிவாரணம் வழங்கும் முடிவாக எடுக்கப்படும்.

வாகனத்தினை முற்றாகக் கைவிடும் நிலையில் நிவாரணம் வழங்கும்போது, உபயோகித்த வருடங்கள், எவ்வளவு தூரம் ஓட்டப்பட்டுள்ளது? என்ற இரு பிரதான காரணிகளைக் கருத்தில் கொள்ளப்படும்.

விபத்துக்கு முன்னர் வாகனத்திற்கு ஏதாவது புதிய விலையான உதிரிப் பாகங்கள் மாற்றி அமைக்கப்பட்டிருந்தால், அதனை ரிசீற்றுக்கள், ஆதாரங்களுடன் காப்புறுதி கம்பனிக்கு வழங்கி தங்கள் வாகனத்தின் பெறுமதியினை அதிகரிக்கக் கோரும் சலுகை வாகனத்தின் கைவிடும் நிவாரணத்தினைப் பெறும்போது ஒருவருக்கு உள்ளது என்பதும் இச்செய்திப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**'தண்டனை ரிக்கற்றுக்கள்', 'குற்றப் பதிவுகள்' என்பன வாகன காப்புறுதியின் விலையில் எப்படி மாற்றத்தினை உருவாக்குகின்றது?**
'குற்றப் பதிவுகள் எப்படி எங்கள் மாத கட்டுப்பணத்தினை பாதிக்கின்றது? (How do conviction affect my premium?) என்னும் தலைப்பில் 'இன்சூரன்ஸ் பீரு ஒவ் கனடா' (Insurance Bureau of Canada) என்ற கனடிய காப்புறுதி கம்பனிகளின் தேசிய ஒன்றிணைப்பு மையம் தங்களின் வாகன காப்புறுதி தொடர்பான தகவல் செய்தி பிரிவில், வாகனம் செலுத்தும் குற்றச்சாட்டுகளின் பதிவுகள் என்பது அவர்களின் காப்புறுதி விலையினை எப்படி பாதிக்கின்றது என்ற அட்டவணையினை வெளியிட்டிருந்தனர்.

தண்டனை ரிக்கற்றுகளும், அதிலிருந்து புள்ளி மதிப்பீட்டு இழப்பீடு என்ற மதிப்பீட்டினூடாக தொடரும் குற்றப்பதிவுகளும், ஒருவரின் சாரதி அனுமதி பத்திர இலக்கத்தின் கீழ் பதிவில் போகும்போது, ஒவ்வொரு குற்றப்பதிவும் பின்வரும் மூன்று பிரிவுகளில் ஏதாவது ஒன்றின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன பின்வருமாறு
1. சாதாரண குற்றச்சாட்டு (Minor Offence)
2. பெரிய குற்றச்சாட்டு (Major Offence)
3. பாரதூரமான குற்றச்சாட்டு (Serious Offence)
உதாரணமாக அதிவேகமாக வாகனம் செலுத்திப் பிடிபடும் குற்றச்சாட்டுகளை எடுத்துக்கொள்வோம்.

ஆக கூடுதலாக 60K/h வேகத்தில் வாகனம் ஓட்ட வேண்டிய ஒரு வீதி. (Maximum 60 k/h)
75 K/h வேகத்தில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் அது சாதாரண குற்றச்சாட்டு (Minor Offence) என பதிவில் இருக்குமே தவிர புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் எவையும் ஏற்படாது.
77 k/h வேகத்தில் வாகனம் செலுத்திப் பிடிபட்டால் அது பெரிய குற்றம் (Major Offecne).

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# கால் மூட்டுவலிக்கு எளிய தீர்வு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்


ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)



C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm


(Knee Pain)

நம் முன்னோர்கள் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள். அதற்குக் காரணம் அவர்கள் தமது உடலுக்கும் மூளைக்கும் சமமாக போதிய அளவு வேலை கொடுத்தார்கள். ஆனால் இன்று மூளைக்கு மட்டுமே அசுர வேலை கொடுக்கப்படுகிறது. உடல் அசைவின்றி ஒரே இடத்தில் நின்றுகொண்டோ அல்லது அமர்ந்து கொண்டோ வேலைகளைச் செய்து முடிக்கின்றனர். இயந்திரங்கள் போல மாறிவிட்டனர். உண்பதற்குக்கூட நேரமில்லாது இருக்கும்போது உடற்பயிற்சி என்பது ஏது?

நோய்கள் என்றால் நீரிழிவு, இரத்த அழுத்தம், இதயநோய் போன்ற பெரிய நோய்கள் மட்டுமல்ல நம் வேலைகளை சற்று நிலைகுலையச் செய்து உடலைக் கஷ்டப்படுத்தும் அனைத்தும் நோய்களே. அவ்வாறான நோய்களில் அனேகமானவர்களை வாட்டி வதைக்கும் நோய்தான் கால் மூட்டுவலி. இந்த நோய் ஒழுங்காக நடக்கமுடியாமல் செய்வதுடன் பயங்கரமான வலியை உண்டாக்கும். சிலருக்கு கால் மூட்டுகளில் வீக்கமும் வலியும் உண்டாகி சிறிது தூரம் கூட நடக்க முடியாமல் போய்விடும். மாடிப்படிகளில் ஏறமுடியாது தவிப்பார்கள்.

முழங்கால் மூட்டுக்குவலிக்கு இன்று பலரும் அறுவை சிகிச்சை செய்துகொண்டு வருகின்றனர். இந்த நோயை இப்போது பெரிய நோய்களில் ஒன்றாகவே பார்க்கின்றனர். மூட்டுவலி என்பது மூட்டுத் தேய்மானத்தால் மட்டும் வருவதல்ல. மற்றைய காரணங்களும் கூட. இதற்கு முக்கியகாரணம் மலச்சிக்கல்தான். இந்த வலி வயதான ஆண் பெண் இருபாலாரையும் பாதிக்கும். இதை ஆயுள்வேத மருத்துவத்தில் சந்திவாதம் என்று அழைக்கப்படுகிறது. முழங்காலில் உள்ள இணைப்பிலும், எலும்புகளுக்கிடையிலும் ஒருவித சவ்வு உள்ளது. இதற்கு கார்டிலெஜ் (Cartilage) என்று பெயர். இந்த சவ்வுதான் மூட்டுக்களின் அசைவுக்கு உதவுகிறது. இந்த சவ்வுகளில் வாய்வு சேர்ந்து அது வாத நீராக மாறி மூட்டுவலியை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமன்றி குடல் அழற்சி, பித்த அதிகரிப்பு, நெஞ்செரிச்சல் போன்றவற்றாலும் மூட்டுவலி உண்டாக்கும். பொதுவாக பெண்களுக்கு மாதவிலக்குக் காலங்களில் ஓய்வின்றி வேலை செய்வதாலும் மாடிப்படிகளில் ஏறி இறங்குவதாலும் மூட்டுகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

### மூட்டுவலியின் அறிகுறிகள்

காலையில் எழுந்ததும் தலைவலி, தலைச்சுற்றல், மயக்கம், வாந்தி போன்றவை உண்டாகும். மலச்சிக்கல் ஏற்படும். உண்ட உணவு செரியாமல் அஜீரணக் கோளாறு ஏற்பட்டு வாயுக்கோளாறுகள் உண்டாகும். இதனால் பசியின்மை, நெஞ்சுவலி உண்டாகும். கால் நடுக்கம் மூட்டுகளில் வீக்கமும் ஏற்படும்.

### மூட்டுவலி ஏற்படக் காரணம்



நேரத்திற்கு உணவு சாப்பிடாததாலும், ஒரே நேரத்தில் அதிக உணவு உட்கொள்வதாலும், நீண்ட பட்டினி இருப்பதாலும், மற்றும் இரவில் அதிக காரம், புளித்த கறிகள் சேர்ப்பதாலும் உடலில் உள்ள அபாணவாயு அதிகமாகும் போது அது மேல்நோக்கிப் பாய்ந்து தலைப்பகுதியை அடைகிறது. அங்கிருந்து பின்கழுத்து வழியாக கீழ் இறங்கி உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்கிறது. அப்போது கால் மூட்டுகளி லும் தசைநார்களிலும் செல்லும் வாயு அங்கேயே தங்கி விடுகிறது. பின்பு அது வாத, பித்த நீருடன் கலந்து சளி போன்று மாறி மூட்டுக்களை வீங்கச் செய்கிறது, வலியை உருவாக்குகிறது.

### மூட்டுவலி ஏற்படாது தடுக்க

1. நேரம் தவறாது சாப்பிட வேண்டும்.
2. எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுகளை உண்பது.
3. இரவில் அரைவயிறு உணவும், கால் வயிறு தண்ணீரும் அருந்துவது நல்லது.
4. விரதம், நீண்ட நேரமாக உண்ணாமலிருத்தல், புகை, மதுப்பழக்கம் இவற்றால் குடல் அலர்ஜியாகி வாயு சீற்றம் ஏற்பட்டு அதுவே கால் மூட்டுவலியை உருவாக்கும். எனவே இவற்றைத் தவிர்க்கவும்.
5. எண்ணெய் பதார்த்தங்கள், மற்றும் அதிக காரம், புளிப்பு போன்றவற்றை குறைக்க வேண்டும்.
6. கீரைகள், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை உணவாக அதிகம் சேர்க்க வேண்டும்.
7. தினமும் அரைமணி நேரமாவது நடைப்பயிற்சி செய்ய வேண்டும். (குறிப்பாக கணினி முன் இருந்து வேலை செய்பவர்கள்)

முழங்கால் மூட்டுவலிக்கு அறுவை சிகிச்சை (Surgery) மூலம் முழு நிவாரணம் கிடைப்பதில்லை. ஆனால் இந்திய வர்ம மருத்து முறைகள், பொருத்தமான யோகா பயிற்சிகள் என்பனவற்றை முறைப்படி கைக்கொண்டு சிறந்த பலனை பெறுவது நிச்சயம்.

### கால் மூட்டு வலிக்கான சிகிச்சை முறைகள்

(Ending Knee pain without surgery or Drugs)

முழங்காலிலுள்ள தசைகளை இலகுவாக்கி தசை நார்களை உறுதியாக்கும் சில நேர்த்தியான பயிற்சி முறைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் எலும்புகளில் தேய்

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)


மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி
NON MEDICAL INSURANCE

நீங்கள்
இன்சுலின் பாவிப்பவரா?
85 வயதுக்கு குறைந்தவரா?
மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டவரா?
வேறு காப்புறுதி நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவரா?
குடி போதையில் வாகனம் செலுத்தி தண்டனை பெற்றவரா?
எவராயிருப்பினும் உங்களது காப்புறுதியை என்னால் பெற்றுத்தரமுடியும்.

SUPPER VISA MEDICAL INSURANCE
கனடாவுக்கு வரஇருப்பவர்கள் தங்களது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டிய முக்கியமான SUPPER VISA MEDICAL INSURANCE பெற்றுக்கொள்ள என்னை அழையுங்கள்
(Upto $100,000 Refundable)

✓ Whole life Insurance- 20 வருடங்கள் மட்டும் பணம் கட்டும் காப்புறுதி . அத்துடன் CASH BACK
✓ Mortgage Insurance - Upto 40 Years.
✓ Critical Illness Coverage- Upto 25 Illness ( no claims 100% cash back)

| 20 Years Coverage | $100,000 | | $200,000 | | $500,000 | |
|---|---|---|---|---|---|---|
| | Male | Female | Male | Female | Male | Female |
| Age 20 | $11.79 | $10.00 | $17.10 | $13.68 | $34.20 | $24.30 |
| Age 30 | $12.50 | $11.00 | $18.00 | $14.22 | $35.00 | $25.00 |
| Age 40 | $17.00 | $13.95 | $26.00 | $20.62 | $54.00 | $39.00 |
| Age 50 | $38.25 | $27.72 | $65.16 | $46.62 | $144.90 | $95.00 |



Vany Jeganmohan
Insurance Advisor
416.670.7436

MEGA Financial Group
PH 28 - 4168 Finch Ave East
Scarborough ON M1S 5H5

Desjardins    Assumption Life    Manulife    Sun Life Financial

Life Insurance - Critcal Illness Insurance - Non Medical Insurance - RESP - Super Visa / Travel Insurance

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca




5. பெருவீக்கக் காலம் (தொடர்ச்சி)

இவ்விதமிருக்கையில், இப்படியிருக்கலாம், அப்படியிருக்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள் என்றெல்லாம் நாங்கள் பார்க்க வேண்டியதன் காரணம், பிக்பாங்குடனான காலத்தில் நடந்தவற்றைத் தெளிவுடன் பார்ப்பதற்கு அல்லது கூறுவதற்கான அறிவியல் நிலைக்கு இன்னமும் நாங்கள் வளரவில்லை என்பதே காரணமாகும் அதனாற்றான் இந்தச் சிக்கல் எல்லாம். அவற்றினைத் தெரிந்து கொள்வதற்கான காலம் வந்ததும், உறுதி யான விடையைக் காணலாம். ஆனாலும், பல்பேரண்டம், ஒன்றினைத் தாய்ப்பேரண்டம் என்ற கருதுகோள்கள், இன்று பேரண்டத்தின் விடயங்களில் தெளிவில்லாது இருக்கின்ற பேரண்டத்தின் அடிவானத்தன்மைச் சிக்கல், தட்டையியல்பு என்பவற்றிக்கு பொருத்தமான விளக்கங்களை அளிக்கின்றன. அதனால் பல்பேரண்டம் என்ற கருதுகோள் பரவலாகப் பலரிடமும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு கருதுகோளாகவே இருக்கின்றது.

அந்தச் சிக்கல்களை அவ்விடத்தே விட்டுவிட்டு எங்களின் அந்த 3 நிமிடங்களின் விடயத்திற்கு வருவோம். இப்போது நான் கூறப்போவது நீங்கள் அறிந்த விடயம்தான். தொடர்ச்சித் தன்மையினுக்காய் அதனை மீண்டும் தருகிறேன். புடவியின் பரிணாம மாற்றங்களில் முக்கிய பங்களிக்கும் பேரண்டத்தின் வெப்பநிலை பற்றிய சிந்தனை உங்களிடம் ஏற்பட்டிருக்கலாம். இன்னமும் பேரண்டம் (புடவி) சிறியதுதான். புடவி பெருவீக்கத்துக்குள் வரும் போது, அதாவது பிக்பாங்கின் பின்னர், பத்தி மறை 35 செக்கனில் அதன் வெப்பநிலை பத்தின் 28ம் அடுக்கு பாகை கெல்வின் ஆக இருக்கிறது. பெருவீக்கத்தின் பின்னர் அதன் வெப்பநிலை, அதாவது பிக்பாங்கின் பின்னர் பத்தின் மறை 33 செக்கனில் புடவியின் வெப்பநிலை, பத்தின் 27ம் அடுக்கு பாகை கெல்வின் ஆகக் குறைந்து விடுகின்றது. அதாவது பெருவீக்கக் காலத்தில் கிட்டத்தட்டப் பேரண்டத்தின் வெப்பநிலை பத்து மடங்கினால் குறைந்து விட்டது. அவ்விதம் வெப்பநிலை குறைவடைகையில் பிரபஞ்சத்துள் நிகழும் மாற்றங்கள்தான் உங்களை ஆச்சரியப்படுத்தப் போகின்றது.

பெருவீக்கக் காலத்தில் புடவியின் வெப்பநிலை பத்து மடங்கினால் குறைந்து விட்டது. வெப்பநிலை குறைவடையுமென்றால் அங்கு வெப்பம் இழக்கப்பட்டு இருக்கும் என்பது வெளிப்படையான விடயம். ஆயின், பெருவீக்கத்தின் போது இழக்கப்பட்ட வெப்பத்திற்கு என்ன நடந்திருக்கும்? எளிமையான சிந்தனை ஒன்றினை ஓடவிடுவோம். வெப்பநிலைக் குறைவால் மறைந்த அல்லது இழக்கப்பட்ட வெப்பம் வேறு எங்கும் போக முடியாது, சக்தியாகப் புடவியினுள்ளேயே அகப்பட்டுக் கொண்டது. பெருவீக்கத்தில் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த புடவியிற்கு இவ்வெப்பத்தை என்ன செய்வது என்ற எண்ணம் எழவில்லைப் போலும். அந்த நிலையில், அவ்வளவு சக்தியையும் பேரண்டத்துள் இருந்த கிக்ஸின் புலம் தன்னுள் அடக்கிக் கொண்டது. இந்த விடயம்தான் புடவியின் எதிர் காலத்தை நிர்ணயித்தது.

கிக்ஸ் புலத்தால் வெறுமன சக்தியைச் சும்மா அடக்கி வைத்திருக்க முடியுமா? முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். தருணம் வருவேளை சக்தி எல்லை தாண்டித் தாவும். அதுதான் அங்கும் நடந்தது. அந்த அடக்கப்பட்ட சக்தியின் நடத்தையின் விளைவுதான் பேரண்டத்தின் முக்கிய பெறுமதியாக விஞ்ஞானிகளாற் கருதப் படுகின்றது. அதனைத் தெரிந்து இலகுவிற் கொள்வதற்கு இந்நாட்களில் எங்களால் விளங்கிக் கொள்ளக் கூடிய இயற்கையின் விளையாட்டு ஒன்றினைப் பார்ப்போம்.

தண்ணீர் குளிர்ந்து பனிக்கட்டியாவது எங்களுக்குத் தெரியும். இந்த நிகழ்வினை உற்று நோக்குகையில் ஒரு உண்மை தெரியும் பனியின் வெப்பநிலை பூச்சியம் என்பது நாங்கள் அறிந்தது. தண்ணீரைக் குளிர விடுகையில் அது பனிக்கட்டியாவதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் சூடான தண்ணீரை நாங்கள் குளிர்வித்துக்குக் கொண்டு போகையில் தண்ணீரின் வெப்பநிலை பூச்சியமானதும் தண்ணீர் உடனே பனிக்கட்டியாக மாறிவிடுவதில்லை. சற்று நேரத்தின் பின்னராகத்தான் தண்ணீர் பனிக்கட்டியாகும். இங்கு தண்ணீர் வெப்ப த்தை (சக்தியை) தன்னுள் தேக்கி வைத்திருந்து விட்டுச் சடுதியில் வெப்பத்தைத் தண்ணீருக்கு வெளியே வீசும். அவ்விதம் வீசியதும்தான் அப்பகுதி பனிக்கட்டியாகிவிடும்.

இப்படியான நிலையொன்று பெருவீக்கக் காலத்தின் பின்னராக பேரண்டத்திற்கு ஏற்படுகின்றது. பெருவீக்கக் காலத்தில் அடக்கி வைத்திருந்த சக்தி முழுவதும் அந்தச் சின்னஞ் சிறிய கிரிக்கட் பந்தினளவு புடவியினுள் பீறிட்டுப் பாய்கின்றது. சிறிய இடத்துள் பெருமளவு சக்தி தள்ளி விடப்படுகையில் இயற்கையின் அழகியல் வேலைப் பாடும் மனமனவென்று நடக்கத் தொடங்குகின்றது.



புடவியினுள் சக்தியின் கீற்றுக்கள் பெரு வெளிச்சமாகப் பாய்நது கொண்டு படவி முழுவதும் ஓடித் திரிந்தன. இங்கு சக்தியின் பாச்சல், கதிர்வீச்சாக இருந்தது. இக் கதிர்களே சக்தியைக் காவிக் கொண்டு திரிந்தன. எப்படியெனில் உயர் அதிர்வெண் கொண்ட பெருந்தொகையான காமாக்கதிர்ப் போட்டோன்களாக, E = hf என்பதற்கு இணங்க, சக்தியைக் காவிக் கொண்டு பறந்தன. சக்தியைக் காவுகின்ற துண்டுகளைத்தான் போட்டோன்கள் எனக் கூறுவது என்பது உங்களுக்கு நினைவுக்கு வரலாம்.

இந்நேரத்தில் உங்களுக்கு ஒரு ஐயம் எழலாம். பெருமளவு சக்தி இப்போது போட்டோன்களாப் பாய்ந்து கொண்டு இருக்கின்றது. எனவே, பெருந்தொகைளில் போட்டோன்கள் சீறிப் பாய்ந்து கொண்டு இருக்கும். ஆனால் இருப்பதோ குட்டிப் புடவி. இடநெருக்கடி காரணமாகப் போட்டோன்கள் ஒன்றுடன் ஒன்று மோதியிருக்குமே. ஆம், அது அங்கே நடந்ததுதான். போட்டோன்கள் மோதிக் கொள்ளத்தான் செய்தன. அவை மோதியதும், அடுத்த மாற்றம் நடக்கத் தொடங்கியது. இரண்டு போட்டோன்கள் அதிஉயர் வேகத்தில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ள, மோதிய இடத்தில் இரண்டு துணிக்கைகள் தோன்றின. அயன்ஸ்ரைனின் $E = mC^2$ என்பதற்கு ஏற்ப, போட்டோன்களின் சக்தியிற்கு நிகரான துணிக்கைகள் இரண்டு அங்கே தோன்றின.

சோடியாக இரண்டு துணிக்கைகள் தோன்றினாலும், அங்கொரு சிக்கல். இவ்விரு துணிக்கைகளும் ஒரே மாதிரியானவையாகத்தான் இருந்தன. ஆனால், இயல்பில் ஒன்றுக்கொன்று முரணானவையாக இருந்தன. அதனால், ஒன்றினை துணிக்கை என்றும் மற்றதை முரண்துணிக்கை என்றும் கூறினார்கள். எனவே, போட்டோன்கள் இரண்டின் மோதுகையின் போது, துணிக்கை ஒன்றும் அதன் முரண்துணிக்கையும், தோன்றுகின்றன என்பது தெளிவு. இப்படிச் சக்தி மோதலின் போது துணிக்கையும் அதன் முரண்துணிக்கையும் தோன்றுவதைப் பரிசோதனை மூலமாக இந்நாட்களில் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். இப்படியாகப் பெருவீக்கக் காலத்தின் பின், அதாவது பிக்பாங் பின் $10^{-33}$ செக்கனில் தோன்றிய துணிக்கைகள்தான் பேரண்டத்துள் இன்று காணப்படுகின்ற எல்லாப் பொருட்களுக்குமான அடிப்படைத் துணிக்கைகள் ஆகும்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


பெருவீக்கக் காலத்திகன் பின் புடவியினுள் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த துணிக்கைகள், புரோத்தோன்களோ அல்லது நியூத்திரன்களோ இல்லை. அவற்றையும் கட்டிய இன்னமும் சிறியதான துணிக்கைகளான லெப்ரோன்களும் குவாக்சுகளுமாகும். இவைகளும் வேகமாகவே புடவியினுள் சுற்றித் திரிந்து கொண்டு இருந்தன. இந்நேரத்தில் பெருத்துக் கொண்டிருந்த குட்டிப் பேரண்டம் ஒரே வெளிச்ச மயமாகக் காணப்பட்டது. தீப்பிளம்புகள் போன்ற கீற்றுகளாக சக்தியும், சக்தி மிகுந்த துணிக்கைளும் எல்லா இடங்களுக்கும் ஓடித் திரிந்து கொண்டிருந்தன. அத்துடன், இடம் சிறயதாக இருந்ததால் சக்தி – சக்தி, சக்தி – சடம், சடம் - சடம் மோதல்களும் எந்நேரமும் நடந்து கொண்டே இருந்தன.

சக்தி – சக்தி மோதலில் சடங்களான துணிக்கைகள் தோன்றின என்பதை முன்னரே அறிந்து கொண்டோம். சக்தி – சடம் மோதலினால் சக்தியோ அன்றேல் சடமோ பாதிப்படையவில்லை. தங்களின பாதைகளை மட்டும் மாற்றிக் கொண்டு தெடர்ந்தும் ஓடிக் கொண்டே இருந்தன. ஆனால் சடமும் சடமும் ஒன்றுடன் ஒன்று மோதுகையில் இன்னொரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஒரு துணிக்கையும், அதனது முரண் துணிக்கையும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ள, இயல்பிலே ஒன்றுக்கொன்று முரணான இரண்டும் அங்கு ஒன்றை ஒன்று அழித்துக் கொண்டன. துணிக்கையும் அதன் முரண் துணிக்கையும் ஒன்றுடன் ஒன்று மோதி அழிந்து போவதைப் பொருளழிவு என்கிறார்கள். இப்படியாகப் துணிக்கையும், அதன் முரண்துணிக்கையும் ஒன்றுடன் ஒன்று மோதிப் பொருளழிவுக்கு உள்ளாகுகையில் மீண்டும் சக்தி அவ்விடத்திற் பிறப்பிக்கப் படும். அதாவது இரண்டு போட்டோன்கள் உண்டாகி, கதிர்களாக ஓடித் திரியத் தொடங்கும்.






வாகனம் ஓடும் போது கைத்தொலைபேசி பாவிப்பவர்களினால் ஏற்படும் விபத்து சாதாரணமாக ஏற்படும் விபத்துக்களை விட 4 மடங்காகும் என்பதனைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது.



# நவராத்திரி சுபராத்திரி



நா. க. சிவராமலிங்கம்

சக்தியை குறித்து அனுட்டிக்கப்படும் விரதம் நவராத்திரியாகும். இது ஒன்பது இரவுகள் கொண்டாடப்படுகின்றது. சிவனுக்கு ஓர் இராத்திரி சிவராத்திரி. அவன் தேவிக்கு ஒன்பது இராத்திரிகள் நவராத்திரி. இதனால் தேவியின் சிறப்பும் தேசசும் விளங்கும். பத்தாம் நாள் விஜயதசமி ஆகும். அது வெற்றித் திருநாள்.

கன்னி மாதம் எனப்படும் புரட்டாதி திங்களில் நவராத்திரி விரதம், மாகாளயம், புரட்டாதி சனி விரதம் என்பன வருவதால் புரட்டாதி மாதம் ஆலய வழிபாட்டிற்கு உகந்த மாதமாகும்.

புரட்டாதி மாதத்தில் அமாவாசையை தொடர்ந்து வருகின்ற ஒன்பது நாட்களும் நவராத்திரி எனப்படும். நவராத்திரியில் வரும் அஷ்டமி மாகாஷ்டமி என்றும் நவமி மாகநவமி என்றும் அழைக்கப்படும். எனவே இது மகா நோன்பு என அழைக்கப்படும். சக்தி விரதங்களில் சிறந்தது நவராத்திரி விரதமாகும்.

உலக இயக்கத்திற்கும், உயிர்களது இயக்கத்திற்கும் சக்தி மிகமிக அவசியமாகும். சக்தியின்றி சிவமே இல்லை. எனவே சக்தியின் சுப வல்லமை விளங்கும் சக்தியை பக்தி செய்வதனால் சித்தி கிடைப்பதுடன் முத்திக்கும் வழிபிறக்கும்.

வங்காளத்தில் காளிபூசை எனவும், வட இந்தியாவில் தசாரா எனவும் உத்திரப் பிரதேசம் பஞ்சாப் பகுதிகளில் ராம் லீலை எனவும் மைசூரில் சாமுண்டீஸ்வர பூசை எனவும் கொண்டாடப்படுகின்றது. இவ்வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. இவ்வழிபாடு வீடுதோறும் பண்டுதொட்டே நடைபெற்று வந்துள்ளது. சரத் கால சம்பந்தம் பெற்ற அச்சுவினி மாதத்தில் வருவதால் இதற்கு சாரதா நவராத்திரி என்று பெயர். இதேபோன்று சித்திரை மாதத்தில் வருவது வசந்த நவராத்திரியாகும். இந்தக் காலங்களில் நோய்கள் மலிந்து மக்கள் பாதிப்படைவதினால் நடைபெறும் தேவி பூசையினால் அதனை தடுக்கமுடியும்.

தமிழர் வளம் பெருக்கி விளைவளிக்கும் மண்ணை நிலமகள் என்றார். செல்வத்தை திருமகள் என்றார்கள். கல்வியை கலைமகள் என்றார்கள். வீரத்தை வீரத்திருமகள் அல்லது துர்க்கை என்றார்கள். மக்களுக்கு வீரம், கல்வி, செல்வம் மூன்றும் தேவை என்பதனாலேயே முதல் மூன்று நாட்களும் துர்க்கை வழிபாடாகவும் அடுத்த மூன்று நாட்களும் திருமகள் வழிபாடாகவும் கடைசி மூன்று நாட்களும் கலைமகள் வழிபாடாகவும் கொண்டாடி வருகின்றனர். பத்தாவது நாள் விஜயதசமி அல்லது வெற்றித் திருநாள் எனப்படும். தேவி மகிடாசுரனை வதைத்த நாள். மகிடம் என்பது தாமச குணமாகும். தாமச குணத்தைப் போக்கி சாத்வீத குணத்தைக் கொடுத்த திருநாள். அன்றைய தினம் எல்லா ஆயுதங்களுக்கும் ஓய்வு கொடுத்து ஆயுத பூசை செய்யும் திருநாள். பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்யும் நாளாகும். கலைகள் பயிலும் நாளாகும்.

நவராத்திரி குழந்தைகளுக்கு குதூகலமான நாட்களாகும். இனிப்பு பண்டங்கள் வழங்கல், வீட்டில் கொலு வைத்தல் அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.



சரஸ்வதி முத்தமிழுக்கும் உரியவர். கையில் வைத்திருக்கும் ஒரு இயல் ஏட்டுக் கல்வியையும், வீணை இசையையும், மயில் நடனத்தையும் குறிப்பன. நீர் கலந்த பாலை அன்னப்பட்சிக்கு வைத்தால் அது நீரினை நீக்கிப் பாலினை மட்டுமே அருந்தும். அதேபோன்று நாம் பலவற்றை கற்றாலும் வாழ்க்கைக்கு தேவையான நல் விடயங்களையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்னப்பட்சி குறிக்கின்றது. தூய வெண்மையான ஆடையை சரஸ்வதி அணிந்திருப்பதின் பொருள் மனம், மொழி, மெய், தூய்மையாக இருக்குமிடத்து எல்லாக்கலைகளும் சேரும் என்பதாகும். காளிதாசர், கம்பர், காளமேகர், பாரதியார் கலைமகளின் கடாட்சம் பெற்றவர்கள்.

விஜயதசமி அன்று அரச குடும்பத்தினர் வன்னி மரத்தடிக்குச் சென்று பூஜை செய்வர். இந்த வைபவத்தையொட்டியே அன்று கோயில்களில் அம்பு போடும் உற்சவம் நடைபெறுகின்றது. வன்னிமரம் பாவத்தையும் சத்துருக்களையும் அழிக்கக் கூடியதென்று சொல்வதுண்டு. துர்க்கையின் உருவமென்று வன்னிமரத்தை வர்ணிப்பதுண்டு. பாண்டவர்கள் அஞ்ஞான-வாசத்தின் போது தங்கள் ஆயுதங்களை வன்னி மரத்தின்மேல் ஒளித்து வைத்திருந்து பின்பு எடுத்து சண்டை போட்டு வெற்றி பெற்றனர்.

புராணக் கதைகளின்படி இராமபிரானின் மூதாதையர் ஒருவரே இவ்விழாவை முதன் முதலில் கொண்டாடியிருக்க வேண்டும் என்ற ஒரு ஐதீகம் உண்டு. அவர் அமாவாசை இரவு தொடங்கி பாரதப் புண்ணிய பூமியில் ஓடும் ஒன்பது நதிகளிலிருந்து ஜலத்தை ஒன்பது குடங்களில் கொண்டு வந்து அவற்றில் தேவியின் ஒன்பது அம்சங்களை ஆவாகணம் செய்து ஒவ்வொரு நாளும் ஒரு கன்னிப் பெண்ணை தேவியாக பூஜித்து வந்தார். ஒன்பது நாட்களும் கன்னியாக இருக்கும் அம்பிகை பத்தாம் நாள் சிவனோடு இணைந்து அர்த்தநாரீசுவரராகி விடுவார்.

---



Math tutorial 350

Answers to tutorial 349

1)The loudness level is given by

L=10log $I/I_{0\ for}$ a baby with colic

75=10log$I_C/I_0$=75,therefore $I_C=10^{75}I_0$

For a sleeping baby ,35 = $I_S/I_0$

$I_S=10^{35}I_{0}$ ,comparing the noise level ,by dividing $I_C/I_S=10^4$ , SO THE NOISE LEVEL OF BABY WITH COLIC IS 10000 times as loud as when she is sleeping

2) Let the number of price increase be n,new selling price=100+2n ,number sold =120-n .Profit =Revenue –cost

P(n)=(100+2n)(120-n)-70(120-2n)

P(n)=3600+210n-2n$^2$,P'(n) =210-4n

For maximum P'(n) =0,n=52.5 therefore n= 52or 53 ,so the maximum profit occurs when cd players are sold at $204 for68 and $206 for 67 cd player

3)Eqn. of plane is 2x+3y+kz=0.The plane intersects the xy-plane when z=o'therefore2x+3y=0.Let x=3t,y=-2t

The line of intersection of the plane in the xy plane is the line x=3t ,y=-2t,z=0 .Since this line passes through the origin(t=0) gives the point (0,0,0).The eqn. of line is independent of k

Questions Tutorial350

1)When the coefficient A,B and C in the scalar equation of the plane are the components of a unit normal, what is a geometrical interpretation for the constant D.

2)Find the point of intersection of the plane 3x-2y+5z +18=0 with the line that passes through the origin and is perpendicular to the plane

3)You are given a collection of 20 multiple choice questions ,four each with a possible answers A,B,C,D or E. How many different sets of ten questions can be formed if the set has exactly two questions with each possible answer?

By Mr S.F.Xavier (Teacher)tel 6473409490/4167322228

# கனேடிய...

03 ஆம் பக்கத்தொடர்ச்சி

எப்போதும் அப்போதுள்ள வருமான வரிவிதிகளுக்கு ஏற்ப வரியைச் செலுத்தியுள்ளேன். அதேபோல் தொடர்வேன் என்றார்.

2017 செப்ரெம்பர் 08இல் பழமைவாதக்கட்சியின் தலைவரான Andrew Scheer ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் லிபரல் அரசின் இந்தப் புதிய வருமானவரிச் சட்டத் திருத்தம் குடும்பமாக விவசாயம் செய்பவர்களை (Family Farm) மிகவும் பாதிக்கும் என்றார்.

**கனேடிய அரசின் புதியவருமான வரிச்சட்டத் திருத்தம் பற்றிய CBC ஊடகத்தின் கேள்வி பதில்.**

**1. வணிக நிறுவன உரிமையாளர் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு இப்புதிய சட்டத்தின் மூலம் சம்பளம் வழங்க முடியுமா?**

ஒரு வணிக நிறுவன உரிமையாளர் தனது பாரியாருக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ சம்பளம் வழங்க விரும்பினால் அவர் பல கட்டுப்பாடுகளுக்கு உட்படவேண்டும். அதாவது அவரது பாரியாரோ அல்லது பிள்ளைகளோ அந்த நிறுவனத்தில் உண்மையில் வேலை செய்கிறார் எனவும் என்ன வேலை செய்கிறார் எனவும் உறுதிப்படுத்த வேண்டும்.



உதாரணமாக வணிக நிறுவன உரிமையாளர் தனது மூன்று வயதுக் குழந்தைக்கு $10,000 சம்பளம் வழங்கமுடியாது. ஆனால் மூன்று வயதுக் குழந்தைக்கு $10,000 பெறுமதியான Dividends வழங்கலாம். Dividneds இற்கு உயர்ந்த வருமான வரி உண்டு. இவ்வாறு Ernst & Young Canada நிறுவனத்தைச் சேர்ந்த David Steinberg பதிலளித்துள்ளார்.

**2. ஒருவர் தனது குடும்ப விவசாயப் பண்ணையை தனது குடும்ப உறுப்பினருக்குக் கையளிப்பது இப் புதிய வருமான வரிச்சட்டத்தின் மூலம் கடுமையாக்கப்படுகிறதா?**

குடும்ப விவசாயப்பண்ணைகளை தமது குடும்ப உறுப்பினர்களுக்கு கையளிப்பதை புதிய சட்டமூலம் தடுக்கவும் இல்லை, கடுமையாக்கவும் இல்லை. ஆனால் ஒருவர் தனது வணிக நிறுவனத்தைத் தமது குடும்ப உறுப்பினருக்குக் கையளிப்பது இப்புதிய சட்ட மூலத்தின் மூலம் கடுமையாக்கப்பட்டுள்ளது.

தற்போது குடும்ப உறுப்பினருக்குக் கொடுக்கப்படும் நிறுவனத்திற்கு அவர் மூலதன ஆதாயவரி (Capital gain tax) மட்டுமே கிட்டத்தட்ட 27% கட்ட வேண்டும். ஆனால் புதிய சட்டமூலத்தின்படி அவர் குடும்ப உறுப்பினருக்கு விற்பது போல் கிட்டத்தட்ட 45% வரி கட்டவேண்டும்.

புதிய சட்டத்தின் மூலம் விவசாய நிலத்தை குடும்ப உறுப்பினரிடம் கையளிக்கும்போது அதைப்பெறும் குடும்ப உறுப்பினர் அந்த விவசாயப் பண்ணையை விற்பனை செய்யாவிட்டால் மட்டுமே அவர் வருமானவரி கட்டத்தேவையில்லை. இவ்வாறு David Steinberg பதிலளித்துள்ளார்.

**3. சிறிய வணிக நிறுவனத்தின் உரிமையாளர் தனது வருமானவரியைக் குறைத்துக் கட்டுவதற்காகத் தனது வருவாயின் ஒரு பகுதியை இலாப நோக்கத்திற்காக முதலிட புதிய சட்டத்தில் இடம் உள்ளதா?**

நிறுவனத்தின் உரிமையாளர் வருமானத்தின் ஒரு பகுதியை அதேநிறுவனத்தில் முதலிடவே வருமானவரி குறைவாக அறவிடப்படுகின்றது. அவர் தனது வருமானத்தை இலாபநோக்கத்திற்காக வெளியிடத்தில் முதலிட விரும்பினால் அந்த வருமானத்திற்கு Dividends இற்கு உரிய வருமானவரி கட்டியபின்னர் அதை இலாபநோக்கத்திற்காக எங்கேயும் முதலிடலாம். இவ்வாறு பதிலளித்த Pricewater house coopers ஐச் சேர்ந்த James Satar நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பலருக்கு வேலைகள் வழங்கி வணிக நிறுவனங்களை உருவாக்கியோரை அவர்கள் தங்கள் முதலீடுகளை தமது நிறுவனத்திலா அல்லது வேறு எங்காவதா முதலிடுகிறார்கள் எனக் கண்காணிப்பது ஒரு நல்ல முயற்சியாகத் தெரியவில்லை என்றார்.

## மகாநாயக்கர்களுடனான...

08 ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவராக செயற்படவில்லை- அவர் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற நிலை யிலேயே செயற்படுகின்றார் என தமிழ் தரப்பு அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர். இந்நிலையில் சம்பந்தனின் நிலை சிக்கலானது தான். அவர் இப்போது சிங்களத் தரப்பிடமும் தமிழ் மக்களிடமும் வெளிப்படையாக, திறந்த மனதுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்த அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டால் நாடு பிளவுபடுத்தப்பட்டு விடும் என்கின்ற உயர் அச்சத்தை சிங்கள மக்கள் மத்தியில், சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகள் ஏற்படுத்தி வரும் நிலையில், சிங்கள மக்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும் மகாநாயக்கர்களை சந்தித்து விளக்கங்களை அளித்து அவர்களைக் கொண்டே சிங்கள மக்களுக்கு தெளிவான கருத்துக்களை முன்வைக்கும் நிலையினை உருவாக்கினால் அது சிறந்தொரு சாணக்கியம் மிக்க செயற்பாடே.

போர் முடிவு பெற்றதன் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் அமோக வெற்றிபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு அப்போதே சிங்கள மக்களுடனான கலந்துரையாடலுக்கான பொறிமுறையொன்றை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அல்லது, ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னரான சூழலில் அதனை ஆரம்பித்திருக்க வேண்டும். இன்றைய நகர்வுகள் மிகவும் தாமதமானதே.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலகட்டங்களில் விடுதலைப்புலிகள் இவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தார்கள். தமிழ், சிங்களக் கலைஞர்கள்- எழுத்தாளர்களை ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில், வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட 'மானுடத்தின் கூடல்' என்ற மாநாடு இதில் முக்கியமானது. அதற்கு அடுத்ததாக 'தமிழ் சிங்களக் கலைக்கூடல்' என்ற நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது. சிங்களக் கலைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த நிகழ்வில் வடக்கு கிழக்கிலுள்ள கலைஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.



கொழும்பு நகரசபை மண்டபத்தில் அந்த நிகழ்வு நடைபெற்றது. அப்போது அங்கு குழப்பம் விளைவிக்க வந்த ஹெல உறுமய அமைப்பைச் சேர்ந்தவர்கள் சிங்களக் கலைஞர்களால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது. விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட 'தேதுன்ன' என்ற சிங்களப் பத்திரிகையின் வகிபாகமும் முக்கியமானதொன்று. பின்னர் இவையெல்லாம் போருக்குள் புதைந்துபோன வரலாறு துன்பியலானதே.

எனவே, தற்போது பௌத்த அமைப்புக்களோடு மேற்கொள்ளப்படுகின்ற தொடர் பாடல்கள், தெளிவூட்டல்கள் தேவையான-தொன்றுதான். அது நாம் எதிர்பார்க்கின்ற பலனைத் தருமா இல்லையா என்பதை முன்கூட்டியே கற்பனை செய்து பார்ப்பதை விடவும், இதற்கான முயற்சிகளை மேற்கொள்வதில் தவறில்லை.

## ஜெகத் ஜெயசூரிய...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

வலியுறுத்தியுள்ளார். சரத் பொன்சேகாவினால் முன்வைக்கப்பட்டு ள்ள அறிக்கை ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இலங்கைக்கு எதிரான செயற்படும் குழுவுக்கு முக்கிய சாட்சியாக மாறியுள்ளதாகவும், போரில் நேரடியாக பங்களிப்புச் செய்த ஓர் இராணுவ தளபதியினால் முன்வைக்கப்படும் அறிக்கை அதி முக்கியமானதாக கருதப்படும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா சுட்டிக்காட்டியுள்ளார். உலகிலுள்ள எந்தவொரு முன்னாள் இராணுவத் தளபதியும் இதுபோன்ற ஒரு அறிவிப்பை விடுத்ததில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஜெகத் ஜயசூரிய விடயத்தில் பொன்சேகா குறிப்பிட்ட கருத்துகள் தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாகக் கவனம் செலுத்தி என்ன நடந்துள்ளது என்பதை அறிய வேண்டும் எனவும் அவர் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும், மனித உரிமை மீறல்கள் தொடர் பில் விசாரணை நடத்த சர்வதேச பங்களிப்பு தேவை என தமிழ் மக்களும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் வலியுறு த்தி வருகின்ற நிலையில், வெளிநாட்டு தலையீட்டிற்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் உறுதியாக தெரிவித்து வருகின்றது. ஆனால் ஜெகத் ஜெயசூரிய மீதான குற்றச்சாட்டும் அதனை உறுதிப்படு த்தும் சரத் பொன்சேகாவின் கருத்துக்களும் போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச பங்களிப்பு கட்டாயம் தேவை என்பதையே இப்போது உணர்த்தி நிற்கின்றது.

## நான் அரசியலுக்கு ...

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

'நூறாவது நாள்' (திகில் கதை), 'அமைதிப் படை' (அரசியல் கதை), 'சின்னத் தம்பி பெரிய தம்பி' (கிராமத்து கதை), 'முதல் வசந்தம்' (கதாநாயகனே இல்லாத படம்) _ இப்படி எதைத் தொட்டாலும் 175 நாட்கள் படம் வைத்திருப்பவர் மணிவண்ணன். இது போல் இருபது வருடம் கழித்து கரு. பழனியப்பன் என்கிற ஃபைலை எந்த அலமாரியில் வைப்பது என்ற தெரியாமல் தடுமாறனும் அதுதான் என் விருப்பம்.

**உங்களைக் கவர்ந்த ஒரே ஒரு புத்தகத்தைக் கேட்டால் எதைச் சொல்வீர்கள்?**

திருக்குறள்தான். இதுபோல் ஒரு நூல் வேறு எந்த மொழிகளிலும் கிடையாது. திருக்குறள் ஓர் ஆச்சரியம். நம் தாய் மொழியில் இருப்பதாலேயே அதனை நாம் கவனிக்காமல் இருக்கிறோம். அம்மாவைக் கவனிக்காதது மாதிரி. மிகச் சிறந்த காதல் கவிதைகள் திருக்குறளில்தான் இருக்கிறது.



உலகின் முதல் டிவிட்டர் வள்ளுவர்தான். அவருக்கு தெரிந்திருக்கிறது, இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு வரப்போகிறவர்கள் இவ்வளவுதான் படிப்பார்கள் என்று. ஒன்னே முக்கால் அடிக்குள் உவமை, பொருள் வைத்து எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறார்.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# பென்ஸ் கார் உருவான கதை



சுந்தரம் இந்திரராஜா

கார்ல் பென்ஸ் (Karl Benz) பெட்ரோலில் இயங்கும் காரை உலகில் முதன்முதலில் உருவாக்கியவர் என்கிற பெருமை பெற்ற வர். சில பென்ஸ் மொடல்கள் அதிகபட்சம் 210 kmph வேகத்தில் செல்லக் கூடியவை. சில பென்ஸ் மொடல்கள் பாதுகாப்பு அம் சங்களுக்காக பல விருதுகளை வென்று ள்ளன. பல சிறப்புக்கள் பென்ஸ்ஸில் காண ப்படுவதால் மதிப்பும் அதிகம், விலையும் அதிகம். மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனம், கார் உற்பத்தி நிறுவனங்களில் முன்னணி நிறுவனமாக விளங்கி வருகின்றது. பென்ஸ் காருக்கு தனித் தன்மை உண்டு. அக்காரை வைத்திருப்பவர்க ளுக்கும் பெரும் பணக்காரர்கள் என்ற தனித் தன்மை உண்டு. பெட்ரோலில் இயங்கும் காரை முதன் முதலில் உருவாக்கிய பெருமகனைப் பற்றிய சில தகவல்களை அறிந்து வைத்திருப்போம்.

பென்ஸ் கார் நிறுவனத்தின் நிறுவனர் மறைந்த கார்ல் பென்ஸ் நொவம்பர் 25, 1844ஆம் ஆண்டில் தற்போதைய நவீன ஜெர்மனியின் அங்கமாக விளங்கும் கார்ல் ஸ்ரூஹேவில் Karlsruhe உள்ள முல்பர்க் (Mühlburg) என்ற இடத்தில் பிறந்தார். கார்ல் பென்ஸின் இயற்பெயர் கார்ல் ப்ரைட்ரிச் மைக்கேல் வைல்லேண்ட் (Karl Friedrich Michael Vaillant) என்பதாகும். கார்ல் பென்ஸ் பல்துறை வித்தகராகவும், இஞ்ஜின் டிசைனராகவும், சிறந்த இஞ்ஜினியராகவும் விளங்கினார்.

கார்ல் பென்ஸிற்கு 2 வயது இருக்கும் போது, அவரது தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்தார். பென்ஸின் குடும்பம் ஏழ்மையான நிலையில் இருந்த போதும், அவரின் தாயார், கார்ல் இற்கு நல்ல கல்வி வழங்கு வதற்கான ஏற்பாடுகளை செய்தார். கார்ல் ரூஹே என்ற இடத்தில் தனது கல்வியை துவங்கிய பென்ஸ், பிற்காலத்தில், பாலி டெக்னிக் பல்கலைகழகத்தில் படித்தார். முதலில் பூட்டு செய்யும் தொழிலைக் கற்ற பென்ஸ், அவரது தந்தையாரின் லோ-கோமோட்டிவ் இஞ்ஜினியரிங் துறையில் தடம் பதித்தார். புத்திசாலியாக இருந்த பென்ஸ், 1860 ஆம் ஆண்டில் தனது 15 ஆம் வயதில் கார்ல்ஸ்ரூஹேவில் மெக்கா னிக்கல் இஞ்ஜினியரிங் படிப்பிற்கான நுழைவு தேர்வில் தேறிவிட்டார். பென்ஸ், 1864ஆம் ஆண்டில், தனது 19 ஆம் வயதில் இஞ்ஜினியரிங் பட்டம் பெற்றார்.

கார்ல் பென்ஸ், தனது சைக்கிளை ஓட்டிக் கொண்டிருக்கும்போது, குதிரைகள் இல்லா மல் இயங்கக்கூடிய வாகனம் குறித்த சிந்த னைகளில் மூழ்கத் தொடங்கினார். அவரது முறையான கல்வியை அடுத்து, பல்வேறு நிறுவனங்களில் 7 வருடங்கள் பணி புரிந் தார். பின்னர், மீண்டும் கார்ல்ஸ்ரூஹேவில் இருந்த மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கம்பெனியில் இரு வருடங்கள் வேலை செய்தார். சிலகாலம், ஸ்கேல்ஸ் தொழிற் சாலையில் படவரைஞராகவும் மற்றும் டிசை னர் பணியிலும் இருந்தார். பின்னர் மேம் பாலம் கட்டும் பணியிலும் இருந்த அவர், ஆஸ்திரியாவின் வியன்னா சென்று அங்கு ஒரு இரும்பு கொன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி யிலும் பணி புரிந்தார்.

கார்ல் பென்ஸ் 1871 இல், தனது 27 ஆவது வயதில், ஆகஸ்ட் ரிட்டர் (August Ritter) என்றவருடன் இணைந்து மான் ஹைம் (Mannheim) என்ற இடத்தில் இரு ம்பு உருக்கும் மற்றும் மெக்கானிக்கல் வேக் ஷொப்பை (Iron Foundry and Mecha ni cal Workshop) நிறுவினர். இந்த வேக் ஷொப் (Workshop) சரியாக இயங்காத காரணத்தாலும், ரிட்டர் (Ritter) பாதியி லேயே விலகிவிட்டார்.



கார்ல் பென்ஸின் முதல் வேக் ஷொப் சரி யாக இயங்காமல் ரிட்டர் விலகிச் சென்ற நேரத்தில், பென்ஸின் வருங்கால மனைவி யாக இருந்த பெர்தா ரிங்கர் (Bertha Ringer) அவரது வரதட்ஷனைப் பணத்தைக் கொண்டு பென்ஸின் வேக் ஷொப்பை பலம் மிக்க நிலைக்கு மீட்டு கொண்டு வந்தார். கார்ல் பென்ஸ் மற்றும் பெர்தா ரிங்கர் ஜூலை 20, 1872இல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு, யூஜீன் (Eugen), ரிச்சர்ட் (Richard), கிளாரா (Clara) , தில்டே (Thilde), எல்லென் (Ellen) என ஐந்து குழந்தைகள் பிறந்தனர்.

கார்ல் பென்ஸ், பல்வேறு விதமான வியத்தகு கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள் ளார். பல்வேறு நிதி சிக்கல்கள் மற்றும் பிற சிக்கல்கள் தொடர்ந்து கொண்டே இருந்த தால், கார்ல் பென்ஸ் மற்றும் அவரது மனைவியும் அவர்களுக்கு சொந்தமான வேக் ஷொப்பை நிர்வகித்துக் கொண்டே, புதிய கண்டுபிடிப்புகளில் முழு வீச்சாக இறங்கினர். முதல்படியாக, பென்ஸ் நம்பக மான 2 ஸ்ட்ரோக் (two-stroke engine) பெட்ரோல் இஞ்ஜினை உருவாக்கும் முயற் சியில் இறங்கி, டிசம்பர் 31, 1878 ஆம் ஆண்டில் 2 ஸ்ட்ரோக் இஞ்ஜினை கண்டு பிடித்தார். இதற்கான காப்பு உரிமத்தை 1879 ஆம் ஆண்டில் பெற்றார். அதன் பின்னர், 2-ஸ்ட்ரோக் இஞ்ஜினுக்கு மிக முக்கியமான அம்சங்களான ஸ்பீட் ரெகுலேஷன் சிஸ்டம், பேட்டரிகளின் உதவி யுடன் ஸ்பார்க்கினால் உருவாகும் இக்னி ஷன் (ignition), ஸ்பார்க் பிளக், கார் புரேட்டர் (carburetor), கிளட்ச் (clutch), கியர் ஷிஃப்ட் (gear shift), வாட்டர் ரேடி-யேட்டர் (water radiator) உள்ளிட்ட பல்வேறு கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினர். இதற்கான காப்பு உரிமங்களையும் பெற்றார்.

கார்ல் பென்ஸ், ஆட்டோமோபைல் துறை யில் பல்வேறு கண்டுபிடிப்புகளை நிகழ்த் தியுள்ளார். முதன் முதலாக, அவரது முதல் இஞ்ஜினுக்கு 1879 ஆம் ஆண்டு காப்பு உரிமத்தைப் பெற்றார். அடுத்தபடியாக, முதல் ஆட்டோமொபைலை கண்டுபிடித்த தற்காக 1886 ஆம் ஆண்டில் காப்பு உரிமத்தை பெற்றார். 1895 ஆம் ஆண்டில் கார்ல் பென்ஸ் தான் உலகின் முதல் டிரக் கையும் (truck) வடிவமைத்தார். இந்த டிரக் கின் சில அம்சங்கள், முதல் மோட்டார் பஸ் கம்பெனியான நெட்ஃபெனர் (Net-phener) நிறுவனத்தால் மறுவடிவமைக்கப் பட்டு, பஸ்களாக மாற்றப்பட்டன.

உலகின் முதல் ஆட்டோமொபைல் பந்தயம் 1894 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இது பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரில் இருந்து, ரூயன் என்ற நகரம் வரை நடைபெற்றது. இதில், பென்ஸ் வடிவமைத்த தி பென்ஸ் வெலோ என்ற வாகனம் பங்கேற்று, 126 கிலோமீட்டர் என்ற பந்தய தூரத்தை 10 மணி நேரம், ஒரு நிமிட நேரத்தில் சென்ற டைந்தது. இது 14 ஆவது இடத்தையே பிடித்தாலும், அந்தக் காலத்திலேயே மணி க்கு 12.7 கிலோமீட்டர் வேகத்தில் சென்றது குறிப்பிடத்தக்கது.

1896 ஆம் ஆண்டில், முதல் பிளாட் இஞ் ஜின் (Flat Engine) கண்டுபிடித்ததற்காக, கார்ல் பென்ஸ் அதற்கான காப்பு உரிமத்தை பெற்றார். இது ஹாரிசாண்டல் (Horizontal) அமைப்பில் எதிர் திசைகளில் (oppose) நோக்கியுள்ள பிஸ்டன்களை (pis-tons) கொண்டிருந்தது. 4 அல்லது அதற்கு கூடுதலான சிலிண்டர்கள் கொண்ட இஞ்ஜி ன்கள், பாக்ஸர் இஞ்ஜின் அல்லது பாக் ஸர் மோட்டார் என்றும் அழைக்கப்பட்டது. இவ்வகை பாக்ஸர் இஞ்ஜின்கள், பி.எம். டபுள்யூ. (BMW) மோட்டார் சைக்கிள்கள், போர்ஷே (Porsche), சுபரு (Subaru), உள் ளிட்ட பல நிறுவனங்களின் உயர்திறன் கொண்ட ரேசிங் கார்களில் இன்றும் பயன் படுத்தப்படுகிறது. கார்ல் பென்ஸ் 84 வயது வரை வாழ்ந்தார்.

1944 ஆம் ஆண்டில், தனது 95 வது



பிறந்த நாள் அன்று, கார்ல் பென்ஸ் இன் மனைவியும் கண்டுபிடிப்புக்கு உதவிய பங் காளியுமான பெர்தா பென்ஸ் (Bertha Be nz) கார்ல்ஸ்ரூ தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தால் (Technical University of Karl-sruhe) மாண்புமிகு செனட்டர் என்ற கௌ ரவப் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். அவரது கணவரும் அன்று கௌரவ டாக்டர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். இப்பட்ட மளிப்பு நடைபெற்று இரண்டு நாட்கள் கழித்து, பெர்தா பென்ஸ் லாடன்பேர்க்கில் (Ladenburg) உள்ள அவரது இல்லத்தில் உயிர் துறந்தார்.

# நவராத்திரி விழா



வேண்டும்வரம் அருளும் முப்பெரும்தேவியரான
துர்க்கா, லஷ்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரிடமும்
வரம் வேண்டித் துதிப்போர் எடுக்கும் விழாவே
நவராத்திரி விழா.

வீரம்வேண்டித் துதிப்போர்க்கு வீரத்துக்கு அதிபதியாய்
சிம்மத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தேவியான
மூத்தவளும் சிவசக்திவடிவம் கொண்ட துர்க்கைக்கு
முதல் மூன்று இரவுகள் பூசைகள்.

செல்வம் வேண்டித் துதிப்போர் செல்வத்துக்கு அதிபதியாய்
செந்தூரப்பொட்டிட்டு செந்தாமரைபூவில் வீற்றிருந்து
வேண்டுவோர்க்கு வேண்டும் அருள் பாலிக்கும் தேவியான
லஷ்சுமிக்கு அடுத்த மூன்று இரவுகள் பூசைகள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் வேண்டித்துதிப்போரு
வெள்ளை உடை உடுத்தி வெண்டாமரைப்பூவில் வீணை
கையில் ஏந்திய வண்ணம் வீற்றிருக்கும் சரஸ்வதி தேவிக்கு
இறுதி மூன்று இரவுகள் பூசைகள்

கல்வியா?, செல்வமா? வீரமா? வேண்டும்வரம் தரும்
தேவியர் மூவரிடமும் விரதமிருந்து வேண்டுவோம் வாரீர்!



கவிநாதம் பரந்தாமன்

# மதுப்பழக்கம்...

13 ஆம் பக்கத்தொடர்ச்சி


நச்சுப்பொருட்களை அகற்றுகிறது. ஆரம்பத்தில் ஈரல் சரியாக செயல்ப்பட்டாலும் இறுதியில் தோற்றுப்போகிறது. ஈரல் நோய் (Cirrh osis) வந்துவிட்டால் இறப்பு நேர்ந்துவிடலாம். அத்துடன் சிலர் இதயக்குழல் வியாதி களாலும், மைய நரம்பு மண்டல சேதம் பாதிப்புறுவதால் கஷ்டப்படுவர். தற்போது ஆண்களுக்கு இணையாக பெண்களும் குடிக்கிறார்கள்.

நீண்டகாலத்திற்கு மது அருந்தினால் பல வகையான மனநல பாதிப்புக்களுக்கு உள்ளாகலாம். உடலில் நச்சுத்தன்மை கூடும். மூளையின் செயல்பாடுபாதிப்புறும். உளப் பிணி, குழப்பம், மனப்பித்து மனச்சோர்வு என்பன ஏற்படும். குடிப்பவர்களுக்கிடையே 25 வீதமான மக்கள் கடுமையான மனச்சீர் குலைவால் அவதியுறுகின்றனர். மூளையின் நரம்புவேதியல் (Neurochemical) முறை பாதிப்புறலாம். மதுஅருந்துவதனை நிறுத்தினால் கூட பிரச்சினைகள் எழலாம். வேறு மருந்துகளை பாவிப்பதால் பலகுறைபாடுகள் எழலாம். பலர் தற்கொலைகள் செய்ய முயற்சிப்பார்கள். 25 வீதமான இளம் வயதினர் மதுவை தவறாக பயன்படுத்தியதால் தற்கொலைக்கு முயன்றுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

சமூகரீதியாகவும் பல பிரச்சினைகள் மதுவினால் எழலாம். தனிமனிதனின் ஆளுமை பாதிக்கப்படுவதால் வன்முறையில் ஈடுபடுத்தும், மனைவியை துன்புறுத்துவதில் ஈடுபடுகின்றனர். மூன்றில் ஒரு பங்கினர் மதுவினால் வன்முறையாளராகின்றனர். வேலை இழப்பு, கடனாளியாதல், களவெடுத்தல், தன்மானம் இழத்தல், ஏற்படலாம். சமுதாய மட்டத்தில் குடும்பப் பிரச்சினைகள், திருமண முறிவுகள், சண்டை சச்சரவுகள், சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. கற்பழிப்பு இந்த குடிப்பவர்களால் அதிகம் நிகழ்கிறது. பலர் சிறைக்கு செல்லவும் நேரிடுகிறது. பெண்கள் கூட மது அருந்தினால் கரு பாதிப்பு நோய்க் கூட்டறிகுறி ஏற்படலாம். மதுவுக்காக சொந்த வருமானத்தில் பெருமளவை செலவு செய்து விடுபவர்களும் உளர். கனடாவில் 41 வீத செலவுக்கு மதுவுக்கு போகிறது என அறிக்கைகள் உள.

உலக சுகாதார நிறுவனம் 4 வகையான மது பாவனை நிலைகளை வகுத்துள்ளது. முதலாவது கெடுதி விளைவிக்காத, மதுப் பாவனை (No Risk Alcoholism). இது பொதுவாக வரம்புக்கு உட்பட்டது ஒன்றாகும். சில முக்கிய வேளைகளில் நடைபெறும் விருந்துகளில் மது அருந்தும் முறை (Social Drinking), இரண்டாவது கேடு விளைவிக்கக்கூடிய பாவனை. Hang (HAZARDO US USE) இது பாவனை வரம்புக்கு ஓரளவு மிகையாகக் குடிப்பதனைக் குறிக்கும். இவர்கள் மது அருந்துவதில் கவனம் வேண்டும். மூன்றாவது கேடு விளைவிக்கும் குடிப்பழக் கம் (Harmful Drinking) இந்த சந்தர்ப்பத்தில் மதுசாரம் உடல் உள ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கிறது. அடுத்த நிலை மதுச்சார்பு நிலையாகும். இது மிதமிஞ்சிய குடியும் தொடர்ந்தும் பாவிக்க முயல்வதாகும். மதுவுக்கு அடிமையாதல் (Addiction) இந்நிலையாகும். இதனை ஒரு நோயாகவும் கருதலாம். ஆங்கிலத்தில் Alcohol Dependence Syndrome எனலாம். இது மது இல்லாமல் வாழ முடியாத நிலைக்கு கொண்டு செல்வதாகும். மதுசார்பு நிலை இதுவாகும்.

(3Brm, 3Bath) Brand new, Large family Room in Basement Open Concept Kitchen, Easy To Commute To 407, University, Schools, Restaurants, Shopping. **[Asking $1800/m]**

***Oshawa – King St. E / Harmony Rd S– Full House**
(4+2Brm, 2Bath) In-Law Suite On Main Level With Sep. Kitchen & Upgraded Floors. Finished Bmnt, Mins To 401 & Steps From Transit. Facing Park Ideal For Walking & Biking, Close To: Transit, Good Schools **[Asking $1900/m]**

watsonpm1989@gmail.com

## MANAGING RESIDENTIAL PROPERTIES

Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Watson: 416-417-8432

# We make it easy for you to be a Landlord!

**OUR SERVICES INCLUDE:**

- Marketing, listing and showing properties
- Answering lease enquiries
- Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant
- Property inspections before and after renting
- Handle tenant enquiries
- rent collection and deposit to Landlord
- Eviction of bad tenants
- Scheduling Maintenance and repairs of property
- Year end accounting
- Renewal of lease
- Market value update

**You can relax while we take care of your investment property!**

WATSON PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9

## A+ DRIVING SCHOOL

For all your driving educational needs

*Thava Nagaratnam*

*(Govt. Licensed In - Car Instructor)*

**416.473.6155**

***www.aplusdriving.ca***



## PRIEST SERVICE FOR HINDU COMMUNITY

South Indian Style (Telugu, Tamil, Kannada)

Toronto, Brampton, Mississauga, Markham, Hamilton, Waterloo, Brantford, Ajax, Whitby, Oshawa,

SERVICES OFFERED

*Gruhapravesam and Sathyanarayanaswami Puja/ Katha ;Navagraha Puja/Homam, Lakshmi Ganesh Puja/Yagna, Shiva Puja and Rudrabhishekam; Mahavishnu Puja/Yagnam Annaprasana,Namakaranam, Grahadosham puja, Baby shower/Marriage/Engagement*

**Call: Pt. Raghu Ram Sarma: 647 201 1086**

pujaservice17@gmail.com

## CARS, VANS & TRUCKS WANTED

Any make, Any condition.

Pay top dollars.

Contact: 416.835.3475

## வேலைக்கு ஆட்கள் தேவை

**MARKHAM & STEELES**

**LINGAM CREAM HOUSE**

- ✔ COUSTOMER SERVICE
- ✔ SRILANKAN /SOUTH INDIAN COOK
- ✔ அப்பம் செய்யத் தெரிந்தவர்கள்

முழு நேர / பகுதி நேர வேலைக்கு ஆட்கள் தேவை

தொடர்புகளுக்கு:

**416.879.4190**

**LINGAM CREAM HOUSE**

**6055 Steeles Ave E, Scarborough, ON M1X 0A7**

## RESTAURANT FOR SALE / RENT

***NEWLY RENOVATED RESTAURANT IN BANCROFT***

with all equipments & appliances.

Two housrs drive from toronto.

Very low rent / 33 seats dine in / LLB license.

CONTACT: **416.230.0848**

## HELP WANTED

Dishwasher / Cleaner / Delip prep.

Flexible hourse: Monday to Saturday

Lacation : Yorkdale

Contact: ***416.783.4595***

## *CLEANING* வேலைக்கு ஆட்கள் தேவை

**Full Time Cleaners** தேவை. நல்ல அனுபவமுள்ள ஆண்கள் உடனடியாகத் தேவை. கார் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: ***416.471.4465 / 416.400.6904***

அலுவலக நேரம்: 10:00 - 3:00

***PPS GROUP INC.***

***4544 SHEPPARD AVE. EAST, SCARBOROUGH, ONTARIO M1S 1V2***

***Email: info@ppsgroupinc.com***

## DRIVER WANTED

***Markham Boxgrove*** பகுதியில் இருந்து MDHS பாடசாலைக்கு Pick & Drop செய்வதற்கு தகுந்த ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். செப்டெம்பரில் இருந்து உடனடியாகத் தேவை.

***647.242.9455 / 647.821.3533***

## CAR FOR SALE

2007 Grey colour 4 door toyota camry.

power door sunroof, winter tire.

1,97,000km. price $5,300

Contact: ***647.836.3043***

## RENT - OFFICE ROOMS

**1 - 7 EASTVALE DRIVE MARKHAM & STEELES**

Suitable For Real Estate / Mortgage / Insurance Agents & Law Office.

Ample Free Parking Anytime. Rent From $500/Month

*Call:* ***416.464.3551***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32

# காலச்சுவடு இதழின் ஆசிரியர் சுகுமாரனுடனான செவ்வி

## நேர்காணல்: ரதன்


கடந்த இதழின் தொடர்ச்சி...

8. மலையாளக் கவிதை உலகம் எவ்வாறு உள்ளது. தமிழ்க் கவிதையுலகுடன் ஒப்பிடும் பொழுது என்ன மாற்றங்கள் அங்கு நிகழ்ந்துள்ளன?

மிக ஆரோக்கியமாகவே உள்ளது. புதிய தலைமுறையின் முயற்சிகள் உற்சாகமளிப் பவையாகவும் அவர்களின் கவிதையில் தென்படும் சுதந்திரம் பொறாமை தருவதாக வும் இருக்கின்றது. தமிழ்க் கவிதையுடன் ஒப்பிட்டு மாற்றங்களைச் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. இரண்டும் வெவ் வேறு மொழிப் புலங்களையும் பண்பாட்டுப் பின்னணியையும் கொண்டவை என்பதால் ஒப்பீடு அவ்வளவு எளிதானது இல்லை. மலையாளக் கவிதையில் இன்னும் ரொமா ண்டிசிசத்தின் பாதிப்பு தொடர்ந்து கொண் டிருக்கிறது. மரபான செய்யுள் வடிவங்கள் புதியவர்களாலும் கைவிடப்படவில்லை. அதே சமயம் மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டிரு க்கின்றன. கவிதையை அதன் இசையுடன் பாடுவது - சொல்லுதல் என்று மலையாளத் தில் - வழக்கம். அதனால் கவிதைகள் கருப் பொருளுக்குப் பொருந்தாத விதத்தில் நீண்டவையாகவும் அரட்டைத்தன்மையாக வும் தென்பட்டிருந்தன. புதிய கவிதைகள் கச்சிதமானவையாகவும் அநாவசிய அலங் காரமில்லாதவையாகவும் மாறியிருக்கின்றன என்பது என் அவதானிப்பு. எல்லா மொழி களிலும் கவிதையில் பெண்கள், ஒடுக்கப் பட்டவர்கள், தலித்துகள் குரல்களுக்கு முக் கியத்துவம் கிடைத்திருப்பதுபோல இங்கும் நிகழ்ந்திருக்கிறது. சரியாகச் சொன்னால் மலையாளக் கவிதை இப்போதுதான் நவீன மலையாளி வாழ்க்கையை அப்பட்டமாகச் சித்தரிக்கிறது.

9. திருவனந்தபுரத்தில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு பல தடவை சென்றுள்ளீர்கள். இத்திரைப்பட விழாவில் உங்களை கவர்ந்த முக்கிய படங்கள் என்ன? இத்திரைப்படவிழா மலை யாளத் திரைப்பட உலகிற்கு என்ன முக்கிய பங்களிப்பை செய்துள்ளது? சென்னை திரைப்பட விழாவில் திருவனந்தபுரத்துடன் ஒப்பிடும் பொழுது என்ன மாற்றங்கள் செய்யப்படவேண்டும்?

2000 ஆவது ஆண்டு திருவனந்தபுரத்தில் குடியேறினேன். அதற்கு அடுத்த ஆண்டு முதல் - இடையில் இரண்டு ஆண்டுகள் தவிர - எல்லா ஆண்டும் திரைப்பட விழா வில் பார்வையாளனாகப் பங்கேற்றிருக் கிறேன். ஒருமுறை விழாவில் சராசரியாகப் பதினைந்து படங்களையாவது பார்த்து விடு கிறேன். அப்படி இதுவரை 200 இலிருந்து முந்நூறு படங்கள் பார்த்திருக்கலாம். அவ ற்றிலிருந்து என்னைக் கவர்ந்தவை என்று தேர்ந்தெடுத்துச் சொல்லுவது இயலாத



காரியம். அந்தந்த ஆண்டு மனநிலையைப் பொறுத்தே படங்களைத் தேர்வு செய்கி றேன். சில சமயம் கிளாஸிக்குகளாகவும் சில சமயம் ஒரே இயக்குநரின் படங்களாக வும் ஒரே நாட்டில் தயாரிக்கப்பட்ட படங்க ளாகவும் மீள் பார்வைப் படங்களாகவும் பட்டியல் அமையும். அது அந்த நாளைய மனப்போக்கை ஒட்டியது. பல அரிய படங்களைப் பார்த்திருக்கிறேன் என்று பொதுவாகச் சொல்லலாம். சில படைப்பாளி கள் மீது ஏற்கனவே இருந்த காதல் வலுப் படவும் சில புதிய காதல்கள் உருவாகவும் இந்த விழா எனக்கு உதவியிருக்கிறது. அப்பாஸ் கியரோஸ்தமி, தாமினே மிலானி, அஸ்கர் ஃபராதி,கிம் கி டுக், ஜோதரோவ் ஸ்கி போன்றவர்களின் படங்களை நான் காணக் கிடைத்தது இந்தத் திரைப்பட விழாத் தேடலில்தான். வங்காள இயக்குநர் ரிதுபர்ணகோஷ் நண்பரானதும் இந்த விழா வில் பார்த்த படங்களின் மூலமே. என் னைக் கவர்ந்தவை என்று இதுவரை விழா வில் பார்த்தவற்றிலிருந்து குறைந்தது ஐம் பது படங்களையாவது சொல்ல முடியும். என்னை சலனமற்று அமரச் செய்த படங் கள் எவை என்று இந்தக் கேள்வியினூடே யோசிக்கும்போது உடனடியாக நினைவுக்கு வருபவை இவை. "டு தி லெஃட் ஆஃப் மை ஃபாதர் "(பிரேசில்/ லூயிஸ் ஃபெர்னா ண்டோ கார்வால்ஹோ), பொயட் ரி (கொரி யா/ லீ சாங்க் டாங்), ஃபத்மா (டுனிசியா / காலித் கோர்பால்), செபரேஷன் (ஈரான்/ அஸ்கர் ஃபராதி). இவற்றின் ஒவ்வொரு ஃப்ரேமும் மனதில் ஓடுகின்றன. இவை மாதிரிகள் மட்டுமே.

திருவனந்தபுரம் சர்வதேசத் திரைப்பட விழா கேரள அரசால் நடத்தப்படுகிறது. இன்று அதற்கு உலகளாவிய மதிப்பு உள்ளது. அந்த மதிப்பைத் தக்கவைத்துக் கொள் ளும் சில மலையாளப் படங்களையாவது ஒவ்வொரு ஆண்டும் மலையாள இயக்கு நர்கள் எடுக்கிறார்கள். இது விழாவின் தூண்டுதல் என்றுதான் நினைக்கிறேன். வெறும் வணிக சினிமாக்களுக்கு இடையி லும் பார்வையாளனை மதிக்கும் சில படங் கள் உருவாகவும் விழா உதவுகிறது. இதுவே முக்கியமான பங்களிப்பு. கூடவே திருவனந்தபுரம் திரைப்பட விழாவின் பார்வையாளர்களில் சரிபாதி இளைஞர்கள். அவர்கள் மூலம் புதிய ஒரு திரைப்படக் கலாச்சாரம் உருவாகியிருக்கிறது.

சென்னை திரைப்பட விழாவில் இதுவரை பங்கேற்றதில்லை. எனவே ஒப்பிட வழி யில்லை. என்னுடைய அபிமான இயக்கு நர்களில் ஒருவர் ஹெல்மா சாண்டர்ஸ் ஃப்ராம்ஸ். பல ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் நடைபெற்ற அவரது படங் களின் திரையிடலின்போது சொன்னார் : "ஒரு சினிமாவைப் பார்ப்பது என்பது தாயின் கர்ப்ப இருளின் பாதுகாப்பில் கனவு காண்பதுபோல". அதை நான் திருவனந்த புரம் சர்வதேச திரைப்பட விழாவில் எப் போதும் உணர்வேன். அந்த உணர்வை எந்த மாற்றங்கள் தரக்கூடுமோ அவை தாம் சென்னை விழாவுக்கும். அது என்ன, அதை எப்படி என்பது அமைப்பாளர்களின் பணி. பார்வையாளனுடையது அல்ல.


10. அடூர் கோபாலகிருஷ்ணனின் நூல் ஒன்றை தமிழில் மொழி பெயர்த்துள்ளீர் கள். அடூருக்கும் உங்களுக்குமான நட் பைப் பற்றிக் கூறுங்கள். அவரது படங் களில் தமிழ் உரையாடல்கள் இடம்பெற் றுள்ளன. இவை காட்சிகள் நடைபெறுவ தாகக் காட்டப்படும் இடங்களின் வட்டார மொழியை வெளிப்படுத்துகின்றதா?

அடூர் கோபாலகிருஷ்ணன் திரைக்கலை தொடர்பாக எழுதிய "சினிமா அனுபவம்" நூலைத் தமிழாக்கம் செய்திருக்கிறேன். இந்தியக் "கலை சினிமா"வில் மிக முக்கிய மான ஆளுமை அவர். விரிவான வாசிப்பு உடையவர். கூடவே திரைக் கலையின் அழகியல் குறித்து மிகவும் அக்கறை கொண்டவர். அந்த அழகியலைத் தனது பார்வை, செயல்பாட்டு அனுபவங்களுடன் வெளிப்படுத்துபவர் என்ற மதிப்பு அவர் மீது எனக்கு உண்டு. அந்த மதிப்பின் அடையாளமாகவே அவரது நூலை மொழி பெயர்த்தேன். அவ்வளவே. நீங்கள் குறிப்பிடுவதுபோல அவருடன் எனக்கு நெருக்கமான நட்பு எதுவுமில்லை.

அடூர் எழுதி இயக்கிய இரண்டு படங்களில் தமிழ்ப் பின்புலமும் உரையாடலும் இடம் பெற்றிருக்கின்றன. "நிழல் குத்து", "நாலு பெண்ணுங்கள்" ஆகிய படங்களில். இவற் றில் தமிழ் உரையாடல் பயன்படுத்தப்பட்டி ருக்கும் விதம் எனக்கு ஒப்புதலாக இல்லை. "நிழல் குத்து" படத்தின் கதை கன்யாகுமரி மாவட்டத்தின் கிராமம் ஒன்றில் நடைபெறு வதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆனால் படத்தில் இடம்பெறும் மொழி அந்த வட்டா ரத்துக்கு அந்நியமானது. நான்கு பெண்கள் படம் தகழி சிவசங்கர பிள்ளையின் நான்கு சிறுகதைகளின் தொகுப்பு. அதில் "சின்னு அம்மா" என்ற மூன்றாவது கதையில் பாத்திர உரையாடலாகத் தமிழ் வருகிறது. கேரளத்தை விட்டுத் தமிழகத்துக்கு ஓடி வந்த பாத்திரம் மீண்டும் ஊருக்குத் திரும்பு கிறான். அவன் அதிகம் பேசுவது தமிழ் என்று காட்டப்படுகிறது. அதுபோன்ற தமிழ் எங்கும் பேசப்படுவதாகத் தோன்றவில்லை. என் தமிழ்ச் செவிக்கு அந்த மொழி ஏற்புடையதாக இல்லை. தனது திரைப் படத்தில் சிறு விவரங்களையும் கூட மிகுந்த அக்கறையுடன் எடுத்தாளும் இயக்குநர் என்பதால் இதை ஒப்புக் கொள்ளச் சங்கட மாக இருந்தது. சக்கரியாவின் "பாஸ்கர பட்டேலரும் என்டெ ஜீவிதமும்" என்ற நீள்கதையை அடிப்படையாக வைத்து அடூர் இயக்கிய படம் "விதேயன்". அதில் கன்னடப் பின்னணி, படத்தில் கர்நாடகத் தின் வடக்குப் பகுதியில் புழங்கும் கன்ன டம் மிகக் கச்சிதமாகவும் பொருத்தமாகவும் கையாளப்பட்டிருக்கிறது. அடூரிடமே இதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். 'கன்னடத்தில் எழுத ஆள் கிடைத்தார்கள். ஆனால் உங் கள் தமிழ் நாட்டில்தான் இதற்கு ஆளே கிடைக்கவில்லை. நான் அணுகிய எழுத் தாளர்கள் கை விரித்து விட்டார்கள்" என் றார். அந்தப் பதில் எனக்குத் திருப்தியளிப் பதாக இல்லை. பொதுவாகவே மலையாளி கள் மத்தியில் தமிழ் என்றால் சின்ன ஏளனம் நிலவுகிறது. இதுவும் அதன் பகுதி என்று எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை தவறாகவும் இருக்கலாம். ஆனால் சத்ய ஜித்ராய்க்குப் பிறகு வந்த பெரும் ஆளுமைகளில் அடூர் கோபாலகிருஷ்ண னும் ஒருவர் என்ற என் மதிப்பீட்டில் எந்த மாற்றமும் இல்லை.

11. தமிழில் இப்பொழுது பல மொழி பெயர்ப்பு முயற்சிகள் வெளிவருகின்றன.

(தொடர்ச்சி 35 ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# காலச்சுவடு...

34 ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒரு மொழியின் வளத்துக்கும், வளர்ச்சிக்கும் மொழிபெயர்ப்பு படைப்புக்கள் எவ்வாறு பங்களிக்கின்றன? தமிழுக்கு இதுவரை மொழி பெயர்க்கப்படாத படைப்புக்கள் என்ன? எந்த, எந்த மொழி இலக்கியங்கள் இதுவரை கவனிக்கப்படாது உள்ளன? உதாரணத்துக்கு பிலிப்பைன்ஸ் நாட்டுப் படைப்புக்கள் எதுவும் தமிழுக்கு மொழி பெயர்க்கப்படவில்லை.

இலக்கிய மொழிபெயர்ப்பு ஒரு தனித்துறையாக இன்று கருதப்படுகிறது. இதற்கெல்லாம் முன்பே தமிழில் தொடர்ந்து மொழிபெயர்ப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. மொழிபெயர்ப்பால்தான் மதங்களும் தத்துவங்களும் தமிழ் மண்ணில் வேரூன்றி இருக்கின்றன. தமிழில் முதன்முதலில் அச்சிடப்பட்டதே மொழிபெயர்ப்பு நூல்தானே? நாம் இன்று காணும் சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் மொழிபெயர்ப்புகள்தான் காரணமாக இருந்திருக்கின்றன. தமிழின் ஆகச் சிறந்த படைப்பாளிகள் அனைவரும் மொழிபெயர்ப்பிலும் ஈடுபாடு காட்டியவர்கள். பாரதியும் புதுமைப்பித்தனும் மிகச் சிறந்த உதாரணங்கள்.

நமது மொழி இன்று எங்கே இருக்கிறது, நமது இலக்கியம் என்னவாக இருக்கிறது என்று கணிக்கவும் அவற்றை மேம்படுத்தவும் மொழிபெயர்ப்புகள் காரணமாக இருந்திருக்கின்றன. இது விரிவாகப் பேச வேண்டிய பொருள்.

எல்லா மொழியிலிருந்தும் மொழிபெயர்ப்புகள் வந்து குவிவது இல்லை. இது தமிழுக்கு மட்டுமல்ல, எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். தமிழின் மிகச் சிறந்த படைப்புகள் என்று நாம் கருதும் எத்தனை படைப்புகள் குறைந்த பட்சம் ஆங்கிலத்திலாவது வெளியாகி இருக்கின்றன? நமது காலமும் பண்பாட்டுச் சூழலும் இலக்கியத் தேவைகளும்தான் மொழியாக்கத்துக்கான வாய்ப்பை உருவாக்குகின்றன. நவீன காலத்தில் புத்தகங்களுக்கான சந்தை அதைத் தீர்மானிக்கிறது. உதாரணமாக, மார்க்கேஸின் ஒரு படைப்பை மொழியாக்கம் செய்யும் உரிமையைப் பெறப் பெரும் தொகை செலுத்தப்பட வேண்டும். ஆயிரக் கணக்கான பிரதிகள் அச்சிடப்பட வேண்டும். இன்றைய நிலையில் தமிழில் அது சாத்தியமில்லை. மார்க்கேஸின் “தனிமையின் நூறு ஆண்டுகள்” நாவலையே எடுத்துக் கொள்வோமே. நான் அறிந்து இந்த நாவலின் மலையாள மொழிபெயர்ப்பு இன்றைய தேதிக்கு சுமார் ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. 1984 இல் முதல் பதிப்பு வெளிவந்தது. 4000 பிரதிகள் அச்சிடப்பட்டன. இந்த 33 ஆண்டுகளில் தொடர்ந்து பதிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பதிப்பும் குறைந்தது 2000 பிரதிகளும் அதிகமாக 5000 பிரதிகளுமாக அச்சிடப்படுகிறது. சராசரியாகக் கணக்குப் போட்டால் ஒரு ஆண்டுக்கு 3000 பிரதிகள் விற்பனையாகின்றன. தமிழில் இந்த நாவலின் மொழிபெயர்ப்பு வெளிவந்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை 5000 பிரதிகள் விற்பனையாகி இருக்கலாம். மலையாளத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 12,000 பிரதிகள் விற்பனை ஆகி இருக்க வேண்டும். காப்ரியேல் கார்சியா மார்க்கேஸ் அளவுக்குத் தமிழில் பாதிப்பு ஏற்படுத்திய சமகால எழுத்தாளர் இல்லை. அவரது நூலுக்கே இதுதான் நிலை. ஆனால் இவற்றையெல்லாம் மீறி கணிசமான படைப்புகள் தமிழாக்கம் பெற்று வருகின்றன. அது இலக்கிய வாசகனுக்கு ஆறுதல் அளிக்கும் செயல்தானே?



12. நீங்கள் முன்பு வணிக சஞ்சிகைகளில் வேலை செய்துள்ளீர்கள். இப்பொழுது ஒரு முக்கிய சீரிய சஞ்சிகையின் ஆசிரியர். இவ்விரண்டுக்குமான வேறுபாடுகள் என்ன?

ஒரு பறவை, உயிர்க் காட்சி சாலையில் இரும்புக் கூண்டுக்குள் பறப்பதற்கும் வெட்ட வெளியில் பறப்பதற்கும் என்ன வேறுபாடு உண்டோ அந்த வேறுபாடு தான் இரண்டிலும் பணிபுரிவதிலும் இருப்பது.

வணிக சஞ்சிகையின் நோக்கம் வரையறுக்கப்பட்டது. அதன் வாசக ரசனை முன்னரே தீர்மானிக்கப்பட்டது. வாசகன் இதைத்தான் விரும்புகிறான் என்று அவன் சார்பாக சஞ்சிகையே முடிவு செய்து அதற்கேற்ப சங்கதிகளை உற்பத்தி செய்து அவனுக்கு அளிப்பது. அவனைச் சிந்திக்க விடாமல் அவனுக்காகச் சிந்திப்பது போன்ற பாவனையை உருவாக்குவது. இதற்கு எதிரான நிலைப்பாடுகள் கொண்டது தீவிர இதழ். வணிக சஞ்சிகை வாசகன் சார்பில் உரையாடுவது. தீவிர சஞ்சிகை வாசகனை உரையாட வைப்பது.

இதழ் உருவாக்கத்துக்கான தொழில்நுட்பப் பணிகள் இரண்டுக்கும் ஒன்றுதான். வணிக சஞ்சிகை அனுபவம்தான் சீரிய சஞ்சிகையை அதற்கான அழகியலுடனும் செம்மையுடனும் உருவாக்க உதவி வருகிறது.

13. வணிக சஞ்சிகைகளில் நீங்கள் வேலை பார்த்த பொழுது ஒரு சீரிய இலக்கியவாதியான உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடயங்கள் என்ன?

வணிக இதழில் பணியாற்றியபோது அதை ஊதியம் பெற்றுத் தரும் ஒரு வேலையாக மட்டுமே பார்த்தேன். பணிபுரிந்தேன். அதன் மூலம் பெற்ற நன்னம்பிக்கை மூலமாகச் சில காரியங்களைச் செய்ய அனுமதிக்கப்பட்டேன். இலக்கியத் தரமான கதைகளை வெளியிட, வாரம் ஒரு கவிதையை வெளியிட, தொடர்ந்து நூல் மதிப்புரை பகுதியை இடம் பெறச் செய்ய, மாற்றுச் சிந்தனை கொண்டவர்களை அறிமுகப்படுத்த சுதந்திரம் கிடைத்தது. விற்பனைக்கு ஊறு நேராத வகையில் சிலவற்றைச் செய்தால் நமக்கு விருப்பமான சீரிய காரியங்களைச் செய்யவும் வாய்ப்பு ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. நான் என்ன செய்தேன், அவை எந்த அளவுக்குப் பலனளித்தது என்பதெல்லாம் நான் சொல்ல வேண்டியவையா? அவை மற்றொருவரால் எடுத்துச் சொல்லப்பட வேண்டியவை அல்லவா?

14. சன் குழுமத்தின் மலையாளத் தொலைக்காட்சியான சூர்யாவின் செய்திப் பிரிவு பிரதான ஆசிரியராக இருந்துள்ளீர்கள். தி.மு.க அரசியல் அங்கமான சன் குழும நிறுவனத்தில் உங்களால் சுதந்திரமாக இயங்க முடிந்ததா? சர்ச்சையை ஏற்படுத்திய விடயங்கள் என்ன ?

சூர்யா டி.வியின் ஆரம்பத்திலிருந்தே பணியாற்றியிருக்கிறேன். ஒரு வகையில் “குங்குமம்” இதழில் பணியாற்றியதன் மூலம் கிடைத்த நம்பகத் தன்மையும் நற்பெயரும் இந்த வாய்ப்பை எனக்குப் பெற்றுத் தந்தன. அதன் காரணமாகவே ஓரளவு சுதந்திரத்துடன் இயங்க முடிந்தது. நிர்வாகிகளுக்கு மலையாளம் தெரியாது. கேரளப் பண்பாட்டுப் பின்புலம் தெரியாது கேரள அரசியல் போக்குகள் தெரியாது. இந்த மூன்றும் என்னைச் சுதந்திரமாகச் செயல்பட விட்டன. திமுகவுக்கு கேரளத்தில் ஆட்சியைப் பிடிக்கும் திட்டம் எதுவுமில்லை என்பதனாலும் சுதந்திரமாக இயங்க விட்டார்கள். பின்னர் அரசியல் மாற்றத்தால், சுதந்திரம் பறிபோகும் கட்டம் வந்தது. நான் வெளியேறினேன்.

தொலைக்காட்சியைப் பொறுத்தவரை சர்ச்சைகள்தான் செய்தி மதிப்புக் கொண்டவை. பொது வெளியில் மிகவும் சர்ச்சையை ஏற்படுத்திய செய்தி ஒரு போலி ஆவணம் பற்றியது. கேரளத்தில் அப்போது காங்கிரஸ் முன்னணி ஆட்சி. அமைச்சர்களில் ஒருவருக்கு ஹவாலா ஊழலில் பங்கிருப்பதாகச் செய்தி கிடைத்தது. அதற்கு ஆதாரமாக ஓர் ஆவணமும் கிடைத்தது. செய்தியை ஒளிபரப்பினோம். அந்த ஆவணம் போலியாகத் தயாரிக்கப்பட்டது என்று அரசு குற்றம் சாட்டியது. செய்தியை ஒளி பரப்பியதற்காக தலைமை செய்தி ஆசிரியர் என்ற முறையில் நானும் செய்தியைத் திரட்டிய என் நிருபரும் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ ஒருவரும் வேறு சிலரும் வழக்கைச் சந்திக்க நேர்ந்தது. ஏழு ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு நடந்தது. கடசியில் மீண்டும் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் முன்னணி அரசே வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. அந்த ஆவணம் அவர்கள் கட்சிக்குள்ளேயே தயாரிக்கப்பட்டது. ஆனால் அதைத் தயாரித்தவர்கள் யார் என்று இன்றுவரை எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் முற்பட வில்லை. வாழ்க்கையில் விளங்காத புதிர் ஒன்று இருக்கட்டுமே என்று சும்மா இருந்து விட்டேன்.


15. பட்டு என்ற நாவலை மொழிபெயர்த்துள்ளீர்கள். இது படமாகவும் சில்க் என்ற அதே பெயரில் வெளிவந்துள்ளது. படைப்புக்கும், படத்துக்குமான வேறுபாடு என்ன?

முதலில் நான் வாசித்தது அலெசான்ட்ரோ பாரிக்கோவின் நாவலைத்தான். மொழிபெயர்ப்புச் செய்து முடித்துச் சில மாதங்களுக்குப் பிறகே திரைப்படத்தைப் பார்த்தேன். நான் வாசித்ததும் மொழிபெயர்த்ததும் கியூதோ வால்ட்மானின் ஆங்கில மொழியாக்கத்தைத்தான். அந்த மொழியாக்கம் மூல ஆசிரியரான பாரிக்கோவுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பதால் இரண்டாவது மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. ஆன் கோல்ட்ஸ்டெயின் அதைச் செய்திருந்தார். இந்த இரண்டாவது மொழிபெயர்ப்பை ஆதாரமாக வைத்தே திரைப்படம் உருவாக்கப்பட்டது. முதல் மொழிபெயர்ப்பிலிருந்த ஒரு ரகசியக் கதையாடல், பூடகம் இரண்டாவது மொழியாக்கத்தில் இல்லை என்று தோன்றியது. திரைப்படமாகப் பார்த்தபோதும் இதே எண்ணம் ஏற்பட்டது. நாவலில் வாசகனின் கற்பனைக்கான இடமும் சொல்லாமல் விடப்பட்ட பகுதிகளும் இருந்தன. படத்தில் அவை இல்லை. நாவல் என்னைக் கவர்ந்த அளவு படம் கவரவில்லை.

16. காப்ரியேல் கார்சியா மார்க்கேஸினை “தனிமையின் நூறு ஆண்டுக”ளுக்கு அப்பால் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதாயின், அவரது முக்கிய அம்சங்கள் என்ன?

நமது காலத்தின் மகத்தான கதை சொல்லிகளில் ஒருவர் என்பதும் எந்த மொழியில் பெயர்க்கப்பட்டாலும் அந்த மொழியின் பகுதியாக மாறிவிடும் கலை ஆளுமை அவருடையது என்பதும் காப்ரியேல் கார்ஸியா மார்க்கேஸை அறிமுகம் செய்வதற்குப் போதுமானவை. அவரது தோல்வியடைந்த படைப்பு - மார்க்கேஸ் வாசகனாக அப்படி ஒரு படைப்பு இல்லை என்பது என் தரப்பு - கூட வாசிப்பில் புதிய உலகங்களையும் உணர்வுகளையும் அளிப்பது. நமது சிறு நடவடிக்கையிலும் கூட வரலாற்றின் சாயலும் காலத்தின் துடிப்பும் மனதின் ஆட்டங்களும் இருக்கின்றன என்பதைக் கலைத்தன்மையுடன் வெளிப்படுத்துபவை அவரது படைப்புகள். இடத்தை யும் காலத்தையும் மீறிய ஒரு பிரபஞ்ச உணர்வு கொண்டவை . எழுத்து என்பது நினைவுக-

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)

பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்
24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை
பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும்
ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும்
கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

416.613.1840 / 647.272.6993
birdsilvergardens@gmail.com
16 Birdsilvergardens, Scarborough ( Port Union & Island Road)

# காலச்சுவடு...

35 ஆம் பக்கத்தொடர்ச்சி

ளின் கலை. மனம் தீய நினைவுகளை வெளியேற்றி விட்டு நல்ல நினைவுகளை உருப்பெருக்கிக் காட்டுகிறது. கலையின் உண்மை இதுதான். இது மார்க் கேஸின் பிரசித்தமான வாசகங்களில் ஒன்று. இதற்காகவே மார்க்கேஸை அறிமுகம் கொண்டிருக்க வேண்டும் - சூரிய வெளிச்சத்தை அறிமுகம் கொண்டிருப்பது போல.

17. நீங்கள் எழுதிய முக்கிய நாவல் வெலிங்டன். பல தடவை வாசித்துள்ளேன். தமிழில் வெளிவந்த முக்கிய நாவல்களில் ஒன்று. வெலிங்டனை எழுத முற்பட்டு சில தடவை எழுத முடியாமல் போய் இடை-வெளிவிட்டு எழுதியதாகப் பின்னுரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். வெலிங்டன் உங்களில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் என்ன? அதில் வரும் முக்கிய பாத்திரங்களில் என்னைக் கவர்ந்தது பாபு என்ற பாத்திரம். பாபு பாத்திரம் பற்றிக் கூறுங்கள்.

தமிழில் வெளிவந்த முக்கிய நாவல்களில் ஒன்று “வெல்லிங்டன்” என்ற உங்கள் பாராட்டுக்கு நன்றி. பின்னுரையில் சொல்லியிருப்பதுபோலவே நான் வாழ்ந்து கடந்த ஒரு காலத்தை மீண்டும் வாழ்ந்து பார்க்க விரும்பினேன். நான் கடந்து வந்த மனிதர்கள் சிலரை மீண்டும் சந்திக்க விரும்பினேன். நான் கால் தோய நடந்த மண்ணை மறுபடியும் தொட்டு உணர விரும்பினேன். இந்த விருப்பங்களின் ஆகத் தொகைதான் நாவல். எனக்கு ஏற்பட்ட நேர் மறையானதும் எதிர்மறையானதுமான பாதிப்புகளிலிருந்துதானே நாவலையே உருவாக்கியிருக்கிறேன். நாவலாக்கத்துக்குப் பின்னான பாதிப்புகள் அதிகம் எனக்குள் அதிகம் இல்லை. மனிதர்களை அவர்களுடைய நிறை குறைகளுக்கு அப்பாற்பட்டுப் பார்க்க விரும்பினேன். அந்த விருப்பம் நிறைவேறியிருக்கிறது என்று அறிந்ததே அதிகப் படியான பாதிப்பு. ஏனெனில் நாவலில் பாத்திரங்களாக இடம் பெற்றிருக்கும் சிலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெகுசிலர் அதை வாசித்தும் இருக்கிறார்கள். பாபுவின் இளம் வயதுக் கனவுப் பெண்ணான கௌரியின் அசல் வடிவம் இன்னும் வாழ்கிறார். நானே கொடுத்து அவர் நாவலை வாசித்தார். “என்னையே கண்ணாடியில பார்த்த மாதிரி இருக்கு“ என்று சொன்னார். அது பெரிய பாதிப்பு இல்லையா?

பாபு ஒரு பாத்திரம். அதில் நானும் இருக்கிறேன். இதற்கு மேல் சொல்லத் தெரியவில்லை.

18. வெலிங்டனின் பின்னர் ஏன் நீங்கள் வேறு நாவல்கள் எழுதவில்லை?

எழுதிக் கொண்டிருக்கிறேன்.

19. சச்சிதானந்தனின் மார்க்சிய அழகியலை தமிழில் மொழிபெயர்த்துள்ளீர்கள். ஏன் அந்த நூலைமொழிபெயர்க்க வேண்டி ஏற்பட்டது.? சச்சிதானந்தன் மலையாள இலக்கியத்துக்கு ஆற்றிய முக்கிய விடயங்கள் என்ன?

சச்சிதானந்தனின் “மார்க்சிய அழகியல் - ஒரு முன்னுரை” 1985 இல் வெளிவந்தது. அன்று எனக்கு மார்க்சியம் சார்ந்த இலக்கிய விமர்சனத்தில் ஈடுபாடு இருந்தது. எனக்கு மட்டுமல்ல அந்தக் காலத்தில் சீரிய இலக்கியத்துக்கு வந்த பலருக்கும். ஆனால் நிறுவனச் சார்புள்ள தரப்பிலிருந்து வெளியான முற்போக்கு விமர்சனங்கள் பெரும்பான்மையும் சூத்திரங்களுக்கு உட்பட்டவையாக இருந்தன. ரஷ்ய, சீன இலக்கிய விமர்சனங்களின் தொடர்ச்சியாகவே இருந்தன. மனித சிந்தனையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய சித்தாந்தம் மார்க்சியம் என்ற எண்ணத்தில் இவற்றைப் பார்த்தால் மேலோட்டமானவையாகவும் கலையின் நுண் உலகங்களைப் புரிந்து கொள்ள இயலாதவையாகவும் இருந்தன. உலகம் முழுவதும் அறிவுலகில் இந்த முரண் உணரப்பட்டிருந்தது. மார்க்சியத்தை புதிய விளக்கங்களுடனும் புதிய காலத்துக்கு ஏற்றவாறும் பாவிக்கும் நவ மார்க்சிய அறிஞர்கள் இதை விவாதித்து வந்தனர். ஹெர்பர்ட் மார்க்யூஸ், ஜியார்ஜ் லூக்காஸ், அந்தோனியோ கிராம்சி, டெர்ரி ஈகில்டன், ஃப்ரெடரிக் ஜேம்சன் ஆகியவர்களின் மாற்றுக் கருத்துக்கள் தமிழிலக்கியச் சூழலில் விவாதிக்கப்பட்டன. கலை இலக்கியப் படைப்புகளை கட்சி சாராத இடதுசாரிக் கண்ணோட்டத்தில் அணுகும் விமர்சன முறைக்கு ஏற்றதாக இருக்கும் என்ற எண்ணத்தின் விளைவாகவே சச்சிதானந்தனின் நூல் தமிழாக்கம் செய்யப்பட்டது. இன்றும் அந்த நூலுக்குப் பொருத்தப்பாடு இருப்பதாகவே நினைக்கிறேன்.

நவீன மலையாள இலக்கியத்தில் தவிர்க்கவே முடியாத இடம் சச்சிதானந்தனுடையது. இன்று எழுபது வயதை எட்டியிருக்கும் அவர் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கவிஞராகவும் விமர்சகராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் இயங்கி வருகிறார். அவரளவுக்கு இவ்வளவு நீண்ட காலம் அயராது செயல்பட்டவர்கள் இந்திய இலக்கியத்திலேயே மிகக் குறைவு என்று நினைக்கிறேன். கவிஞர் என்ற நிலையில் மலையாளத்தில் நவீனப் போக்கை அறிமுகப்படுத்தியவர்களில் அவரும் முக்கியமானவர். தொடர்ந்தும் அதிக அளவிலும் எழுதி வருபவர். இந்தியக் கவிஞர்களில் ஆயிரக் கணக்கான கவிதைகள் எழுதிய கவிஞர் அவரே. (இந்த சாதனையை தமிழ்க் கவிஞர் மனுஷ்யபுத்திரன் பின்னுக்குத் தள்ளி விட்டார்). மலையாளத்தில் “ஆதுனிகத” என்று அழைக்கப்படும் நவீனத்துவ காலப் பகுதிக்குச் சற்று முன்னர் கவிதையாக்கத்தில் ஈடுபடத் தொடங்கிய சச்சிதானந்தன் இன்றளவும் கவிதை யில் நிகழ்ந்து வரும் மாற்றங்களைப் பின் தொடர்பவராகவும் சில சந்தர்ப்பங்களில் மாற்றங்களைத் தொடங்கி வைப்பவராகவும் இருக்கிறார்.

மலையாளக் கவிதை பற்றியும் இந்தியக் கவிதை பற்றியும் தொடர்ந்து விமர்சனம் செய்து வருபவர். விமர்சனத்தின் தொடர்ச்சியாகப் புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்துவதும் அவர்களது கவிதைகளை ஆங்கிலம் வழியாகப் பிற இந்திய மொழிகளுக்குக் கொண்டு செல்பவரும் அவரே. மூத்த மலையாளக் கவிஞரான அய்யப்ப பணிக்கர் முதல் இன்றைய இளங் கவிஞரான ராஜேஷ் என். ஆர்.,வரை பலரையும் சிறிதும் பெரிதுமான கட்டுரைகள், முன்னுரைகள் வாயிலாக இலக்கிய உலகின் கவனத்



துக்குக் கொண்டு வந்தவர் வருபவர். மலையாளியின் கவிதை ரசனையில் புதிய உணர்வுநிலையை உருவாக்கியதில் சச்சிதானந்தனுக்குக் கணிசமான பங்கு உண்டு. அவர் வழியாகவே உலகக் கவிஞர்கள் பலரும் இந்தியக் கவிஞர்கள் பலரும் கேரளத்துக்குள் வந்தார்கள். அவரது சொந்தக் கவிதைகளின் எண்ணிக்கையை விட அவரது மொழிபெயர்ப்புக் கவிதைகளின் எண்ணிக்கை இரு மடங்கு.

இன்று இருக்கும் இந்தியக் கவிஞர்களில் தாகூருக்கு அடுத்து அதிகம் பிற அந்நிய மொழிகளில் பெயர்க்கப்பட்டவை சச்சிதானந்தன் கவிதைகளாக இருக்கும் என்பது என் யூகம். சில ஆண்டுகளுக்கு முன்பு நோபெல் இலக்கியப்பரிசுக்கு அவர் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அப்படிப் பரிந்துரைக்கப்படும் அளவிலான உலக அறிமுகம் பெற்றவர்.

20. உங்களது கனடாப் பயணத்தின் போது, தமிழர்கள் அல்லாது கவர்ந்த விடயங்கள் என்ன? கவலை தரும் விடயங்கள் என்ன?

நான் இந்திய எல்லையை முதன்முதலாகத் தாண்டியது இந்தக் கனடாப் பயணத்துக்காகத்தான். எனவே நான் கண்டவை எல்லாம் புதுமையாகவே இருந்தன. பத்து நாட்கள் மட்டுமே கனடாவில் இருந்திருக்கிறேன். இந்தக் குறுகிய கால வாசத்தை வைத்து அதிகம் சொல்லி விட முடியாது. மிக நவீன நாடாக உருவாகி வரும்போதும் இயற்கையைப் பாதுகாக்கும் அக்கறை முதலில் கவர்ந்தது. கனடாவின் இன்றைய குடிமக்கள் யாரும் அந்த நாட்டின் பூர்வீகர் அல்லர். குடியேறியவர்கள்தாம். பல்வேறு திசைகளிலிருந்து வந்தவர்கள், தாங்கள் வந்தடைந்த நாட்டை நேசிக்கும் விதம் வியப்பளித்தது. ஒரு புதிய கனடிய தேசிய உணர்வை உருவாக்கியிருக்கிறார்கள். அதைப் பேண விரும்புகிறார்கள் என்பது கவனத்தில் பதிந்தது. அவர்களது குடியுரிமை உணர்வும் சக மனிதனிடம் காட்டும் மரியாதையும் கவர்ந்தன.

நாங்கள் தங்கியிருந்த விடுதி அறைக்கு வெளியே நெடுஞ்சாலைகள் பின்னிப் பிணைந்து போகின்றன. அறை சன்னல் வழியாகப் பார்த்ததும் தென்படும் சாலையில் சிக்னல் அருகே ஒரு மனிதரைத் தினமும் பார்க்க முடிந்தது. சிவப்பு விளக்கு விழுந்ததும் வாகனங்கள் நிற்கும் இடத்திலிருந்து தொடங்கி காத்திருக்கும் ஒவ்வொரு கார் அருகிலும் செல்வார். வாகனங்கள் மீண்டும் புறப்பட்டதும் மறுபடியும் சிக்னல் விளக்குக் கம்பத்தருகே வருவார். மீண்டும் அடுத்த கார் வரிசைக்காகக் காத்திருப்பார். ஒவ்வொரு காராகக் கடந்து செல்வார். கார்கள் நகர்ந்ததும் பழையபடி தொடக்கப் புள்ளிக்கே போவார். காலை ஏழு முதல் ஒன்பதுவரை, பதினொன்றுமுதல் இரண்டு வரை, மாலை ஐந்து முதல் எட்டு அல்லது ஒன்பது வரை என்று அவருடைய அன்றாட அட்டவணை இரண்டு நாட்களிலேயே எனக்கு மனப்பாடகி இருந்தது. தொடர்ந்து கவனித்ததில் அவர் யாசகம் பெறுகிறார் என்பதைத் தெரிந்து கொண்டேன். அதை நேரில் சென்று பார்த்தும் உறுதிப்படுத்திக் கொண்டேன். நான்காவதோ ஐந்தாவதோ நாள் பிற்பகலில் சாலையை ஒட்டிய பெட்ரோல் விற்பனை நிலையத்துக்குள்ளிருந்த சீன உணவகத்தில் அவரைப் பார்த்தேன். உணவு வாங்கிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் கௌரவமான யாசகச் சிரிப்பொன்றையும் உதிர்த்தார். அந்த சகஜ பாவத்தில் அவருடன் பேச்சுக் கொடுத்தேன். ஆம். யாசகம் அவரது தொழில். ஒரு நாளைக்கு ஐந்து முதல் எட்டு டாலர் வரை கிடைக்கும். மெக்சிகோவிலிருந்து வந்தவர். வயது அறுபத்தைந்து. ஆதரவுக்கு யாரும் கிடையாது. சற்றுத் தள்ளியிருக்கும் சர்ச்சில் இரவுப் படுக்கை. பேச்சில் கிடைத்த இந்த விவரங்களால் இரங்கி நானும் சிறு தொகையைக் கொடுத்தேன். வந்தனம் சொல்லி வாங்கிக் கொண்டவர் சொன்னார் :“பொதுவாக நான் கறுப்பர்களிடமிருந்து யாசகம் பெறுவதில்லை. இந்த உணவுக்குச் செலவிட்டதைத் தவிர இன்று வேறு எதுவும் கிடைக்கவில்லை. எனவே உங்களுக்கு அந்த நல் வாய்ப்பு”. அவருடைய வாசகம் கவலை தந்தது. என்னை வெள்ளையர் பட்டியலில் சேர்த்தது வருத்தத்தைக் கொடுத்தது.

21. நான் மிக விரும்பும் கவிஞர்களுள் பாப்லோ நெருடாவும் முக்கியமானவர். சில நாட்டுத்தொழிலாளர்கள் சார்பாக பல கவிதைகளை எழுதியுள்ளார். இவர் இலங்கையில் சிலே தூதரகாலயத்தில் வேலை பார்த்த பொழுது, அவரிடம் வேலை பார்த்த பெண்ணை, அப்பெண்ணின் விருப்பதிற்கு மாறாக உறவு கொண்டுள்ளார். இது அவரது சுயசரிதையில் உள்ளது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

இந்த நேர்காணலுக்கான கேள்விகளில் நீங்கள் முதலாவதாக வைத்திருந்ததை நான் கடைசிக் கேள்வியாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். மன்னிக்கவும்.

பாப்லோ நெருதா நூற்றாண்டில் - 2004 இல் - அவரது படைப்புகள் மீண்டும் பெரும் கவனம் பெற்றன. அவரது வாழ்க்கை வரலாறும் பங்களிப்பும் மீண்டும் பேசு பொருளாயின. அந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் சம்பவம் நினைவு கூரப்பட்டு விவாதத்துக்குள்ளானது. தமிழிலும் இது பற்றி எழுதப்பட்டது. து.ரவிகுமார் எழுதி னார் என்று நினைவு. இன்னும் சிலரும் எழுதியிருக்கக் கூடும்.

இதை நெருதாவின் வீழ்ச்சியாகப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. ஒரு மனிதனின்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)


யோகா சோதிடம்
● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# காலச்சுவடு...

36 ஆம் பக்கத்தொடர்ச்சி

தந்திரம் என்று நீங்கள் சொன்னால் அதை மறுக்கவும் தயாரில்லை. எல்லா மனிதர்களைப் போலவும் ஒரு மனிதனாக அவரிடமும் அழுக்கும் கபடமும் இருந்தன என்பது வெளிப்படை. அவரை நானோ நீங்களோ விரும்பக் காரணம் அவரது தனி ஒழுக்கம் சார்ந்தல்ல. அவருடைய படைப்புகள் சார்ந்து தானே? மகத்தான கவிஞர் என்பதனால் அவரது குற்றம் புனிதப்பட்டு விடுவதுமில்லை. ஒரு கவிஞனாகவும் மனிதராகவும் அவர் வெளிப்படும் இடங்களில் இதுவும் ஒன்று. கவிதையில் எல்லாவற்றுக்கும் இடமுண்டு என்று நம்பிய நெருதா தன்னுடைய குற்றத்தையும் தவிர்க்கவில்லை. தனது கனவான் பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்வது என்றால் இந்தச் சம்பவத்தை எழுதாமலேயே இருந்திருக்கலாம். ஆனால் அவரது கவி மனம் அதை ஏற்கவில்லை என்பதையே பார்க்கிறேன். மேலும் இந்தச் சம்பவத்தை ஒரு வெற்றியாக அவர் வெளிப்படுத்தியிருந்தால் அதை அவரது ஆணாதிக்கத் திமிர் என்று சொல்லலாம். மாறாக குற்ற ஒப்புதலாகவே சொல்லுகிறார். அவரது வேட்கை அந்தப் பெண்ணிடம் செல்லுபடி ஆகாததையே சொல்லுகிறார்.



"கலவி வேளையில் அவள் கண்களை விரியத் திறந்தே வைத்திருந்தாள். எந்த எதிர்வினையும் இல்லாமல் இருந்தாள்" என்று எழுதியிருக்கிறார். ஒரு சிலையும் மனிதனும் கூடுவது போலிருந்தது" என்று எழுதியிருக்கிறார். ஒரு பெண் தன்னுடைய உடலைத் தாண்டி ஆணை தண்டிக்கும் செயலாகவே தோன்றுகிறது. அதை நெரூதாவும் ஒப்புதல் செய்கிறார். "என்னை அவள் அவமதித்தது சரி" என்கிறார். ஒரு பெண்ணின் வஞ்சினமாகவும் அதில் ஆண் முறியடிக்கப்பட்டதாகவுமே நான் இதைப் பார்த்தேன். கோட்பாட்டுச் சரி, அரசியல் சரி என்று பார்த்துத் தீர்ப்பெழுத எனக்கு தர்க்க ஞானமில்லை.

# செஞ்சீனா...

25 ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பவரின் குழியிலிருந்து பெறப்பட்ட ஒலிக்கும் மணி எனப்படும் பித்தளைக்கருவி ஒன்றுள்ளது. இது 2430 ஆண்டுக்கு முன் இசைக்கப்பட்ட வாத்தியக்கருவி. இது 1978 இல் கண்டு பிடிக்கப்பட்டது. இது 5 தொன் எடையுள்ளது. இன்றும் இசைக்கக்கூடிய நிலையிலுள்ளது. இது எட்டாவது உலக அதிசயம் எனக்கருதப்படுகிறது.




இத்துடன் கல் மற்றும், பொன்சாய் (குறுந்தாவரங்கள்) அருங்காச்சியகமும் இங்குள்ளது. இதில் பிளற்றி பெலோடன் ( Platybelodon) எனும் விலங்கின் எலும்புக் கூடும், ஒரு காரின் அளவுள்ள பளிங்குக் கல் ஒன்றும் உள்ளது. இத்துடன் ஏராளமான குறுந்தாவரங்களைக் கொண்ட ஒரு பூங்காவும் உளது. மேலும் ஜிக்கிங் தெருவில் பல தெருவோர உணவுச்சாலைகள் உண்டு. மாலை வேளைகளில் இத்தெருவில் பல வேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறும். அத்துடன் சீ லீ என்பவர் எழுதிய கதைகள் நடித்துக் காண்பிக்கப்படுகின்றன.

இங்கிலிருந்து பல உல்லாசப் பயணக் கப்பல்கள் புறப்பட்டுச் செல்கின்றன. நான் ஏற்கனவே விபரித்த சுற்றுலா இடங்களுக்கு இவை ஏராளமானவர்களை ஏற்றிச் செல்கின்றன. இவற்றுடன் மஞ்சள் நாரைக் கோபுரம் (Yellow crane tower), ஹப்பி வலி வூகான் எனப்படும் களியாட்டப் பூங்கா முதலியவை உள்ளன.

வூகான் நகரம் ஒரு முக்கியமான வர்த்தக நிலையமாக விளங்குகின்றது. இங்கு 80 நாடுகளிலிருந்து வந்து பலர் முதலீடுகள் செய்துள்ளனர். இங்கு 5973 வெளிநாட்டு நிறுவனங்களை உள்ளன. இதில் 50 பிரெஞ்சு நாட்டு நிறுவனங்கள் உள்ளன. வெளிநாட்டு நிறுவனங்களை முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்கும் வகையில் இங்கு வரிவிலக்கு, குறைவான வட்டி வீதக்கடன்கள், மற்றும் அரச உதவித் தொகை முதலியன நடைமுறையிலுள்ளன. மேலும் இந்நகரம் பொருளாதாரம், வர்த்தகம், போக்குவரவு, தகவல் தொழில்நுட்பம், கல்வி ஆகிய துறைகளில் சிறந்து விளங்குகிறது. இங்கு ஏராளமான சிறப்பு அங்காடிகள், வர்த்தக நிலையங்கள் பிரபலமான தொடர் அங்காடிகள் யாவும் நிறைய உள்ளன.

இத்துடன் ஏராளமான தொழிற்சாலைகள் இயங்குகின்றன. கார்கள், வான்கள், கனரக வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் யாவும் தயாராகின்றன. அத்துடன் நெல், சோளம், பருத்தி போன்ற விளைபொருட்களும் விளைகின்றன. மேலும் பல கைத்தொழில் பேட்டைகளும் இங்குள்ளன. ஏராளமான இலத்திரனியல் பொருட்கள், கணினிகள், கைத்தொலைபேசிகள், நவீன இயந்திரங்கள், கருவிகள் முதலியன இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேலும் இங்கு 35 உயர்கல்வி நிலையங்கள் உள்ளன. உலகப்புகழ் பெற்ற வூகான் பல்கலைக்கழகம் குவாங்சொங் விஞ்ஞானத்



தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஆகியவை இங்குள்ளன. விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் வூகான் சிறந்து விளங்குகின்றது. இத்துடன் இத்துறைகளில் ஆய்வு செய்யும் நான்கு நிறுவனங்கள் உள்ளன. மேலும் வேறு துறைகளில் ஆய்வு செய்யும் 350 நிலையங்கள், 1470 உயர் தொழிநுட்ப நிலையங்கள் உள. இங்கு 400,000 மேற்பட்ட நிபுணர்களும் தொழில்நுட்பவியலினரும் பணியாற்றுகின்றனர்.

எமது சுற்றுப் பயணத்தில் வூகான் நகரைப் பார்த்தபின் மாலையில் வூகான் ஹொலிடே இன் இல் ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றோம். இது யங்சி ஆற்றுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. மேல் மாடியிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தபோது வியப்பாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

தொடரும்


கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன் அவர்களின்
இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வுக்கான அழைப்பு

நூல்கள்: 1. தமிழில் இசைப்பாடல் வகைகள்
(கலாநிதிப்பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவம்)
2. ஸ்ரீ இசைத்தமிழ்ச் சிந்தனைகள்
(தமிழரின் இசைமரபு தொடர்பான கட்டுரைகள்)

நாள்: நவம்பர் 05, 2017 ஞாயிற்றுக்கிழமை. நேரம்: மாலை 5:30---8:30
இடம் : தமிழ் இசைக் கலாமன்ற அரங்கம்
(Unit # 3, 1120 Tapscott Road, Scarborough, Ontario M1X 1E8)
ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன்
கலாநிதி நா. சுப்பிரமணியன். தொலைபேசி :1-905-240-4875


# புதுமைப்பெண்



அரசுப்பொதுத் தேர்வில்
மாணவிகள் முதலிடம்!
ஆசிட் வீச்சில்
மாணவிகள் மரணம்!

பலகலை நிகழ்ச்சிகளில்
மாணவிகள் முதலிடம்!
ஒருதலைக் காதலால்
மாணவிக்கு அரிவாள்வெட்டு!

விண்வெளியை ஆராய்ந்திட
விரைகிறார்கள் பெண்கள்!
பாலியல் பலாத்காரத்தால்
பலியாகிறார்கள் பெண்கள்!

மாதவம்செய்து மங்கையராய்ப் பிறந்தால்
சேதாரமாக்கிச் சிதையில் சேர்க்கிறார்கள்!

நேர்கொண்ட பார்வைகள்
குருடாகிப் போகின்றன,
வரதட்சனைக்
கொடுமையெனும் கூர்வாள்களால்!
நிமிர்ந்த நன்நடைகள்
முடங்கிப் போகின்றன,
மதங்களெனும் பிரிவினை ஆயுதங்களால்!

பெண்விடுதலை பெற்றுள்ளோம்,
நீதிகேட்டு வழக்கில் உள்ளது
சுதந்திரம் வேண்டிய திருமணங்கள்!

மணமாகும்வரைப் பெற்றோர் சொல்கேட்டு,
கல்யாணமானபின்
கணவனுக்குக் கட்டுப்பட்டு,
மரணம்வரை மகனை எதிர்பார்த்து....
மீறினால் வதைகளும்
மாறினால் கதைகளும்!

கூட்டநெரிசல்களில்,
ஓடும் பேருந்துகளில்,
பயணிக்கும் ரயில்களில்,
உடைகள் சரிபார்க்கும்
கடைகளின் அறைகளில்,
தங்கும் விடுதிகளில்,
ஆசிரியர்களின் ஆசைகளில்,
அலுவலக மேலாளர்களின்
கழுகுப் பார்வைகளில்,
இன்னும்பலவற்றில் சிக்கித்தான்
தினமும் திரும்புகிறோம்!

வாழ்க்கைப் படகை
சமுத்திரத்தில் செலுத்துகிறோம்.
வீழ்ந்தால் முத்தெடுப்போம்,
வாழ்ந்தால் கரைசேர்வோம்
"நாங்கள் புதுமைப்பெண்கள்"

ஃபாத்திமா ஹமீத்
ஷார்ஜா




# மகாத்மா காந்தியின் படத்துடன் புதிய 200 ரூபா நோட்டு!

பாரத நாட்டின் சுதந்திர வீரரும், சத்திய வேத பாதுகாவலருமான அஹிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியின் திருவுருவப் படத்தினை தாங்கிய புதிய 200 ரூபா நோட்டு ஓகஸ்ட் 25ம் திகதி இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ளது. நோட்டின் பின்புறத்தில் பாரத நாட்டின் பண்பாட்டு சின்னங்களில் ஒன்றான சாஞ்சி ஸ்தூபியின் படம் பதிக்கப் பட்டுள்ளது. கண்பார்வையற்றோர் அது இருநூறு ரூபா தாள் தான் என்பதை தடவிப் பார்த்து அறிந்து கொள்ளும் வகையில் “ர்” என்ற எழுத்து தடிப்பாக பதிக்கப் பட்டிருக்கிறது. கள்ள நோட் அடிக்க முடியாத வகையில் உள்ள பாதுகாப்பு இழையில் “ஆர்.பி.ஐ.பாராத்” என எழுதப் பட்டுள்ளது. இத்தாளை பல்வேறு கோணங்களில் அசைத்துப் பார்க்கும்போது பாதுகாப்பு இழையி லுள்ள பச்சை நிறம் நீல நிறமாக மாறும்.



# பூமியைப் போலவே மனிதர்கள் வாழக்கூடிய பத்து கிரகங்களை நாசா கண்டுபிடிப்பு!

பூமியை போலவே மனிதர்கள் வாழக்கூடிய பத்து கிரகங்களை நாசா கண்டு பிடிப்பு!

பூமியைப் போலவே தட்பவெப்ப நிலையினை கொண்டுள்ள மனிதர்கள் வாழக் கூடிய பத்து கிரகங்களை நாசா கண்டறிந்துள்ளது. மேலும் 219 கிரகங்களை உயிரினங்கள் வாழக்கூடிய பட்டியலில் நாசா விஞ்ஞானிகள் சேர்த்துள்ளனர். பிரபஞ்சத்தில் பூமி மட்டும் தனித்துள்ளதா இல்லை அது போன்ற கிரகங்கள் உள்ளனவா என்ற ஆராய்ச்சி 2009ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

விஞ்ஞானிகள் இதுவரை 4,034 கிரகங்களை கண்டறிந்துள்ளனர். இவற்றில் பூமியைப் போன்றே உருவத்திலும், தட்பவெப்ப நிலையிலும் சுமார் 50 கிரகங்கள் வரை இருப்பதாகத் தெரிகிறது. அவற்றில் 10 கிரகங்கள் பூமியை போலவே ஒரு சூரியனை



சுற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூமியை போல தட்பவெப்ப நிலையும், தண்ணீருக்கான சாத்தியக் கூறுகளும் இக்கிரகங்களில் உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

**வீரகேசரி மூர்த்தி**

# EDUCATION


## Review Questions17-18

➢ CHEMISTRY 12

(i) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(ii) Compare 3rd ionization energies of calcium and chlorine

(iii) Name the following compounds



(iv) Determine the energy of one mole of photon.(wave length 260nm).

How many quanta of radiation is required for an energy of 5J?
Frequency of the radiation is $2.42 \times 10^{15} s^{-1}$

➢ BIOLOGY 12

(i) What type of RNA has the shortest lifetime in cells.

(ii) Describe the differences between mRNA, tRNA and rRNA.

➢ PHYSICS 11

Kevin crusing down Kennedy at 60km/h in his car. A set of fuzzy dice (mass 120g), hanging from the rear mirror. All of the sudden he slams on his brakes and brings the car to stop in 3seconds. What angle will the string from which the dice hanging make with the vertical during his uniform deceleration?

Answer key
17-17 next issue
☎ 647 341 3975
*Dr. K.A. Srikrishnaraj*
KEEN TUTORING CENTRE

## Answer Key : 17-17

➢ PHYSICS 12

Assume that the bullet is inside the bob
If bob swing height of h m , use conservation energy

$$\Delta \frac{1}{2} m_1 v_1^2 = \Delta (m_1 + m_2) gh$$

(Ans = 46m)

➢ BIOLOGY 12

(i) Both the 5' and 3' ends are covalently modified during the mRNA synthesis before the mRNA exits the nucleus.

5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end.

The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail,

(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

➢ These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

➢ CALCULUS & VECTORS 12

(i) $\lim_{x \to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ ans: c/a

(ii) $\lim_{h \to -4} \left( \frac{\frac{1}{4} + \frac{1}{h}}{4+h} \right)$ ans: -1/16

(iii) $\lim_{x \to 1} \frac{x^6-1}{x^{10}-1}$ ans: 1/12

➢ CHEMISTRY 12

(i) (a)$C_2H_5OH$ –weak base but nucleophilic $SN_1$ favour

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ major; $CH_3CHCH_2$ minor

(b) $C_2H_5O^-$ Strong base $E_2$ predominates

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ minor; $CH_3CH{=}CH_2$ major

# இன்னல்...

26 ஆம் பக்கத்தொடர்ச்சி

இப்பஞ்ச பூதச்சேர்க்கையால் தூல சரீரம் உண்டாகின்றது. அவற்றினின்று மாத்திரைகளும், கன்மேந்திரியங்களும் உண்டாகின்றன.

பொருட்களைக் கண்டும், கேட்டும், சுவைத்தும் மோந்து பரிசித்தும் அறிதலால், மெய், வாய், கண், மூக்குச் செவியென்பன ஞானேந்திரியங்கள் எனப்படும். பேசுதல், நடத்தல், ஆகிய தொழில்களைச் செய்வதால் வாக்கு, பாணி, பாதம், கருவாய், எருவாய் ஆதியன கன்மேந்திரியங்கள் எனப்படும்" என்கிறார் ஆதிசங்காராச்சாரிய சுவாமிகள். அடுத்த இதழில் தொடர்வோம். அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடை பெறுகின்றேன்.




நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

**கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றம் நடத்தும் 15 வது வாழ் "ஞானதீபம் 2017" பல்சுவை கலை விழா**

September 16, 2017 சனிக்கிழமை, மாலை 5:00 மனிக்கு
Middlefield Collegiate Institute (Highglen & Middlefield)
525 Highglen Ave, Markham, ON L3S 3L5 இல்
அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தொடர்புகளுக்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477
க. கமலநாதன் 416-291-6884 அமிர்தலிங்கம் 416-827-7848

# வாசகர் கடிதம்

**திரு. சிவ பஞ்சலிங்கத்தின் கனடியத் தகவல் கட்டுரைகளில் ஒன்று.**

'வாடகை தராதவர்களை எப்படி காலி செய்வது?' மேற்குறிப்பிட்ட தலைப்பில் ஒரு தகவல் கட்டுரை ஒக்ரோபர் 15, 2013 'விளம்பரம்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

'வாடகை தராதவர்களை எப்படி காலி செய்வது?' எனத் தொடங்கி பல விடயங்கள் தொடர்ந்தது. கனடாவில் வாடகைக்கே வாழ்நாள் முழுவதும் குடியிருக்கும் எங்களை போன்ற முதியவர்களை கனடாவின் சட்டங்கள் நினைத்தால் வெளியே அனுப்பலாம் என்ற மாதிரியாக சிறு அச்சத்தினை கொடுப்பதாகத் தகவல் காணப்பட்டது. இது எழுத்தாளரின் தவறு இல்லை. அவர் தகவல்களைப் படித்து, அறிந்து உண்மையினை வெளியே கொண்டு வந்துள்ளார். ஆனால் நம்மைப் போன்ற வாடகைக் குடியிருப்பாளருக்கு அண்மையில் ஊடகங்களில் வெளிவந்த ஒரு சிறு நற்செய்தியினையும் அவரது கட்டுரையின் தொடர்ச்சியாக இங்கு குறிப்பிட்டால் தான் நல்லது. இம்மாதம் செப்ரெம்பர் 01, 2017 இல் இருந்து ஒரு புதிய சட்டத்தினை வீடமைப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுவரை வீட்டு உரிமையாளர் தானோ அல்லது தனது குடும்பத்தினர் எவராவது குடியிருக்க விரும்பினால் உடன்படிக்கைக் காலம் முடிவடைய முன்பே இரண்டு மாதகால அவகாசம் கொடுத்து வாடகைக் காலம் முடியும் போது வாடகைக்கு இருப்பவரை காலி செய்யலாம். ஆனால் இம்மாதம் தொடக்கம் அவ்வாறு எழுப்ப வேண்டுமாக இருந்தால் தண்டனையாக ஒரு மாத வாடகைப் பணம் வீட்டு உரிமையாளர் வாடகைக்காரனுக்குக் கொடுக்க வேண்டும்.

ஏதேனும் இதே மாதிரிப் பொய் சொல்லி வாடகைக்கு இருப்பவரை அகற்றி வேறு எவருக்கேனும் வாடகைக்கு கொடுத்தால் $25,000 டொலர் வரையான தண்டனைப் பணம் செலுத்த வேண்டும்.

திரு. சிவ பஞ்சலிங்கம் அவர்களுக்கு ஒரு தயவான வேண்டுகோள். வீட்டு உரிமையாளர்களுக்கு சாதகமாக உள்ள கனடாவின் சட்டங்களை 'வாடகை தராதவர்களை எப்படி காலி செய்வது? என்ற தலைப்பில் எழுதுவது போல தமது வசதி கருதி வாடகைக் குடியிருப்பாளர்களைக் காலி பண்ணினால்...? என்ன நடக்கும்?' என்பதனையும் இந்த மாதம் வெளிவந்த புதிய சட்டங்களையும் அறியத்தரவேண்டும். அப்பொழுது தான் குடியிருப்பாளர்களுக்குரிய உரிமைகளும் வெளிப்படுத்தப்படும்.

அன்புடன்
யூ.கே. சுப்பிரமணியம்
முன்னாள் இலங்கைப் போக்குவரத்து சபை பரிசோதகர்.










எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பார்கள்.
பணக்கார நாடுகள் சில நாடுகளை பிச்சைக்கார நாடுகள் என்பார்கள்.

3 வது உலக நாடுகளை கேலிசெய்வதும் பழக்கமாகி விட்டது. ஆனால் இன்று இர்மா புயலால் சூறாவழி ஒருபுறம், சூறையாடல் மறுபுறம். கடைகளை உடைத்து அகப்பட்டதை சுருட்டிக்கொண்டோடும் கும்பல்கள்.







அமெரிக்காவில் வேறு வேறு மானிலங்களில் சுற்றிச்சுழரும் சூறாவழி அங்கிங்கெனாதபடி எங்கும் நினைக்க முடியாதளவிற்கு அழிவு இழப்பீடு எவ்வளவு என கணக்கிடும்போதே இன்னொரு மானிலத்தில் வெள்ளம் ஆறு லட்சம்பேர் இடம்பெயர்ந்துள்ளனர். மின்சாரமின்றி தவிக்கின்றனர்.



உலகண்ணை புளோரிடாவிலை கன இடத்திலை கறன்ற் இல்லை. கடையளை உடைச்சு ரி.வி டெக் எல்லாம் களவெடுத்து என்ன செய்யப்போயினம்? என்று சொல்லும்போதே அகிலாண்டேஸ்வரி சொன்னா கனடாவிலை இருந்து 175 ஹைட்றோ ஊழியர்கள் ஹெல்ப்பண்ண போகினமாம்.




பல்லாயிரக்கணக்கான லீற்றர் டீசல், பெற்றோல் எரிபொருட்கள் கடலில் கலந்துவிட்டது. இதேவேளையில் பஹாமாவில் கடல் நீர் மட்டம் குறைந்துள்ளது.

அமெரிக்காவில் சுழல் சூறாவழியென்றால் கனல் கக்கும் வாதம் கடந்த பொதுத் தேர்தலில் லஞ்சம் ஊழல் வாக்குவாதம் ஒருபக்கம்.

உலகருக்கு சிரிப்பு வந்தது. 20, 30 வருடங்களுக்கு முதல் அகதிநிலை கோரிக்கையில் பொலிசார் பிடித்துக்கொண்டு போனார்கள். லஞ்சம் கொடுத்தபின் விட்டார்கள் என விசாரணையில் அகதிநிலை கோரிக்கை சபை பிரதிநிதி கோரிக்கையாளரிடம் சிரித்துக்கொண்டு சொன்னாராம் பொலிஸ் லஞ்சம் வாங்குவார்களா என்று?



இதற்கிடையில் வட்ஸ்அப் வரதர் வட்டக்கச்சியில் இருந்து அகிலாண்டேஸ்வரியின் வட்ஸ்அப் இல் கோல்வந்ததும் பெரிய அமளி துமளி. நியூசிலை பாத்திருப்பியள் ஜனாதிபதி மைத்திரி பாலா இஞ்சை ஆமியையும் நேவி பொலிஸ் எல்லாரையும் பாதுகாப்பாராம். சற்று சத்தத்தை குறைத்து காணாமல் போனவர்கள் காணாமல் கானாமல் போன-துதான்...எனச்சொல்லிவிட்டு வெளிநாட்டு றிப்போட்டர்கள் இங்கு ஓடும் கார் பஸ் மோட்டார் சைக்கிள் இளைஞர்கள் வைத்திருக்கும் நவீன செல்போன்களை படம்பிடித்து ஏதோ பாலும் தேனும் ஓடுவதாக எழுதிக் கொண்டிருக்கினம்



றிப்போட்டர் என அறிந்தாலே சில இடங்களுக்கு விட மாட்டினம். நான் எல்லாம் வீடியோவிலை எடுத்திருக்கிறன் வாற கிழமை கோயில்களிலை நவராத்திரி சரஸ்வதி பூசை விசயதசமி ஏடு தொடக்கல் எல்லாம் படம் எடுத்துக்கொண்டு வாறன்

ஸ்பீக்கரில் வட்ஸ்அப் வரதரின் தகவல் சண்டைக் காலத்தில் பி.பி.சி.யில் கேட்டதுபோல் இருந்தது..
வரதண்ணை கவனம்! எங்கடை வீட்டுப்பக்கம் போனா என செக்கண்ட்புளோர் செல்லம்மா. தொடர்லைன் கட்டாகி விட்டது. எட அங்கை பிக்பொஸ் பாத்தனியோ எண்டு வரதரிட்டை கேக்காம விட்டிட்டன் எண்டா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.

அது சரி உலகண்ணை கடலுக்கை பெற்றோல் கலந்தா மீன் கணவாய் நண்டெல்லாம் எண்னெண்டு உயிர் வாழப்போகுதுகள் என்றபடி பிக் பொஸ் மறுஒளிபரப்பை பார்த்துக்கொண்டிருந்தா ஆட்டிலறி அன்னம்மா.




உலகில் பஞ்சமும் உண்டு. லஞ்சமும் உண்டு.
இதெல்லாம் இறைவன் திருவிளையாடல்.

ஞாபகம் வருதே செப்ரெம்பர் 15..30



19. மறைமலை அடிகளார் நினைவு தினம் (1950)

19. கொடுமுடி கோகுலம் என அழைக்கப்படும் இசைப்பேரறிஞர் கே.பி. சுந்தராம்பாள் நினைவு தினம். (ஒக்ரோபர் 10-1908 _ செப்ரெம்பர் 19-1980)



21. சர்வதேச உலகஅமைதி நாள்.

20. நவராத்திரி விரத ஆரம்பம்.



23. புரட்டாதிச்சனி ஆரம்பம்.

22. இலையுதிர் காலம் ஆரம்பம்

26. கவிமணி தேசிகவினாயகம்பிள்ளை நினைவு தினம்.



26. லெப்டினன் கேனல் தியாகி திலீபன் நினைவுதினம் (1987)

29. விஜயதசமி. வித்யாரம்பம் ..ஏடு தொடக்குதல்.



30. புரட்டாதிசனி 2வது சனி.

# தற்கொலை முடிவல்ல!

அழிவில்லா உயிருக்கு ஆசனம் உடலே
அற்புதமாம் இவ்வுடலை அலைய விடாதே
பழியின்றிக் காத்தல் பல்லோர் கடனே
பற்றுடனே நல்லுணவும் பக்குவமாம் உடற்பயிற்சி
தெளிவாகத் தேர்ந்தறிந்தே தேவைக் கேற்பத்
தெய்வீக நல்லுடலைத் தேயாது காப்பீர்
அழிவுண்டு பிறப்பெடுத்த அத்த னைகளும்
ஆதலால் பேணிடுவீர் அன்பெனும் அருமருந்தால்.

மூப்பொடு பிணியும் முன்னிற்கும் காரணத் தால்
மூளைச் சிதறல்கள் முன்னெழவே
ஆப்பாய் அமைந்திடுமே தற்கொலை எண்ணம்
ஆதலால் சிந்தித்துச் செயற்படுவீர்
காப்பாகக் கொள்வீரே காயமாம் இவ்வுடலை
கட்டுப் பாட்டுடனே காலமெலாம்
பூப்போலப் பாவித்தே பூரணனை உள்ளிருத்தி
பூங்காவ னமாகக் கொள்க.




வறுமையும் நோயும் வாட்டும் பொழுதே
வருத்தும் நோய்கள் வந்திடுமே
சிறுமையாம் தற்கொலை சீறிப் பார்க்கும்
சிறுபொழு ததனைத் தீர்க்கத்
தருணம் பார்த்துத் தக்கன செய்தால்
தாக்கமெல்லாம் தாவி ஓடும்
உறுபொரு ளொன்று உன்னுள் இருப்பதால்
ஊக்கம் ஓங்கும் உயர்வுக்காக

தோல்விகண்டு துவழாதே தொடர்ந்து போராடு
கால்கோள் பதித்திட்டால் கவலையேது
ஆல்போல் வளர்கின்ற அன்பும் அறனும்
ஆற்றலை வளர்த்திடும் அதுவே உண்மை
சால்புசேர் வாழ்வாலே சாதனை செய்யலாம்
சாதனை செய்வோரைச் சற்றுக் கவனி
தோல்வியிலே வெற்றிகண்ட தொய்வில்லாப் பிதாக்கள்
தொடர்ந்திடுவோம் அவர்வழியை தெம்பாங்கு பாடி.

கோளையாய் வாழ்வது கொடுமையிற் கொடிதுத
கோற்றவன் ஆட்சியில் கொள்வோர் கொடுப்போர்
தாளை வணங்கும் தப்புக் கணக்கால்
தன்னிலை இழப்பதும் தக்கோர் நிலையா
வாழவந்த மானிடனே வாழ்வின் பயனை
வரம்புமீறிச் செயற்பட்டால் வாய்ப்புத் தானேது
ஊழலுள்ள இவ்வுலகில் உண்மை யறிந்தே
உயர்வுதராத் தற்கொலையை உதறித் தள்ளு.

ஆக்கம் முருகேசு மயில்வாகனன்




Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
$5 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட
இணைப்புச் சந்தா
$99
மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
$99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
மன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA
CANADA
USA
INCLUDED
TENTKOTTA
EROSNOW
கடம்பன்
மாநகரம்
BAJIRAO MASTANI
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
App Store
Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
App Store
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 931 1745
www.lycatv.tv

Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre




## Serving our Community at:

384 Finley Avenue Ajax, ON L1S 2E3

**Tel: 289-372-3300 /** *info@acvc.info*

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.





FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Best Rates & Advice You Can Trust!
Purchase
PRE-QUALIFIED
Refinance
PRE-APPROVED
Renewal
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca
MORTGAGE ALLIANCE

KOENIG
PROPERTY MANAGEMENT LTD
We take the stress out of managing your investment property.
416.895.5000 • 1.800.909.7209

வீடு வாடகைக்கு பெற்றிட....
Mega Financial Group
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjfinancial.ca
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, Unit 203 Toronto ON M1S 0C2

TOP 100 REALTORS IN CANADA (#68 of 21,000)
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Buy / Sell
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
RE/MAX All Stars Realty Inc.
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி
HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated

Life Insurance
Non Medical
Super Visa
RESP
வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416.716.1540
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, Unit 203 Toronto ON M1S 0C2

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

BUY/ SELL PROPERTIES
$229,900 6 Third St - Kawartha Lakes
$319,900 222 Verdun Rd - Oshawa
$1,268,888 99 Haviland Circ - Brampton
$199,900 1054 Cannon St E Hamilton
$199,900 252 Tragina Ave N - Hamilton
$499,000 3558 Regional Rd 57 Rd - Scugog ON
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com
www.newcondoproject.ca/com
RE/MAX DYNASTY REALTY INC.
Dynasty Realty Inc. Brokerage
Tel: 905.471.0002
8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
Independently owned & operated

Homes by Natheesh
BUY/SELL/RENT/INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
• FREE Home Evaluation
• FREE Home Staging
• FREE Virtual Tour
HomeLife/GTA
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
647.545.8462
SALES REPRESENTATIVE

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned & Operated